DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurence;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA MORTGAGE SOLUTIONS INC.
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1383
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday October 7, 2022

# Toronto Mayor His Worship met with Tamil Community Members in Scarborough

## ரொறன்ரோ மேயர் ஜோன் ரோரி ஸ்காபுறோவில் தமிழ் மக்கள் பிரதிநிதிகளைச் சந்தித்தார்




ஒன்றாரியோ மாகாணத்தின் மிகப்பெரிய நகரமான ரொறன்ரோ நகர பிதா ஜோன் ரோரி அவர்கள் ஸ்காபுறோவில் தமிழ் மக்கள் பிரதிநிதிகளைச் சந்தித்த கலந்துரையாடினார்.

கடந்த சனிக்கிழமையன்று ஸ்காபுறோ நகரில் உள்ள சீனக் கலாச்சார மண்டபத்தில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் கனடிய தமிழர் பேரவை. கனடிய தமிழர் தேசிய அவை மற்றும் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அழைக்கப்பெற்ற பிரதிநிதிகளாக விளங்கினர்.

கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் அவர்களும் அங்கு அழைக்கப்பெற்றிருந்தார்.
அங்கு முதலில் தனது கருத்துக்களை முன்வைத்த ரொறன்ரோ நகர பிதா ஜோன் ரோரி அவர்கள் தான் சில வருடங்களுக்கு முன்னர் இலங்கையின் வடக்கு பகுதிக்கு விஜயம் செய்த போது அங்கு தான் பார்த்து அனுபவித்த துன்பங்கள் அவை தொடர்பான காட்சிகள் மற்றும் மகிழ்ச்சி தரும் விடயங்கள் ஆகியவற்றைப் பகிர்ந்து கொண்டார். தொடர்ந்து தமிழ் மக்கள் மற்றும் தமிழ் வர்த்தக சமூகம் ஆகிய மக்கள் சார்ந்த பிரிவுகள் ரொறன்ரோ நகரில் அபிவிருத்திக்காகவும் வளர்ச்சிக்காகவும் எவ்வாறு இதய சுத்தியோடு செயற்பட்டு வருகின்றார்கள் என்பதை மிகுந்த ஆர்வத்தோடு குறிப்பிட்டார்.

## கனடா உதயன் பத்திரிகையில் வெளிவந்த ‘சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்’ கட்டுரைத் தொடர் சென்னையில் வெளியிடப்பெற்றது



கனடா உதயன் பத்திரிகையில் தொடராக வெளிவந்த ‘வீணைமைந்தன்’ எழுதிய ‘சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்’ சென்னை மணிமேகலை பிரசுரத்தாரால் சென்னையில் வெளியிடப்பெற்றது இந்த வெளியீட்டு நிகழ்வில் கனடாவிலிருந்து எழுத்தாளர் ‘வீணைமைந்தன்’ அவர்களும் கலந்து கொண்டார்.

கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் அவர்களின் ஏற்பாட்டில். நூலாசிரியரும் , கனடா நாட்டில் வசிப்பவருமான வீணை மைந்தன் எழுதிய ‘நடிகர் திலகம் சிவாஜி கணேசனும், தமிழ் சினிமாவும்!’ நூல் வெளியீட்டு விழாவில் இடமிருந்து மணிமேகலைப் பிரசுர மேலாளர் மோகன் ஆசிரியர் குழுத் தலைவர் லேனா தமிழ்வாணன் நூலாசிரியர் மணிமேகலைப் பிரசுர நிர்வாக இயக்குனர் ரவி தமிழ்வாணன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிறாம்ரனிலும் அமைந்துள்ள எமது அடவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East (2nd fl) Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
Mobile: 416.710.9150
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
416 2888882
RE/MAX REALTRON BLUE & FORCE
கவாஸ் . சோம சச்சிதானந்தன்

## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### Cleaning வேலைக்கு ஆட்கள் தேவை

**Keele And hwy7** சந்திப்புக்கு அருகில் **Cleaning** வேலைக்கு ஆட்கள் தேவை
மாலை **3 - 11 (evening)**
இரவு **11 - 7 (midnight)**
**Full time work**

அழைக்க வேண்டியவர் -சங்கர்
**416-305-0264**

### HOUSE for RENT

Ajax இல் Rossland & Church St. க்கு அருகில் 4 Bedroom detached house with 3 washrooms, 3 parking spots & laundry வாடகைக்கு உண்டு. Close to public transportation, Hwy 401 & 407, shops, park & school.

Contact:
(416) 509-7247

### வேலைக்கு ஆட்கள் தேவை

Markham நகரில் Woodbine & 14th Ave. சந்திப்பிற்கு அருகில் அமைந்துள்ள உணவகத்திற்கு kitchen helper மற்றும் dish washer, part-time line cook & South Indian cooks உடனடியாக தேவை. Female cook also needed.

Call Amar:
(416) 988-9518

### வேலைக்கு ஆட்கள் தேவை

**Downtown Toronto** ல் **John and Adelaide** சந்திப்பில் அமைந்துள்ள **Fox on John Restaurant க்கு Line cooks உடனடியாக தேவை.**
**$20/hr + Tips**
**Full Time.**
**Parking Available.**
**தொடர்புகளுக்கு:**
**647-494-5592**

### Tutor Available

Math, Physics and Chemistry ஆகிய பாடங்கள்

Experienced Tutor is available for online tutoring in the subjects of Math, Physics and Chemistry.

For further details contact Sethu:
(416) 858-4259
Sedumadavan@hotmail.com

### Renovation Workers Wanted

**Workers needed for the following jobs:**

- **Drywall Installation**
- **Painting**
- **Hardwood Installation**
- **Bathroom Reno**
- **Kitchen Reno**

**Call - Siva 416-706-8160**

## TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
**Mrs. K. Vasanthakumar** ஐ
தொடர்புகொள்ளவும்

**Tel: (416) 754-4024**

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9






## VOTE FOR

பிரம்ரன் நகரசபைக்கு தேர்ந்தெடுக்கப்படக் கூடிய பிராந்திய வேட்பாளரான
**(Regional Councilor- Ward 7 & 8)**

# சிந்தியா ஸ்ரீ பிரகாஸ்

**(Cynthia Sri Pragash)** அவர்களுக்கு உங்கள் வாக்கை அளியுங்கள்

bramptonmatters@outlook.com
Tel: 416-575-9569

பிரம்ரன் நகரசபையின் 7ம் 8ம் வட்டாரங்களுக்கான பிராந்திய கவுன்சிலருக்கான தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ள இளைய தலைமுறை வேட்பாளரான சிந்தியா ஸ்ரீ பிரகாஸ் அவர்கள் பூக்களின் நகரம் என வர்ணிக்கப்பெறுகின்ற பிரம்ரன் நகரத்தின் கிழக்குப் பகுதியில் வாழ்ந்து வருகின்றார்.

தனது கணவரோடும் இரண்டு பிள்ளைகளோடும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வரும் இவர் தனது 11வது வயதில் கனடாவில் குடியேறியவராவர். இவருக்கு சிறுவயதிலிருந்தே சமூகத்தோடு தன்னை இணைத்துக் கொண்டு வாழ்வதே விருப்பமான ஒன்றாகத் தோன்றியது. ஆதனால் தொண்டராக பல நிறுவனங்களில் பணியாற்றத் தொடங்கினார்.

பின்னர் தகவல் தொழில்நுட்பத்துறையில் பட்டம் பெற்ற சிந்தியா. பல பதவிகளை வகித்து பாராட்டுக்களைப் பெற்றவர். தான் சார்ந்த சமூகத்திற்கு சேவையாற்றும் வகையில் தற்போது. பிரம்ரன் நகரசபையின் பிராந்திய கவுன்சிலர் பதவி ஒன்றுக்கு வேட்பாளராக தன்னை நிறுத்தியுள்ளார். தான் பிராந்திய கவுன்சிலராக தேர்ந்தெடுக்கப்பெற்றால். பல முக்கிய தேவைகளை மக்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்காக அயராது பாடுபடுவேன் என்று தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பிரம்ரன் நகரசபையின் 7ம் 8ம் வட்டாரங்களில் உள்ள மக்களுக்கான பூங்காக்களை மேம்படுத்துதல் மற்றும் சமூகங்கள் சார்ந்த திட்டங்களை நடைமுறைப்படுத்தி பயனுள்ள வகையில் தங்கள் ஓய்வு நேரங்களில் ஈடுபடும் வகையில் பணியாற்றவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

**பிரம்ரன் வாழ் மக்களுக்கு சேவையாற்றக் கூடிய வேட்பாளரான சிந்தியா ஸ்ரீ பிரகாஸ் (Cynthia Sri Pragash- Ward 7-8 Brampton Municipal Council) அவர்களுக்கு உங்கள் வாக்கை அளியுங்கள்**

Canada

We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | உதயன் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# வடக்கையும் கிழக்கையும் குறி வைத்து பாரிய நில அபகரிப்பைச் செய்து வரும் இலங்கையின் பௌத்த சிங்க அரசு

தமிழர் தாயகப் பிரதேசமான வடக்கையும் கிழக்கையும் குறி வைத்து பாரிய நில அபகரிப்பைச் செய்து வரும் இலங்கையின் பௌத்த சிங்க அரசு தொடர்ச்சியாக இந்த கடும் கண்டனத்திற்குரிய காரியங்களை ஆற்றி வருகின்ற வேளையில் தமிழ் மக்களை பொருளாதார ரீதியிலும் உளரீதி-யிலும் தாக்கி வருவதை எத்தனையோ ஆண்டுகளாக எம் மக்கள் பார்த்து வருகின்றார்கள்.

இலங்கையின் பாராளுமன்ற அரசியலும் அந்த அரசியலுக்குள் தாமா-கவே புகுந்து கொண்ட சிங்கள அரசியல்வாதிகளும் திட்டமிட்ட வகையில் வடக்கு கிழக்கின் எல்லைப் பகுதிகள் ஊடாக தமிழர்களின் நில அபகரிப்பை செய்து வருவதன் மூலம் ஒரே கல்லில் பல காய்களை விழுத்தும் கபடத் தனத்தை அரங்கேற்றி வருகின்றனர்.

இவ்வாறான கபடத்தனத்தை தொடர்ச்சியாக மேற்கொள்ளும் வகையில் திட்டமிட்டு செயற்படும் இவர்கள் தமிழ் அரசியல்வாதிகளை தங்கள் பக்கம் இழுத்துச் சென்று அவர்களுக்கு சலுகைகளை வழங்கி அவர்கள் மௌனிகளாக தங்கள் அரசியல் பதவிகளில் அமர்ந்திருக்க, அவர்களை புறந்தள்ளவிட்டு தமிழர் நிலங்களை அபகரித்தும் அங்கிருந்து தமிழ் மக்களை விரட்டியடித்தும் அவர்களின் வாழ்க்கை தரத்தையும் பண்பாட்டுக் கோலங்களையும் சிதைக்கும் வகையில் செயற்படுகின்றனர். இதனால் நிலங்களை மாத்திரமல்ல கலாச்சார மரபுகளையும் வழிபாட்டு முறைகளையும் இழந்தவர்களாக எமது மக்கள் நிலை குலைந்து போவதை நாம் அனைவரும் பார்வையாளர்களாக மட்டும் இருந்து இழப்புக்களைச் சந்திக்கின்றோம்.

இவ்வாறாக திட்டமிட்ட காணி அபகரிப்பு மற்றும் தமிழர்களின் கலாச்சாரத்தை அழிக்கும் திடடங்களில் தற்போது குறிவைக்கப்படும் திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் காணிகளில் பெரும்பான்மை இனத்தவர்களுக்காக வர்த்தக நிலையங்களை அமைத்து வரும் செயலை குறிப்பிடலாம். திருகோணமலை மாவட்டத்திலே திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் தொல்லியல் திணைக்களம் என்பவற்றின் மூலம் தமிழ் மக்களின் புனித வழிபாட்டுத் தலத்தின் புனிதத்தைக் கெடுப்பதற்குரிய நடடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை இந்த செயற்பாடுகள் மோசமான நிலைக்கு சிங்கள இனவாதிக-ளால் நடத்தப்படுகின்றன என்பது புலனாகின்றது.

இவ்வாறான நிலையில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக தொடர்ந்து பதவியில் அமர்ந்திருக்கும் சம்பந்தர் அவர்கள் இனியும் பதவியைத் துறப்பது தவிர வேறு ஒன்றையும் செய்ய வல்லவர் அலல என்பதே தற்போது நிதர்சனமாகத் தெரியும் உண்மையாகும்.

# புத்தளத்தில் கடலாமையைக் கொன்று விற்பனை செய்ய முயற்சித்த மூவர் கைது

வண்ணாத்திவில்லு சேராக்குழி கடற்கரையோர பகுதியில் கடலா-மையைக் கொன்று இறைச்சியை விற்பனை செய்வதற்கு கொண்டு செல்ல முற்பட்ட மூவர் வண்ணாத்திவில்லு வனஜீவராசிகள் திணைக்களத்தினரினால் நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.
இவ்வாறு கடலாமையை இறைச்சிக்காக கொள்ளப்படுவதாக புத்தளம் பிராந்திய வனஜீவராசிகள் திணைக்கள உதவி ஆனையாளர் எரந்த கமகேவுக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய வண்ணாத்திவில்லு வனஜீவராசிகள் திணைக்கள வலய உதவி பொறுப்பதிகாரி எம்.பி.எல்.எஸ் மாரசிங்க தலைமையில் குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

குறித்த சுற்றிவளைப்பில் 21 கிலோ கிராம் கடலாமை இறைச்சி மற்றும் கடல் ஆமையின் ஓடு 361 கடல் ஆமை முட்டைகள் மற்றும் இறைச்சிக்காக பயன்படுத்திய கத்திகள் ஆகியன கைப்பற்றப்பட்டதாக வண்ணாத்திவில்லு வனஜீவராசிகள் வலய உதவி பொறுப்பதிகாரி எம்.பி.எல்.எஸ் மாரசிங்க தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரும் சேராக்குழி பகுதியை-ச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக அவர் இதன்போது தெரிவித்தார்.
கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களுடன் கைப்பற்றப்பட்ட இறைச்சி மற்றும் ஆமையின் முட்டைகள் இறைச்சிக்காக பயன்படுத்திய கத்திகள் ஆகியவற்றை புத்தளம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# கனடா Unions Sports Federation of Canada அமைப்பு நடத்திய வருடாந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு







கிறிக்கெட் விளையாட்டை முக்கியமாகக் கொண்டு கனடாவில் வெற்றிகரமாக இயங்கிவரும் **Unions Sports Federation of Canada** விளையாட்டு அமைப்பு நடத்திய வருடாந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று மாலை ஸ்காபுறோவில் அமைந்துள்ள விழா மண்டபம் ஒன்றில் நடைபெற்றது.
கனடாவில் இயங்கிவரும் சுமார் 21 கிறிக்கெட்ட விளையாட்டுக் கழகங்கள் இந்த சுற்றுப் போட்டியில் பங்குபற்றின.
இந்த சுற்றுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றியீட்டிய கிறிக் கெட் கழகங்களுக்கான வெற்றிக் கிண்ணங்களையும் சான்றிதழ்களையும் விழாவிற்கு முக்கிய அனுசரனையாளர்களான திருவாளர்கள் சங்கர் நல்லதம்பி மற்றும் அரவிந்த் ஆகியோர் வெற்றியாளர்களுக்கு வழங்கிக் கௌரவித்தனர்.
மார்க்கம் நகரபிதா பிராங்க் ஸ்கெப்பற்றியும் இந்த வெற்றி விழாவில் கலந்து கொண்டு கேடயங்களை வழ்ஙகிக் கௌரவித்தனர்.

# கனடா— நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பின் 25வது ஆண்டு விழா ஒக்டோபர் 16ம் திகதி நடைபெறுகிறது

நாதஸ்வர வித்துவான் ஆ. முருகதாஸ் அவர்களின் நிர்வாகத்தில் இயங்கும் கனடா- நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பின் 25வது ஆண்டு விழா ஒக்டோபர் 16ம் திகதி நடைபெறுகிறது என்ற விளம்பரம் உள்ளே பிரசுரமாகியுள்ளது.

**10865 Bayview Avenue** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள றிச்மென்ட்ஹில் இந்து ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த ஆண்டு விழாவில் நாதஸ்வர தவில் இசை மற்றும் வாத்திய இசைக் கருவிக-ளில் வாசித்தல் அத்துடன் தமிழிசைப் பாடல்கள் ஆகிய நிகழ்ச்சிகள இடம்பெறவுள்ளன. மேலதிக விபரங்களுக்கு விளம்பரத்தைப் பார்க்கவும். அல்லது 416 420 1309 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.

# "திருகோணமலை மாவட்டத்தைக் குறிவைத்து சிங்களப் பேரினவாதம் தமது பணிகளை மிக வேகமாக ஆரம்பித்துள்ளது"

## — பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன்




"திருகோணமலை மாவட்டத்தைக் குறிவைத்து சிங்களப் பேரினவாதம் தமது பணிகளை மிக வேகமாக ஆரம்பித்துள்ளது. தொல்லியல், வன-பரிபாலனம் எனத் தமிழர்களின் பாரம்பரிய நிலங்கள் திட்டமிட்டு கூறு போடுகின்ற நிலைமையே நடந்து கொண்டிருக்கின்றது" இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் அவர்கள்.

திருகோணமலையில் இந்திய உயர்ஸ்தானிகருடன் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
இலங்கை - இந்தியா என்கின்ற நட்புறவோடு நீண்ட காலமாக இலங்கைக்குப் பல உதவிகளை வழங்கிய நாடாக அண்மையில் உள்ள நாடு என்ற அடிப்படையில் இந்தியா அமைந்துள்ளது.
இந்த நாட்டிலே தமிழர்களாகிய நாங்கள் எங்களுடைய கலை கலாசார அம்சங்களோடு வாழ வேண்டும் என்று நினைக்கின்றோம் ஆனால் திட்டமிட்டு எம்மினத்தின மீது சிங்களப் போனவாதம் திணிப்புகளைச் செய்து கொண்டிருக்கின்றது.

குறிப்பாக திருகோணமலை மாவட்டத்திலே திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் தொல்லியல் திணைக்களம் என்பவற்றின் மூலம் எமது புனித தலத்தின் புனிதத்தைக் கெடுப்பதற்குரிய நடடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் இந்திய உயர்ஸ்தானிகரின் திருகோணமலை மாவட்ட வருகை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது.

அது மாத்திரமல்லாமல் திரியாய் என்று சொல்லப்படுகின்ற கிராமத்தை மையமாக வைத்து தொல்லியல் திணைக்களம், வனபரிபாலன இலாகா போன்ற திணைக்களங்களூடாகத் தமிழர்களின் பாரம்பரிய நிலங்கள் திட்டமிட்டு கூறு போடுகின்ற நிலைமையே நடந்து கொண்டிருக்கின்றது. மிக வேகமாக இந்த மாவட்டத்தைக் குறி வைத்து சிங்களப் பேரினவாதம் தமது பணிகளை ஆரம்பித்துள்ளது. இதனை இந்த நாட்டின் நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கின்ற செயற்பாடாகவே நாங்கள் கருதுகின்றோம். இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்து இந்த நாட்டிலே நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது.

நாட்டின் புதிய ஜனாதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்ட போதும் ராஜபக்ச காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அந்த சிங்கள அரச தீவ-ிரவாத செயற்பாடு மிகவும் மோசமாக தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அவர் பதவிக்கு வந்தபோது இந்த நாட்டில் சமாதானம், சமத்துவம், சகோதரத்துவத்தை நிலைநாட்ட வேண்டும் என்ற அடிப்படையில் பேசியிருந்தாலும் அதற்கு மாறான செயற்பாடுகளே எமது தமிழர் பிரதேசத்திலே நடந்து கொண்டிருக்கின்றன.

எனவே இந்த நாட்டில் சமாதானம் சமத்துவம், சகோதரத்துவம் நிலைநாட்டப்பட வேண்டுமானால் தமிழர் பிரதேசங்களிலே இடம்பெறுகின்ற நில ஆக்கிரமிப்புகள், மத ரீதியான அடக்குமுறை என்பன நிறுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் மன்னாரிற்கு விஜயம்!!

மன்னாரிற்கு விஜயம் மேற்கொண்டு வருகை தந்திருந்த இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் சரா ஹுல்ரன் 3ம் திகதி திங்கட்கிழமை (மாலை மன்னார் மாவட்ட செயலகத்திற்கு விஜயம் செய்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. அ.ஸ்ரான்லி டிமேலுடன் விசேட கலந்துரையாடலை மேற்கொண்டார்.

குறித்த கலந்துரையாடலின் போது மன்னார் மாவட்ட நிலவரம் தொடர்பாக அரசாங்க அதிபரினால் விளக்கமளிக்கப்பட்டது டன் அரசாங்கத்தினால் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்திப் பணிகள் மாவட்ட மக்களுக்கு தேவைப்பாடாக உள்ள விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.







அத்தோடு மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புதல், நிலையான வாழ்வாதார வழிவகைகள் மற்றும் கிராம மட்ட உட்கட்டமைப்பு விடயங்கள் உள்ளிட்ட மேலும் பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடி உள்ளதுடன், தூதுவரை கௌரவிக்கும் முகமாக மாவட்ட அரசாங்க அதிபரினால் நினைவுப் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

குறித்த சந்திப்பில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் பிரதம உள்ளக கணக்காய்வாளர் மூவரும் கலந்துகொண்டிருந்தனர்.

# சாய்ந்தமருது கடற்கரையில் கரை ஒதுங்கிய சடலம்



சாய்ந்தமருது கடற்கரை பிரதேசத்தில் மீட்கப்பட்ட பெண் ஒருவரின் சடலம் தொடர்பில் பொலிஸார் பொதுமக்களின் ஒத்துழைப்பினை கோரியிருந்த நிலையில் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ் பிரிவில் திங்கட்கிழமை (3) குறித்த சடலம் கடலில் மிதந்த நிலையில் கடற் படையினரின் உதவியுடன் சாய்ந்தமருது பொலிஸார் மீட்டிருந்தனர்.

இந்நிலையில் குறித்த சடலமானது இனங்காணப்படாதிருந்த நிலையில் நேற்று பொதுமக்களின் உதவியை கோரி இருந்தனர். அத்துடன் ஊடகங்கள் பலவற்றிலும் செய்திகள் பிரசுரமாகி இருந்தன.

பொதுமக்கள் வழங்கிய தகவலுக்கு அமைய ஸ்தலத்துக்கு வருகை தந்த பொலிஸார் சடலம் குறித்து ஆரம்பக்கட்ட விசாரணைகளை முன்னெடுத்திருந்த நிலையில் சடலம் அடையாளம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதனை தொடர்ந்து பெண்ணின் உறவினர்கள் சடலத்தை அடையாளம் காட்டியதுடன் அம்பாறை மாவட்ட காரைதீவு பகுதியை சேர்ந்த 53 வயதுடைய ஆறுமுகம் வனிதா என்ற ஒரு பிள்ளையின் தாயார் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் ஓர் ஆசிரியர் எனவும் இம் மரணம், தற்கொலையா அல்லது கொலையா என்ற கோணத்தில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த சடலம் பிரேத பரிசோதனைக்காக கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பாதிக்கப்பட்ட பூநகரி பிரதேச கிராஞ்சி சிவபுர மீனவர்கள் யாழ் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

பாதிக்கப்பட் ட பூநகரி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கிராஞ்சி சிவபுர மீனவர்கள் இன்றைய செவ்வாய்கிழமை (4) காலை இலங்கை மனித உரிமை ஆணைக்குழு யாழ் பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கிராஞ்சி சிவபுர மீனவ சமூகங்கள் தாங்கள் கடந்த பல நாட்களாக சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட கடல் அட்டை பண்ணைகளால் சிறு மீன்பிடி கரையோர தொழிலாளர்கள் தமது பாரம்பரிய மீன்பிடி தொழிலை தொடர்ந்து முன்னெடுக்க முடியாது இருப்பதாக தெரிவித்து கடந்த 4 நாட்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில் தமது தொழிலுக்கு இடையூறாக தமது கடல் கரையோரம் முழுவதும் சட்டவிரோதமாக பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் இவற்றினை அரச அதிகாரிகள் பொறுப்பு வாய்ந்த திணைக்களங்கள் எந்தவித அக்கறையும் கொள்ளவில்லை எனவும் பாதிக்கப்பட்ட மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மீனவர்கள் சிலர் யாழ் மாவட்ட பிராந்திய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் காரியாலயத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளனர்.

தொடர்ச்சியாக போராட்டத்தை மேற்கொண்டு வருகின்ற நிலையில் அதிகாரிகள் எவரும் தமது இடத்திற்கு வந்து உரிய தீர்வை பெற்றுத் தர முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. என பாதிக்கப்பட்ட மீனவ குடும்பங்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கிராஞ்சி இலவன்குடா கடற்பகுதியில் கடலட்டை பண்ணை அமைக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இலவன் குடா கடற்பரப்பில், பெண் தலைமைத்துவ குடும்பங்கள் உட்பட கடற்தொழிலாளர்கள் சிறகு வலை தொழிலின் ஊடாக இறால், நண்டு, மீன் போன்றவற்றை பிடிப்பதை அன்றாட வாழ்வாதார தொழிலாக பல ஆண்டுகளாக செய்து வருகின்றனர்.

இந்நிலையில் அவர்களின் வாழ்வாதாரத்தை சீர்குலைக்கும் வகையில் தற்போது கடலட்டை பண்ணைகள் அமைக்கும் முயற்சிகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன.

இதனை தொடர்ந்து கடற்தொழிலாளர்கள் குறித்த உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இது தொடர்பில் சாதகமான முடிவை சம்மந்தப்பட்டவர்கள் வழங்கும் வரை தாம் போராட்டத்தை கைவிடப் போவதில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் மனிதாபிமான பணியில் ஈடுபட்டு வருகின்ற மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பிரதிநிதிகள் சனிக்கிழமை (1) மதியம் குறித்த உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மீனவர்களை நேரடியாக சந்தித்து கலந்துரையாடினர்.

இதன் போது குறித்த நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோஇமற்றும் பணியாளர்களும் கலந்து கொண்டிருந்தனர். இதன் போது குறித்த மீனவர்களின் பிரச்சினைகளை குறித்த குழுவினர் கேட்டறிந்தனர்.

இந்த நிலையில் தமக்காக ஒரு அமைப்பு ஆதரவு வழங்கி வருகின்ற நிலையில் தமது உரிமைகளை வென்றெடுக்க உணவு தவிர்ப்பு போராட்டத்தை கைவிட்டு தமது போராட்ட வடிவை மாற்றி சுழற்சி முறையில் போராட்டத்தை மேற்கொள்ள தீர்மானித்து உணவு தவிர்ப்பு போராட்டத்தை கைவிட்டனர்.



இந்த நிலையில் 5 வது நாளாக தமது போராட்டத்தை குறித்த மீனவர்கள் முன்னெடுத்து வருகின்ற நிலையில் மீனவர்களின் பிரதிநிதிகள் சார்பாக ஒரு குழுவினர் செவ்வாய்க்கிழமை (4) காலை இலங்கை மனித உரிமை ஆணைக்குழு யாழ் பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**-மன்னார் நிருபர்**

# வடமாகாண மட்ட மெய்வல்லுனர் திறனாய்வு போட்டி — 2022

## 16 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு உயரம் பாய்தல் போட்டியில் மன்/உயிர்த்தராசன்குளம் றோ.க.த.க பாடசாலை மாணவன் செல்வன். சி.விஜய் தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு




யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்ற வடமாகாண மட்ட மெய்வல்லுனர் திறனாய்வு போட்டியில் 16 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு உயரம் பாய்தல் போட்டியில் மன்/உயிர்த்தராசன்குளம் றோ.க.த.க பாடசாலை மாணவன் செல்வன். சி.விஜய் தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டு பாடசாலைக்கும் மன்னார் கல்வி வலயத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இவரை அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் யாவரும் பாராட்டி மகிழ்கின்றனர். இவருக்கு பயிற்சி அளித்த பயிற்றுவிப்பாளர் திரு. M.F. ரொசேன் செரூபா பீரிஸ் அவர்களையும் அதற்கு உற்சாகப்படுத்தி வழி நடாத்திய பாடசாலையின் அதிபர் T. ஆனந்தன் (SLPS-2) அவர்களையும் மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் மற்றும் விளையாட்டுத்துறை பிரதிக்கல்விப்பணிப்பாளர் அவர்களையும் பாராட்டி மகிழ்கின்றது.

நீண்ட காலத்தின் பின்/உயிர்த்தராசன்குளம் றோ.க.த.க பாடசாலையிலிருந்து தேசிய மட்ட போட்டிக்கு இவர் தெரிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# அனுராதபுரத்திற்கு அருகில் பொலிஸார் நடத்திய துப்பாக்கி பிரயோகம் — குறி தவறியதில் பயணித்துக் கொண்டிருந்த யுவதி பலி

பொலிஸார் நடத்திய துப்பாக்கி பிரயோகம் குறி தவறியதில் அனுராதபுரத்தில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற பயணிகள் பேருந்தில் பயணித்துக் கொண்டிருந்த யுவதி கொல்லப்பட்டுள்ளார். இந்த சம்பவம் 2ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை தங்கோவிட்ட பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

தங்கோவிட்ட பிரதேசத்தில் கொள்ளை சம்பவம் ஒன்றில் ஈடுபட சென்றிருந்த கொள்ளையர்கள் சிலரை இலக்கு வைத்து பொலிஸார் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். பொலிஸாரின் குறி தவறியதில் பேருந்தில் பயணித்த யுவதி துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கொல்லப்பட்டுள்ளார்.

கொள்ளையர்கள் சிலர் தங்கோவிட்டவில் உள்ள மதுபான விற்பனை நிலையத்தில் கொள்ளையில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து அங்கு சென்ற பொலிஸார் கொள்ளையர்களை முற்றுகையிட்ட போது, கொள்ளையர்கள் தாம் வந்த காரில் தப்பிச் சென்றுள்ளனர். பொலிஸார் கொள்ளையர்களை பின் தொடர்ந்து சென்று துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இதன் போது ஒரு துப்பாக்கி வேட்டு தவறுதலாக அனுராதபுரத்தில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற பேருந்தில் பட்டுள்ளது. குறி தவறிய இந்த துப்பாக்கி பிரயோகத்திற்கு இலக்காகி, அனுராதபுரத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த காலி பிரதேசத்தை சேர்ந்த யுவதி உயிரிழந்துள்ளார்.

கொள்ளையர்கள் தப்பிச் சென்ற காரை அவர்கள் வத்தளை பிரதேசத்தில் கைவிட்டு சென்றுள்ளதுடன் அதனை பொலிஸார் கைப்பற்றி உள்ளனர்.



இதேவேளை சம்பவத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான இரண்டு கொள்ளையர்கள் ராகமை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நடத்தப்பட்டு வருகின்றன.



# பூநகரி — கிராஞ்சி இலவன் குடா கடற்பகுதியில் சிறகு வலை தொழிலில் ஈடுபட்டு வரும் கடற்தொழிலாளர்கள் 3 வது நாளாக போராட்டம்

உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட பூநகரி கடற்தொழிலாளர்கள் தமது போராட்ட வடிவத்தை மாற்றியமைத்து 2ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மூன்றாவது நாளாகவும் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

பூநகரி - கிராஞ்சி இலவன் குடா கடல் பகுதியில் பாரம்பரியமாக சிறகு வலை தொழிலில் ஈடுபட்டுவரும் கடற்தொழிலாளர்கள் கடந்த வெள்ளிக்கிழமை மாலை முதல் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

கிராஞ்சி இலவன்குடா கடற்பகுதியில் கடலட்டை பண்ணை அமைக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இலவன் குடா கடற்பரப்பில், பெண் தலைமைத்துவ குடும்பங்கள் உட்பட கடற்தொழிலாளர்கள், சிறகு வலை தொழிலின் ஊடாக இறால், நண்டு, மீன் போன்றவற்றை பிடிப்பதை அன்றாட வாழ்வாதார தொழிலாக பல ஆண்டுகளாக செய்து வருகின்றனர்.

இந்நிலையில் அவர்களின் வாழ்வாதாரத்தை சீர்குலைக்கும் வகையில் தற்போது கடலட்டை பண்ணைகள் அமைக்கும் முயற்சிகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. இதனை தொடர்ந்து கடற்தொழிலாளர்கள் குறித்த உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் சாதகமான முடிவை சம்மந்தப்பட்டவர்கள் வழங்கும் வரை தாம் போராட்டத்தை கைவிடப் போவதில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் மீனவர்கள் உள்ளடங்களாக மக்கள் முகம் கொடுத்து வரும் பல்வேறு பிரச்சனைகளுக்கு கை கொடுத்து மனிதாபிமான பணியில் ஈடுபட்டு வருகின்ற மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பிரதிநிதிகள் சனிக்கிழமை (1) மதியம் குறித்த உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மீனவர்களை நேரடியாக சந்தித்து கலந்துரையாடினர்.





இதன் போது குறித்த நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோஇமற்றும் பணியாளர்களும் கலந்து கொண்டிருந்தனர். இதன் போது குறித்த மீனவர்களின் பிரச்சினைகளை குறித்த குழுவினர் கேட்டறிந்தனர்.

இந்த நிலையில் தமக்காக ஒரு அமைப்பு ஆதரவு வழங்கி வருகின்ற நிலையில் தமது உரிமைகளை வென்றெடுக்க உணவு தவிர்ப்பு போராட்டத்தை கைவிட்டு,தமது போராட்ட வடிவை மாற்றி சுழற்சி முறையில் போராட்டத்தை மேற்கொள்ள தீர்மானித்து உணவு தவிர்ப்பு போராட்டத்தை கைவிட்டனர்.

இந்த நிலையில் 3வது ஞாயிற்றுக்கிழமை (2) தமது போராட்டத்தை குறித்த மீனவர்கள் முன்னெடுத்தனர்.

**- மன்னார் நிருபர்**


# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.

MORTGAGE ALLIANCE
RIGHT BROKER = RIGHT MORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் ஊடகவியலாளர் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப் பதக்கம் இவ் ஆண்டு செல்வராஜா ரமேஸ் மதுசங்கவிற்கு

யாழ் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் ஊடகவியலாளர் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப் பதக்கம் இவ் ஆண்டு செல்வராஜா ரமேஸ் மதுசங்கவிற்கு வழங்கப்படுகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் பொதுப் பட்டமளிப்பு விழாவின்போது, ஊடகத்துறையில் சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவருக்கு வழங்கப்படும் "யாழ் பல்கலைக்கழக ஊடக மாணவனும் ஊடகவியலாளருமான அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப்பதக்கம்" இவ் ஆண்டு செல்வராஜா ரமேஸ் மதுசங்கவிற்கு வழங்கப்படுகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 36ஆவது பட்டமளிப்பு விழா 2022 ஐப்பசி 06,07,08 ஆம் திகதிகளில் நடைபெறுகின்றது.

07.10.2022 அன்று நடைபெறும் அமர்வின் போதே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக கற்கைகள் துறையில் ஊடகவியலில் திறமைச் சித்தி பெற்ற மாணவனான புத்தளம் மாவட்டத்தில் கொட்டகை என்னும் கிராமத்தை சேர்ந்த சேர்ந்த செல்வராஜா ரமேஸ் மதுசங்கவிற்கு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக மாணவனும் ஊடகவியலாளருமான அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப் பதக்கம் வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஊடக மாணவனாகப் படித்துக் கொண்டு ஊடகவியலாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த நிலக்சன் 2007 ஆம் ஆண்டு ஆவணி மாதம் முதலாம் திகதி அதிகாலை 5 மணியளவில் அவரது வீட்டில் வைத்து பெற்றோர் முன்னிலையில் ஆயுததாரிகளால் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

நிலக்சனது ஞாபகார்த்தமாக அவருடன் யாழ் இந்துக்கல்லூரியில் ஒன்றாய்க் கற்ற 2004 உயர்தர மாணவர்களால் முன்னெடுக்கப்படும் "நிலா நிதியம்" யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவின் போது ஊடகத்துறையில் சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவருக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் தங்கப்பதக்கத்தை அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்தமாக வழங்க நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

இந்நிதியத்தின் அங்குரார்ப்பண சான்றிதழ் 2017 ஆம் ஆண்டு நடைபெற்ற நிலக்சனின் 10ஆம் ஆண்டு நினைவேந்தலின் போது யாழ் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதியிடம் கையளிக்கப்பட்டு பின்னர் யாழ் பல்கலைகழகத்திடம் நிதி கையளிக்கப்பட்டது.



இதன்மூலம் அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப் பதக்கம் கடந்த நான்கு ஆண்டுகளாக வழங்கப்பட்டு வருகின்றது.

கடந்த ஆண்டு மொனராகலை மாவட்டத்தில் மரகலை தோட்டம் என்னும் கிராமத்தைச் சேர்ந்த அமரர் செல்வி நவரத்னம் தில்காந்திக்கு ஏகாந்த நிலையில் வழகப்பட்டது.

முன்னய ஆண்டுகளில் மாத்தளை மாவட்டத்தில் சுதுகங்கை என்னும் கிராமத்தைச் சேர்ந்த மாணவியான செல்வி முனியப்பன் துலாபரணி, யாழ்ப்பாணம் உடுவிலைச்சேர்ந்த மாணவியான செல்வி அன்ட்கேசிகா லோறன்ஸ் ராஜ்குமார், யாழ்ப்பாணம் கோண்டாவிலைச் சேர்ந்த தினேஸ் விஜயதர்சினி ஆகியோர் பெற்றுக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப் பதக்கத்தினை இவ் ஆண்டு பெற்றுக்கொள்ளும் செல்வராஜா ரமேஸ் மதுசங்கவுடனான கருத்துப் பகிர்விலிருந்து,



எனது பெயர் செல்வராஜா ரமேஸ் மதுசங்க. நான் புத்தளம் மாவட்டத்தில் கொட்டகை என்னும் கிராமத்தை பிறப்படமாகக் கொண்டுள்ளேன். நான் எனது ஆரம்பக் கல்வியை சிலா/குசலை தமிழ் வித்தியாலத்தில் தரம் ஒன்று தொடக்கம் தரம் எட்டு வரை பயின்று வந்தேன்.

பின் கல்விப் பொதுத்தராதர சாதாரண பரீட்சையையும் உயர்தர பரீட்சையையும் சிலா/ சென. பெர்னதேத் தமிழ் மகா வித்தியாலயத்திலும் கற்றேன் உயர்தர பயிற்சியில் சித்தியடைந்த பின் பல்கலைக்கழக அனுமதி கிடைத்தது.

எனக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பை தொடர்வதற்கான வாய்ப்பு கிடைத்தது. பல்கலைக்கழகத்தில் முதலாம் வருடத்தில் ஊடகக் கற்கைகள் மற்றும் உளவியலையும் பயின்று வந்தேன் இரண்டாம் வருடத்தில் இருந்து ஊடகக் கற்கைகள் துறையை சிறப்பு கலையாக தெரிவு செய்தேன்.

ஊடகக் கற்கள் துறையை சிறப்பு கலையாக தெரிவு செய்யும் போது சிறு அச்சம் என்னில் ஏற்பட்டது.

பின் விரிவுரையாளர்களின் கற்பித்தல் நுட்பங்களும், எமக்கான வழிகாட்டல்களை வழங்கி அனுசரித்ததால் விருப்பத்துடன் கற்பதற்கான ஆர்வம் என்னுள் ஏற்பட்டது.

ஊடகக் கற்கள் துறையில் பாடவிதானத்தோடு செயல்முறை ரீதியான கற்கையும் காணப்பட்டது. கமராவை பயன்படுத்தி புகைப்படம் எடுத்தல், சஞ்சிகைக்கு ஆக்கங்களை எழுதுதல், ஆவணப்படம் தயாரித்தல், பத்திரிகைகளுக்கு கட்டுரைகள் எழுதுதல் போன்றவற்றை அனுபவரீதியாக செயல்படுத்துவதற்கான தளத்தை ஊடகக் கற்கைகள் துறையால் பெற்றுக் கொண்டேன்.

அத்தோடு இறுதியாண்டில் தொழில்துறை சார்ந்த பயிற்சி பெற்றுக் கொண்டதும் மிகப்பெரிய வாய்ப்பு இன்றே கூறலாம்.

விரிவுரைகளுக்கு அப்பால் ஊடகத்துறை சார்ந்தவர்களின் அனுபவப்பகிர்வுகள் மற்றும் ஊடகப் பயிற்சி கருத்தரங்குகளில் பங்கு பற்றியமை போன்றனவும் எமக்கான மேலதிக அறிவையும் அனுபவத்தையும் பெற்று தந்தது.

தற்போது ஊடகக் கற்கைகள் துறையை சிறப்புக் கலையாகக் கொண்ட பலர் இன்றும் பல ஊடக நிறுவனங்களில் பணிபுரிந்து வருகின்றனர்.

இதே போல் நானும் ஊடகத் துறையில் பணியாற்ற வேண்டும் என்ற ஆர்வம் என்னுள் இருக்கின்றது.

எனவே எமக்கான வழிகாட்டிகளாக நின்ற ஊடகக் கற்கைகள் துறையின் துறை தலைவர் பேராசிரியர் சி. ரகுராம் அவர்களுக்கும் விரிவுரையாளர்களான திருமதி. பூங்குழலி சிறீ சங்கீரத்தனன், திரு.யூட் தினேஸ் கொடுதோர் மற்றும் திருமதி அனுதர்ஷி கபிலன் ஆகியோருக்கும் எனக்கு கற்ற செயற்பாடுகளை முன்னெடுக்க உதவியாய் இருந்த எனது குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகளை கூற கடமைப்பட்டுள்ளேன்.

அத்தோடு அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்தமாக வழங்கப்படுகின்ற தங்கப் பதக்கத்தினை எனக்களித்து கௌரவிக்கும் நிலா நிதியம் குழுவினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**- ஜெகதீஸ்வரன் டிக்ஷாந்த்**


## ஸ்ரீ வெங்கடேஸ்வரா திருமண மாலை



**முன்கட்டணம் 30 டாலர்கள் மட்டுமே**

### கனடாவில் பட்டதாரிப் பெண்கள்

பிறந்த திகதி ----------------------

24.01.1992 - உத்திரம், பட்டதாரி of U.E.T.H.R
15.05.1987 - கேட்டை, B.Sc, Working
15.06.1985 - கார்த்திகை - 2, C.G.A – C.P.A
05.02.1995 - அச்சுவினி – I.T. – R.C
29.06.1994 - பூரட்டாதி - 3, பட்டதாரி, REVENUE CANADA
13.01.1990 - ஆயிலியம், Centennial College
22.09.1991 - கேட்டை, சதயம் - பட்டதாரி. (மொன்றியல்)
09.10.1994 - கேட்டை, Centennial College, Lexus Company
01.06.1992 - ரோகிணி பட்டதாரி, 2, T.D. Bank
13.12.1993 - ஆயிலியம் - பட்டதாரி, Works in H.R
15.06.1993 - ரேவதி, பட்டதாரி, Research Officer
28.12.1991 - அத்தம், பட்டதாரி, Nurse, Toronto
15.02.1992 - புனர்பூசம் பட்டதாரி, TTC – HR
16.02.1988 - உத்திராடம் 4, A.C, College
27.10.1991 - மிருகசீரிடம் 3, Business Administration Degree
28.09.1994 - திருவாதிரை, பட்டதாரி, Registered Nurse
24.01.1989 - பூரம் B.Sc. Registered Nurse

### கனடாவில் பட்டதாரிப் ஆண்கள்

பிறந்த திகதி ----------------------

27.01.1989 – அத்தம், பட்டதாரி, CIBC, Analyst
13.02.1994 – உத்திரட்டாதி, பட்டதாரி, மேலோங்குயோர்.
19.07.1991 – சுவாதி, Driver, Restaurant Manager
05.06.2990 – சுவாதி, பட்டதாரி, M.B.A. Shoppers Manager
15.02.1987 – பூரம், பட்டதாரி, City Hall – Government

### இலங்கை - பெண்கள்

பிறந்த திகதி ----------------------

01.11.1999 - ஆயிலியம்
05.07.1991 - பூசம், Nurse–மன்னார், அடம்பன் Experience 5 years
07.09.1988 - பூசம், A/L, மன்னாரில் வேலை செய்கின்றார் அடம்பன், வவுனியா
30.01.1993 - அஸ்வினி, கிறிஸ் நாட்டில் 7 வருடங்கள் இருந்தவர்
30.05.2002 - பூராடம் - பெண், GINA, A/L, working in US Company.
11.10.1996 - திருவாதிரை B.Sc. Math Government Employee
21.11.1993 - R-C-H-N-D in Accounting, IELTS Pass,
ED.GUD ENGLAND நம்மவர்கள் இந்தியாவில்
03.07.2002 - ரேவதி 3, O/L Looking for job

**தொடர்புகளுக்கு- 647-298-3534**

**<u>மன்னாரில் காணி விற்பனைக்குண்டு</u>**

**மன்னார் To தலைமன்னார் ரூரிஸ்ட் இடம். பேசாலை தொடக்கம் தலைமன்னார் வரை 500 - 400 - 300 - 200 - 100 - 75 - 60 - 40, 31 - 28 - 26 - 19 ஏக்கர்கள் அளவுள்ள காணிகள் விற்பனைக்கு எங்கள் வசம் உள்ளன. இதற்குள் லட்சக்கணக்கான பனை மரங்களுண்டு. தொடர்பிற்கு ராம் அலக்ஷாண்டர் பாக்கியம் - பேசாலை**
Viber – 647 389 4130 WhatsApp – 416 720 8975
கனடா தொலைபேசி- 647 298 3534 இலங்கை - 01194 756626005, 01194 764417529

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கிளிநொச்சியில் வடக்கு – கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வை கோரும் பயணத்தில் 66 வது நாள் கவனயீர்ப்பு நிகழ்வு

வடக்கு-கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வை கோரும் பயணத்தில் 66 வது நாள் கவனயீர்ப்பு நிகழ்வு புதன்கிழமை (5) காலை 11 மணியளவில் கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரிப் பிரதேசத்தின் முட்கொம்பன் சந்தை வீதியில் இடம் பெற்றது.

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற கவனயீர்ப்பு போராட்டத்தில் கிராம மக்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கள், இளைஞர்கள், விவசாயிகள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது கிராம மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சனைகளை அவர்கள் முன் வைத்தனர்.








இளைஞர்கள், பொது மக்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் பெண்கள் இணைந்து எமக்கு நிரந்தரமான அரசியல் உரிமை வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான "மக்கள் குரல்" எனும் தொனிப் பொருளில் வடக்கு-கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் 100 நாட்கள் நடைபெற உள்ள செயல் திட்டத்தின் 66 வது நாள் கவனயீர்ப்பு போராட்டம் வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேசத்தின் முட்கொம்பன் சந்தை வீதியில் இடம்பெற்றது.

குறித்த போராட்டம் வடக்கு-கிழக்கு பகுதிகளில் தொடர்ச்சியாக சுழற்சி முறையில் 100 நாட்கள் வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் சிறப்புற இடம்பெற்ற வாணி விழா!



முல்லைத்தீவு மாவட்ட செயலக 2022ம் ஆண்டுக்கான வாணி விழா நிகழ்வுகள் மாவட்ட செயலக ஊழியர் நலன்புரிக்கழகத்தினால் ஏற்பாட்டில் புதன்கிழமை (05) காலை 10.00 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் (காணி) எஸ். குணபாலன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம அதிதியாக மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் கலந்து சிறப்பித்தார்.

கடந்த 26ம் திகதி காலை நவதானிய பூரண கும்பம் வைத்தலுடன் பக்தி பூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட நவராத்திரி நிகழ்வு இன்றைய தினம் கும்பசரித்தலுடன் நிறைவு பெற்றது.

பூஜை வழிபாடுகளை குமுழமுனை ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய பிரதம குருக்கள் ஸ்ரீல ஸ்ரீ சம்பந்தன் குருக்கள் நிகழ்த்தினார்.

மேலும் இதன்போது அலுவலக உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கு ஏடு தொடக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

பூசை நிகழ்வுகளைத் தொடர்ந்து மாவட்ட செயலக பிரதம கணக்காளரின் சிறப்புரை, உத்தியோகத்தர்களின் நடனம், தனிப்பாடல்கள், பட்டிமன்றம், கவிதை போன்ற கலை நிகழ்வுகள் நடைபெற்றன.

இந் நிகழ்வில் மேலதிக மேலதிக அரசாங்க அதிபர் (நிர்வாகம்) க.கனகேஸ்வரன், மாவட்ட பொறியியலாளரும் மாவட்ட செயலக ஊழியர் நலன்புரிச் சங்க தலைவருமான எஸ். கஜந்த், பதவிநிலை உத்தியோகத்தர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் பிள்ளைகள் என பலரும் பக்தி பூர்வமாகக் கலந்து கொண்டிருந்தனர்.



# முல்லைத்தீவில் மீனவர்கள் இரு தரப்பாக போராட்டம்!

## அமைதியின்மை அடுத்து இரண்டு தரப்பு மீதும் பொலிசார் கண்ணீர் புகை பிரயோகம்



ஜெகதீஸ்வரன் டிஷாந்த்
சுயாதீன ஊடகவியலாளர்
முல்லைத்தீவு

முல்லைத்தீவில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளுக்கு துணைபோகும் அதிகாரிகளை மாற்றுமாறு கோரி முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அலுவலகத்தை 03.10.2022 அன்று காலை முற்றுகையிட்ட மீனவர்கள் தமக்கான தீர்வு கிடைக்கும் வரை போராடப் போவதாக தெரிவித்து தொடர் போராட்டத்தில் குதித்திருந்தனர் இவர்களது போராட்டம் மூன்றாவது நாளாக தொடர்ந்து இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மீனவர்கள் தொடர்ச்சியாக பல்வேறு வழிகளில் பாதிக்கப்பட்டுள்ளனர் குறிப்பாக மீன்பிடி நடவடிக்கைகளுக்கு எரிபொருள் கிடைக்காத நிலையில் பல்வேறு துன்பங்களுக்கு மத்தியில் தொழிலுக்கு சென்று வருகின்ற நிலையில் கடலில் இடம்பெறும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் காரணமாக மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் தொழிலுக்கு செல்லும் மீனவர்களான தமது நிலைமையை புரிந்து கொள்ளாத அதிகாரிகள் சட்டவிரோத தொழிலுக்கு உடந்தையாகவுள்ளதாகவும் இவ்வாறான அதிகாரிகள் எமக்கு தேவையில்லை எனவும் அவர்களை உடனடியாக மாற்றம் செய்து தமக்கான ஒரு தீர்வினை வழங்குமாறு வலியுறுத்தி போராடி வருகின்றனர்.

03.10.2022 அன்று காலை கடல் தொழில் நீரியல் வள திணைக்கள உத்தியோகத்தர்கள் அனைவரையும் உள்ளே செல்ல அனுமதிக்காத போதிலும் பின்னர் அனுமதித்தனர். தமது கோரிக்கைகள் அடங்கிய கடிதத்தை தேசிய கடற்றொழில் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்துள்ளதுடன் தமக்கான தீர்வுகள் வரும் வரையில் குறித்த அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்படும் வரையில் தமது போராட்டம் தொடரும் என அறிவித்த மீனவர்கள் கடற்தொழில் நீரில்வள திணைக்களத்தின் நுழைவாயிலுக்கு அருகில் கொட்டகை அமைத்து தொடர் போராட்டத்தில் மீனவர்கள் தற்போதும் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் 24 சங்கங்களை சேர்ந்த மீனவர்கள் குறித்த போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த மீனவர்கள் குற்றச்சாட்டுக்களை வைத்த கொக்கிளாய் சாலை பகுதிகளில் தென்பகுதியில் இருந்து வருகைதந்து மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்ற மீனவர்கள் மற்றும் மாத்தளன் பகுதிகளில் மீன்பிடியில் ஈடுபடும் தமிழ் மீனவர்கள் முஸ்லிம் மீனவர்கள் என சுமார் முந்நூறு பேரளவில் முல்லைத்தீவு பேருந்து நிலையம் அருகே காலை பதினொரு மணியளவில் போராட்டத்தை ஆரம்பித்து முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அதிகாரிகளை மாற்ற வேண்டாம் என கோரி போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இந்நிலையில் குறித்த மீனவர்கள் மற்றும் ஏற்கனவே போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற மீனவர்கள் இடையே முரண்பாடுகள் ஏற்படலாம் என்ற நிலையில் பொலிசார் போராட்டக்காரர்கள் கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அலுவலகம் நோக்கி செல்லாத வகையில் முல்லைத்தீவு இலங்கை வங்கிக்கு முன்பாக ஒரு வீதித்தடையும் தொடர் போராட்டத்தில் ஈடுபடும் மீனவர்கள் போராட்டக்காரர்களை நோக்கி வரமுடியாத வகையில் ஒரு வீதித் தடையையும் ஏற்ப்படுத்தியிருந்தனர்.

இந்நிலையில் இன்று அதிகாரிகளை மாற்ற வேண்டாம் என கோரிய போராட்டக்காரர்கள் இலங்கை வங்கி முன்பாக பொலிசார் அமைத்த வீதித்தடையை உடைத்து கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அலுவலகம் நோக்கி செல்ல முற்ப்பட்டபோது போராட்டக்காரர்கள் மீது கண்ணீர் புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் செய்தனர் இதனையடுத்து தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்ற மீனவர்கள் வீதித்தடையை உடைத்து செல்ல முற்பட்ட போது அவர்கள் மீதும் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகை பிரயோகம் செய்தனர் இதன்போது பாதிக்கப்பட்ட ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதன் பின்னர் கலைந்து சென்ற போராட்டக்காரர்கள் தொடர் போராட்டத்தை முன்னெடுத்தவர்கள் கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அலுவலக வாயிலில் அமைக்கப்பட்ட கொட்டகையில் போராடி வரும் அதே வேளை அதிகாரிகளை மாற்ற வேண்டாம் என்று கேட்டு போராட்டத்தை முன்னெடுத்தவர்கள் மாவட்ட செயலக முன்றலில் போராடி வருகின்றனர்.



# மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் நவராத்திரி விழாவின் இறுதி நாள் விழாவான "மானம்பூ" சிறப்பாக இடம்பெற்றது





மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் நவராத்திரி விழாவின் இறுதி நாள் விழாவான மானம்பூ திருவிழா புதன்கிழமை (5) மாலை ஆரம்பமானது.

புதன்கிழமை 5.30 மணிக்கு திருக்கேதீஸ்வர ஆலயத்தில் இருந்து சுவாமி அழங்கரிக்கப்பட்ட ஊர்தியில் எழுந்தருளி வேட்டையார் முறிப்பு ஆலயத்தில் வாழை வெட்டும் நிகழ்வும் இடம்பெற்றது.

அதனை தொடர்ந்து சுவாமியின் வீதி உலா இடம் பெற்றது. தொடர்ந்து கிராமங்களில் மக்கள் பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டதோடு, கிராமங்கள் ஊடாக மீண்டும் திருக்கேதீஸ்வர ஆலயத்தை சென்றடைந்தது. அதனை தொடர்ந்து கேதார கௌரி விரத பூஜை ஆரம்பமாகியது.

தொடர்ந்து எதிர்வரும் 21 நாட்கள் கேதார கௌரி விரத பூஜை இடம்பெறும்.

**- மன்னார் நிருபர்**

# மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தின் பண்பாட்டு பெருவிழா





இலங்கையின் முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தின் பண்பாட்டு பெருவிழா மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் செல்வி ந.ரஞ்சனா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் விருந்தினர்கள் பிரதேசத்தின் கலைஞர்களினால் மாநாட்டு மண்டபத்திற்கு விமரிசையாக அழைத்து வரப்பட்டனர். மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய நிகழ்வின் பின் தமிழன்னைக்குபிரதம விருந்தினராக கந்துகொண்ட மாவட்ட செயலாளரினால் மாலை அணிவிக்கப்பட்டது. பாண்டியன்குளம் பாடசாலை மாணவர்களினால் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது.

தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்தினை மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் ம.ஜெபமயூரன் வழங்கினர். தொடர்ந்து மல்லாவி நர்த்தனாலய நடன மாணவர்களினால் நடனமும் வழங்கப்பட்டிருந்தது.

பிரதேச செயலக உத்தியோகத்தர்களினால் தெய்வீக கானங்கள் வழங்கப்பட்டன. நட்டாங்கண்டல் பாடசாலை மாணவர்களினால் கிராமிய நடனங்களும் வழங்கப்பட்டிருந்தன. நிகழ்வில் கலைஞர்கள், மாணவர்கள் விருந்தினர்களினால் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக திரு. க.விமலநாதன் (மாவட்ட செயலாளர் மாவட்ட செயலகம் முல்லைத்தீவு, திரு. சிவகுரு திருவாகரன் (செயலாளர் - மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடமாகாணம்), சிறப்பு விருந்தினர்களாக திரு. சி.குணபாலன் (மேலதிக மாவட்ட செயலாளர் - மாவட்ட செயலகம் முல்லைத்தீவு)திருமதி. சி.ராஜமல்லிகை (பிரதிப்பணிப்பாளர் - பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வடமாகாணம்), திரு. பொ.சிவானந்தம் (சிரேஸ்ட நில அளவை அத்தியட்சகர் நிலஅளவை காரியாலயம், முல்லைத்தீவு), திரு. பொ.சுஜாத்குமார் (கணக்காளர் - பிரதேச செயலகம் கண்டாவளை), கௌரவ விருந்தினர்களாக திரு. ந.கமலேஸ்வரன் (அதிபர் - சிராட்டி குளம்), திருமதி. ந.கேதீஸ்வரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - துணுக்காய்), திரு. சு.அறிவழகன் (கலைஞர் கரும்புள்ளியான்) ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் பிரதேச சபை உறுப்பினர்கள், பொது அமைப்புகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

**- ஜெகதீஸ்வரன் டிஷாந்த்**





# எமது இனத்தின் இருப்பை அழிப்பதற்காகவே போதைப்பொருள்கள் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன



மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தின் பண்பாட்டு பெருவிழா அதன் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு சிறப்பித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில், மாந்தை கிழக்கு பிரதேச மானது நீண்ட பெரும் வரலாற்றினை தன்னகத்தே கொண்டுள்ள ஒரு பிரதேசமாகும்.

ஆரம்ப காலத்தில் இந்த பிரதேசத்தினுடைய அமைப்பு என்பது கொண்டல்வெளி, முதலியார்குளம், பனங்காமம், நட்டாங்கண்டல், ஓட்டறுத்த குளம், நவ்வி, குஞ்சுக்குளம், முதலான பாரம்பரிய கிராமங்கள் மற்றும் ராமையன்குலம் ஆகிய பாரம்பரிய கிராமங்களைகொண்டு அந்த பிரதேசத்தினுடைய மக்கள் இயற்கையோடு இணைந்ததாகிய பண்பாட்டு விழுமியங்களை பேணி வந்திருந்தார்கள்.

அவர்களுடைய வழிபாட்டு தளமாக இங்கிருக்ககூடிய கல்லிருப்பு கண்ணகி அம்மன் ஆலயம் சிறந்த ஒரு வழிபாடு தளமாக இருந்து வந்திருக்கின்றது. அவ்வாறு இருக்கின்ற காலத்திலேயே தான் கைலிலாயவன்னியன் என்று சொல்லப்படுகின்ற அரசனினுடையஆட்சி இந்த பிரதேசத்தினுடைய பனங்காமம் பிரதேசத்திலே மிக சிறப்பான முறையிலே இடம்பெற்றிருக்கின்றது.

இந்த வன்னியர்கள் என்று சொல்லபடுகின்றவர்கள் இந்தியாவிலே சோழர்கள் இலங்கையை வந்து ஆட்சி செய்த காலத்தில் அவர்களோடு வந்து வணிக தொடர்புகளை மேற்கொண்டிருந்தவர்கள் தான் பிற்காலத்தில் குறுநில மன்னர்களாக இந்த பிரதேசத்தில் ஆட்சிகளை கைப்பற்றிக்கொண்டிருந்தார்கள்.

அவ்வாறு சிறப்புமிக்க ஆட்சியை இந்த பிரதேசத்தில் கைலாய வன்னியன் செய்துகொண்டிருந்தான் அந்த மக்கள் இந்த கிராமங்களை செம்மையிட்டு சிறப்பானஒரு இடங்களாகவும் பண்பாட்டு தளங்களாகவும் வைத்திருந்தார்கள்.

இதனுடைய பிற்பாடு இந்த பிரதேசத்தின் அபிவிருத்தியை கருதி 1956ம் ஆண்டு வவுனிக்குளம் குடியேற்ற திட்டம் உருவானது. அந்த குடியேற்ற திட்டத்திலும் நாங்கள் பார்க்க கூடிய சிறப்பான அம்சம் என்னவென்றால் இங்கே அமைக்கப்பட்டிருக்க கூடிய ஒவொரு கிராமங்களும். யாழ்ப்பாணத்தில் இருக்கக்கூடிய நெடுந்தீவு கோப்பாய் கரவெட்டி ஆகிய பிரதேசத்தில் இருக்கக்கூடிய மக்கள் அவர்களுடைய பண்பாடு விலகாத வகையில் இங்கும் அதே இடங்களில் ஒரு குறிச்சிகளாக குழுமங்களாக குடியேற்றி இருந்தார்கள்.



இன்றைக்கும் நாங்கள் இந்த பண்பாடுகளை இந்த வனிக்குளம் திட்டம் இருக்க கூடிய பல கிராமங்களில் பார்க்கக் கூடியதாக இருக்கும் குறிப்பாக துணுக்காய் பிரதேசத்தில் இருக்கக்கூடிய திருநகர் பிரதேசத்தில் அந்தப் பண்பாட்ட அம்சங்கள் குறிப்பாக மரண வீடுகளில் இருந்து திருமண வீடுகள் வரைக்கும் அத்தனை சடங்கு முறைகளுக்கும் அந்தப் பண்பாட்டு விழுமியங்கள் பேணப்பட்டு கொண்டிருக்கின்றன அப்படிப்பட்ட சிறந்த பண்பாட்டு விழுமியங்களாக இருக்கக்கூடிய இந்த இடங்கள் இன்று அவ்வாறு இருக்கின்றனவா என்கின்ற மிகப்பெரிய ஒரு கேள்வி எங்கள் முன் இருக்கின்றது.

எங்களுக்கு தெரியும் ஒரு இனத்தினுடைய அடையாளம் ஒரு இனத்தினுடைய நிலைத்திருப்பு என்பது அதன் கலை பண்பாட்டு விழுமியங்களில் தான் தங்கி இருக்கின்றது. ஒரு இனத்தை அழிக்க வேண்டும் எனில் முதலிலே நாங்கள் கை வைக்கின்ற இடங்கள் பண்பாட்டு விழுமியங்களை சிதைப்பது அந்த அடிப்படையிலேயே தான் பல்வேறுபட்ட நூலகங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன.

ஏன் இவர்கள் நூலகத்தை அளித்தார்கள் நூலகம் என்பது ஒரு இனத்தினுடைய பண்பாட்டு விழுமியங்களை எல்லாம் பேணி வைக்கின்ற ஒரு இடம் நூலகத்தை அழிக்கின்ற போதே அதன் பண்பாடுகள் சிதைக்க பட்டு விடும். இதற்காகத்தான் உலகிலேயே பல நாடுகளிலும் பல இடங்களிலும் நூலகம் அழிப்பு என்பது திட்டமிட்ட வகையில் இன அழிப்பாக காணப்படுகிறது.

இங்கேயும் நாங்கள் இன்று பார்க்கலாம் எங்களுடைய வழிபாட்டு மரபுகள் மறைக்கப்படுகின்ற நிகழ்வுகள் காணப்படுகின்றன குறிப்பாக தொல்லியல் என்கின்ற போர்வையினாலே எங்களுடைய தொன்மைகள் எல்லாம் மறைக்கப்படுகின்ற அல்லது அழிக்கப்படுகின்ற ஒரு சூழல் காணப்படுகின்றது.

இங்கு இருக்கின்ற சிவபுரம் சிவன் கோயில் கூட சோழனுடைய காலத்திலிருந்து வழிபாட்டுக்குரிய ஒரு ஆலயமாக இருந்து 1956 குடியேற்றத்தின்போது அது மீளெழுட்சி பெற்ற ஆலயமாக குறிப்பிடப்படுகின்றது.

இவ்வாறாக எங்கள் கலை பாரம்பரியங்களும் கலாச்சார விளுமியங்களும் நிறைந்து இருக்கக்கூடிய ஒரு பிரதேசமாக இந்த மாந்தை கிழக்கு பிர தேசம் இருந்தது 1978 ஆம் ஆண்டு வரைக்கும் இந்த மாந்த கிழக்கு பிரதேசமானது மன்னர் மாவட்டத்துடன் அதன் ஒரு பகுதியாக இருந்தது.

1978 ஆம் ஆண்டு முல்லை தீவு ஒரு தனியான ஒரு மாவட்டமாக வருகின்ற பொழுது மன்னாரில் இருந்து பிரிக்கப்பட்டு முல்லைத் தீவுடன் இணைக்கப்பட்டது.

அவ்வாறு இருந்திருக்க கூடிய இந்த பிரதேசத்தினுடைய இன்றைய நிலை என்பது உண்மையிலேயே எங்களுக்கு வேதனை அளிக்கின்றது எங்களாலே போற்றப்பட்டிருக்கக்கூடிய பாரம்பரியமான வடிவங்கள் எங்களுடைய மரபுகளிலே இருக்கின்றதா.

ஆரம்ப காலங்களில் திராவிடத்தோடு ஆரியத்தினுடைய கலை கலாச்சார மரவு இணைந்து படி படியாக அதனை சிதைக்க தொடங்கியது.

அதனுடைய பிற்பாடு ஐரோப்பியருடைய வருகையோடு ஐரோப்பியருடைய கிளை கலாச்சார மோகங்களினாலே அவற்றை பின்பற்றுவதற்கு மக்கள் பழகிக் கொண்டார்கள் அதனால் அதனுடைய பண்பாடுகளும் சிதைக்கப்பட்டன ஆக மொத்தம் உடைய தனித்துவமும் பண்பாடும் இலக்கு வைத்து தாக்கப்படுகின்ற இன்று வரை இடம்பெற்று கொண்டிருக்கின்றது.

உங்களுக்கு தெரியும் இலங்கையில் இருக்கக்கூடிய பாடசாலைகளில் ஒரு இலட்சமானவர்கள் மது போதைக்கும் மற்றும் போதை வஸ்துக்கும் அடிமையாக இருக்கின்றார்கள். கிட்டத்தட்ட 5000 மாணவர்கள் இந்த பாடசாலை வாழ்க்கையை மட்டுமல்ல இந்த வாழ்க்கையில் இருந்து தூர எறியப்பட்டிருக்கின்றார்கள்.

அண்மைய தரவின்படி ஒரு வாரத்திலே 10 மாணவர்கள் யாழ்ப்பாணத்திலே போதை வாஸ்து பாவனையினால் சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கின்றார்கள். இவை எதற்காக இடம்பெறுகின்றது என்ற கேள்வி இன்று பல்வேறுபட்ட தரப்பினருக்கும் உள்ளது.

உண்மையில உங்கள் இனத்தினுடைய இடுப்பை அளிக்க வேண்டுமானால் முதலிலே அவர்களை இந்த விழுமியங்களில் இருந்து தூர அறியப்படுகின்றவர்களாக அல்லது அதில் புறந்தள்ள பட்டவர்களாக மாற்ற வேண்டிய ஒரு தேவைப்பாடு இருக்கின்றது. அதுதான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆனால் அதனை உணராத சமூகம் ஆகிய நாங்கள் இருக்கிறோம் என்கின்ற வேதனை தான் எங்களுக்கு மிகப்பெரிய ஒரு பிரச்சனை. குடும்பத்தினுடைய அலகுகள் சின்னாபின்னமாக்கப்பட்டதன் விளைவாகவே எத்தனையோ பிள்ளைகள் மாணவர்கள் போதை வஸ்துக்கு அடிமையாக காணப்படுகிறார்கள்.

அன்றைய நாளில் எல்லாம் பெற்றோர்களினாலே கூர்ந்து கவனிக்கப்பட்டிருக்கக்கூடிய பிள்ளைகள் அவர்களுடைய ஒழுக்கம் மற்றும் அந்த பிள்ளைகளுடைய நடத்தைகள் அவர்களாலே கவனி படாமல் விடப்படுகின்ற காரணத்தினாலே அது மாற்றமடைந்து போதைக்கு அடிமையாக காரணமாக இருக்கின்றது. எந்த ஒரு பெற்றோராகினும் தனது பிள்ளையினுடைய ஒழுக்கத்தினை பேசுவதற்கு தயாராக இல்லை.

ஆகவே இந்த கலாச்சார விழுமியங்களை போற்றுகின்ற இந்தப் பண்பாட்டு விழாவிலே உறுதி எடுத்துக் கொள்ள வேண்டிய மிக முக்கியமான விடயம் இன்னொரு அந்நிய கலாச்சாரத்தினாலே ஊடுருவலாக எங்களுடைய மரபுகளை அவற்றிற்கு எதிராக நடக்கும் எந்த ஒரு நடவடிக்கையிலும் நாங்கள் இடம் கொடுக் கமல் உங்களுக்கென்று பேணப்பட்டு இருக்கக்கூடிய தமிழர்களுடைய கலாச்சார விடுமியங்களை பண்பாட்டு அம்சங்களை பின்பற்றுகின்றவர்களாக அவற்றின்பால் இருக்கக்கூடிய நெறிகளை கட்டி காப்பவர்களாக மீண்டும் வடிவம் கொடுப்பவர்களாக எங்களுடைய கலைளை மீண்டும் வளர்த்தவர்களாக எங்களுடைய கலாச்சாரத்தின்பால் எங்களுடைய பிள்ளைகளை இட்டு செல்பவர்களாக நாம் மாற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

**- குணபாலன் மேலதிக மாவட்ட செயலாளர் (காணி)**

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மன்னார் இரணை இலுப்பை குளத்தில் இஞ்சி அறுவடை விழா

மன்னார் மடு பிரதேச செயலாளர் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட தோட்டச் செய்கை இன் உற்பத்திப் பொருட்களின் அறுவடை நிகழ்வு 4ம்திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இதன் போது மன்னார் இரணை இலுப்பை குளத்தில் இஞ்சி அறுவடை விழா நடைபெற்றது. பிரதம அதிதியாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஸ்ரான்லி டிமெல் கலந்து கொண்டார்.

மேலும் பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் (விரி) எஸ். உதயச்சந்திரன்,





மன்னார் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் க. மகேந்திரன், மன்னார் மாவட்ட செயலக பிரதான கலாச்சார உத்தியோகத்தர் நித்தியானந்தன் ஆகியோரும் இவ் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




இரணை இலுப்பை குளத்தைச் சேர்ந்த விவசாயிக்கு விவசாய திணைக்களம் வழங்கிய தூவல் நீர் பாசன உபகரணம் தொகுதியின் உதவியுடன் விவசாய திணைக்களத்தின் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் அவர்களின் ஆலோசனைக்கு அமைவாக உற்பத்தி செய்யப்பட்டிருந்தது.

மேலும் வெங்காயம், பூசணிக்காய், கச்சான் கடலை, மிளகாய் உள்ளிட்டவையும் அறுவடை செய்யப்பட்டது.

**- மன்னார் நிருபர்**

# பிரதேச செயலாளரின் கண்ணை கட்டிவிட்டு மாந்தை கிழக்கில் சட்டவிரோத காடழிப்பு!



முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் அண்மைய காலமாக காடழிப்பு மற்றும் மண்ணகழ்வுகள் சட்டவிரோதமாக இடம்பெறுகின்ற நிலையில் அதனை கட்டுபடுத்த பிரதேச செயலகம் மற்றும் பிரதேச போலீசார் தவறி நிற்கும் இதேவேளை மறைமுக அனுமதிகளை வழங்குகின்றனர் என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக மாந்தை கிழக்கின் மாபியாக்கள் என மக்களால் சட்டவிரோத செயற்பாடுகளினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நபர்களை போலீசார் பாதுகாப்பதுடன் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளரும் குடியேற்ற உத்தியோகத்தரும் சட்டவிரோத காடழிப்புக்கு உதவிகளை செய்து வருகின்றனர் என பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை குறித்த நபர்களினால் தங்கள் மீது வெளிப்படையான குற்றச்சாட்டை முன்வைக்கும் மக்கள் மீது இரவு நேரங்களில் அவர்கள் மீது தாக்குதல்களை மேற்கொள்வதும் பின்னர் பாதிக்கப்பட்ட நபர்கள் பொலிஸ் நிலையம் சென்று முறையிட சென்றால் போலீசார் நடவடிக்கை எடுக்காதுமாக இருக்கின்றனர் என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை குடியேற்ற உத்தியோகத்தரால் கரும்புள்ளியான் பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு அண்மையாக உள்ள அரச காணி (யுத்தத்திற்கு முன்னரும் மீளக்குடியேற்றத்தின் ஆரம்ப காலகட்டத்தின் போதும் வறுமை கோட்டிற்கு உட்பட்ட 5 பெண் பிள்ளைகளை கொண்ட தாயொருவர் நீண்டகாலமாக அந்த காணியை பயன்படுத்தி வந்தார், இவரிடமிருந்து பறிக்கப்பட்டு) தன்னுடைய தனிப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்கின்றார் என மேற்குறித்த நபர்களுக்கு பிரதேச செயலாளரின் அனுமதியுடன் அந்த காணி வழங்கப்பட்டிருக்கின்றது.

எந்த வொரு காணி பயன்பாட்டு குழு கூட்டத்திலும் மேற்குரித்த காணிக்கான விண்ணப்பங்கள் வழங்கப்படாமலேயே குடியேற்ற உத்தியோகத்தரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இருந்த போதும் கடந்த காணி பயன்பாட்டு குழு கூட்டத்தில் அனுமதிக்காக கோரப்பட்டிருந்தது.

ஆனால் அனுமதி இல்லாமலே அவர்கள் பயிர்செய்கை நடவடிக்கையில் நீண்ட காலமாக செய்கின்றார்கள் எனவும் தெரிவித்த மக்கள் எங்கள் உறுதி காணிகளில் துப்பரவு செய்வதாயின் ஓட்டிவந்து அனுமதி கேட்கும் குடியேற்ற உத்தியோகத்தர் அவர்கள் சட்டவிரோதமாக காடழித்து காணி இடிக்கும் போது அமைதியாக இருப்பதாகவும் பார்வையற்ற ஒருவர் பிரதேச செயலாளராக இருக்கின்றார் எனவும் குடியேற்ற உத்தியோகத்தரே நிர்வாகங்களை நெறிப்படுத்துவதாகவும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கரும்புள்ளியான் பகுதியில் கழிவாற்றினை மறித்து ஒரு சிலரால் மேகொள்ளப்பட்ட 5 ஏக்கருக்கும் மேற்பட்ட அரச காணி அத்துமீறி பிடிப்பு நடவடிக்கைக்காக கிராம அலுவலாரால் இரு தடவையாக ஒட்டப்பட்டிருந்த வெளியேற்றல் நடவடிக்கை பத்திரம் மேற்குறித்த நபர்களினால் கிழிக்கப்பட்டு அந்த காணிக்குள் அபிவிருத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என தெரிவித்தகுறித்த பகுதி கிராம அமைப்புக்கள் கண்பார்வையற்ற பிரதேச செயலாளராகையால் குறித்த சம்பவங்களுக்கு அவர் மௌனம் சாதிப்பதாக தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்த பிரதேச மட்ட அமைப்புக்கள் பிரதேச செயலகத்தில் முறையிட்டால் குறிப்பிட்ட நேரத்திற்குள் சம்பத்தப்பட்ட நபர்களிடமிருந்து மிரட்டும் தொனியில் தொலைபேசி அழைப்பு வருவதாக தெரிவிக்கின்றனர்.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# கண்டி முல்கம்பலா பிரதேசத்தில் வேன் மோதியதில் 21 வயது பெண் பலி

வீதியில் சென்று கொண்டிருந்த 3 பேர் மீது வேன் மோதிய வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு வருகிறது. கண்டி முல்கம்பலா பிரதேசத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

துரதிர்ஷ்டவசமாக இந்த விபத்தில் வீதியில் பயணித்த யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார். கண்டி ஹீரஸ்ஸகல பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதுடைய யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்தில் அவரது சகோதரர் மற்றும் தாயார் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த விபத்து வீதியில் நிறுத்தப்பட்டிருந்த மற்றொரு வாகனத்தின் முன் பகுதியில் பொருத்தப்பட்டிருந்த கமராவில் பதிவாகியுள்ளது.



# எங்கள் மீது உள்ள வழக்குகளை ரத்து செய்யுங்கள்!

இந்தியா செய்திகள் India News

## திமுகவுடன் பேரம் பேசும் அதிமுக முன்னாள் அமைச்சர்கள்!! வெளிவந்த அதிர்ச்சி தகவல்



அதிமுக பிரமுகர் ஜே சி டி பிரபாகரன் தற்பொழுது அதிர்ச்சி தரும் தகவலை வெளியிட்டுள்ளார். அவர் வெளியிட்ட செய்தி தான் தற்பொழுது அரசியல் சுற்றுவட்டாரங்களில் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது. திமுக ஆட்சிக்கு வந்தவுடன், அதிமுக செய்த ஊழல்களை வெளியே கொண்டு வருவோம் என கூறியது. அதேபோல அதிமுக முன்னாள் அமைச்சர்கள் வீடுகளில் அமலாக்கத் துறையினர் சோதனை நடத்தி பல திடுக்கிடும் தகவல்களை வெளியிட்டனர். அடுத்தடுத்து எந்தெந்த அமைச்சர்கள் டார்கெட்டில் உள்ளனர் என்ற வாரே அதிமுக பரபரப்பில் உள்ளது. மேலும் அமலாக்க துறையினர் சோதனை செய்த அமைச்சர்கள் மீது வழக்கு பதிவும் செய்துள்ளனர். அந்த வழக்குகளை எவ்வாறு ரத்து செய்வது என்ற குழப்பத்திலும் எதிர்க்கட்சி இருக்கிறது. இந்நிலையில் வேறு வழியின்றி எதிர்க்கட்சி, ஆளும் கட்சியிடம் வழக்குகளை ரத்து செய்வதற்காக பேரம் பேசி வருவதாக முன்னாள் அமைச்சர் ஜே சி டி பிரபாகரன் தெரிவித்துள்ளார். அதிமுக இரு பிரிவுகளாக உள்ள நிலையில் இவர் ஓபிஎஸ் பக்கம் ஆதரவளித்து வருகிறார். இந்நிலையில் எடப்பாடி குறித்தும் பல திடுக்கிடும் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

அதில் முதலாவதாக, கருணாநிதியின் நினைவிடத்தை வைப்பது குறித்து தலைமைச் செயலகத்தில் ஓபிஎஸ் புகழாரம் பேசினார். அது நடந்து முடிந்து எட்டு மாதங்கள் ஆன நிலையில் தற்போது வரை ஓபிஎஸ் மீது குற்றம் சாட்டி வருகின்றனர். எடப்பாடியும் தான் கருணாநிதியை புகழ்ந்துள்ளார். ஏன் அதைப் பற்றி எல்லாம் பேசுவதில்லை?? கருணாநிதி பற்றி புகழாரம் சூட்டி பேச சொன்னதே எடப்பாடி பழனிசாமி தான். அதுமட்டுமின்றி முன்னாள் அமைச்சர் தங்கமணி தேவையின்றி ஓபிஎஸ் மீது பல குற்றச்சாட்டுகளை சுமத்தி வருகிறார். இவ்வாறு சுமத்துவதற்கு ஒரே ஒரு காரணம் தான். தங்கமணியின் ராஜியமாக உள்ள நாமக்கல் மாவட்டத்தில், தற்பொழுது ஓபிஎஸ் பல நிர்வாகிகளை அமர்த்தி பொறுப்புகளை கொடுத்து வருகிறார். இவ்வாறு செய்வதால் தங்கமணியின் ராஜ்யமான நாமக்கல்லில் இவரது பெயருக்கு பெரும் சரிவை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு தான் தற்பொழுது ஓபிஎஸ் மீது குற்றம் சாட்டி வருகிறார்.

மேலும் பலமுறை நரேந்திர மோடி அவர்கள் ஓபிஎஸ் ஐ அழைத்து வரச் சொல்லியும் எடப்பாடி ஒருமுறை கூட அவரை அழைத்து செல்லவில்லை. அதேபோல, தற்பொழுது முன்னாள் அமைச்சர்கள் தங்கள் மீதுள்ள வழக்கை ரத்து செய்ய பேரம் பேசி வருகின்றனர், அவர்களின் பட்டியலை நான் விரைவி-லேயே வெளியிடுவேன் இவ்வாறு கூறியுள்ளார்.

# நள்ளிரவில் சார்ஜ் போட்ட போது மின்சார ஸ்கூட்டர் பேட்டரி வெடித்து 7 வயது மும்பை சிறுவன் பலி

இந்தியா செய்திகள் India News



சார்ஜ் போடும் போது பேட்டரி வெடிப்பது, திடீரென வாகனம் தீப்பிடித்து எரிவது போன்ற சம்பவங்கள் அடிக்கடி நடந்து வருகின்றன. இது மக்கள் இடையே அச்சத்தை ஏற்படுத்தி வருகிறது.

இந்தநிலையில் மும்பை புறநகர் பகுதியான பல்கார் மாவட்டம் வசை பகுதியில் உள்ள ஒரு வீட்டில், எலெக்ட்ரிக் ஸ்கூட்டரின் பேட்டரி வெடித்து 7 வயது சிறுவன் பலியான சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

ராம்தாஸ் நகரை சேர்ந்தவர் சர்பாஸ் அன்சாரி. இவரது மகன் சபீர் ஷாநவாஷ் அன்சாரி (வயது 7). சம்பவத்தன்று இரவு சபீர் அன்சாரி, பாட்டியுடன் வீட்டின் ஒரு அறையில் தூங்கிக்கொண்டு இருந்தான். இந்தநிலையில் அதிகாலை 2.30 மணியளவில் சர்பாஸ் அன்சாரி அவரது எலெக்ட்ரிக் ஸ்கூட்டர் பேட்டரியை எடுத்து சிறுவன் சபீர் அன்சாரி தூங்கிய அறையில் சார்ஜ் போட்டார். அதிகாலை 5.30 மணிக்கு பயங்கர சத்தத்துடன் பேட்டரி வெடித்துச் சிதறியது. இதில் சிறுவன் சபீர் அன்சாரிக்கு பலத்த காயம் ஏற்பட்டது. மேலும் வீட்டின் ஜன்னல் கண்ணாடிகள் உள்ளிட்ட பொருட்களும் உடைந்தன. சிறுவனுடன் தூங்கிக்கொண்டு இருந்த அவன் பாட்டி லேசான காயங்களுடன் தப்பினார். 80 சதவீத தீக்காயம் அடைந்த சிறுவன் அருகில் உள்ள ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டான்.

அங்கு அவனுக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்து வந்தனர். ஆனாலும் சிறுவன் சபீர் அன்சாரி சிகிச்சை பலன் இன்றி பரிதாபமாக உயிரிழந்தான். அதேநேரத்தில் ஸ்கூட்டர் பேட்டரி ஓவர்ஹீட் ஆகி வெடிக்கவில்லை, பேட்டரியை 3 முதல் 4 மணி நேரம் வரை சார்ஜ் போட வேண்டும் என விற்பனையாளர்கள் கூறியதாக சர்பாஸ் அன்சாரி தெரிவித்து உள்ளார்.

இந்த சம்பவம் குறித்து போலீசார் கூறுகையில், "ஜெய்பூரை சேர்ந்த எலெக்ட்ரிக் ஸ்கூட்டர் தயாரிப்பாளர்கள் வெடித்த பேட்டரியை ஆய்வு செய்து வருகின்றனர். பொதுமக்கள் இரவு தூங்கும் நேரத்தில் பேட்டரி மற்றும் செல்போன்களை சார்ஜ் போடுவதை தவிர்க்க வேண்டும். இதேபோல எலெக்ட்ரிக் வாகன பேட்டரிகள் திறந்த பகுதியில், மனிதர்கள் கண்காணிப்பில் சார்ஜ் போடப்பட வேண்டும்" என கூறினர்.

# ஒரே பள்ளியில் படித்த 108 பேருக்கு ஒரே மேடையில் 60 ஆம் திருமணம். தமிழ்நாடு கள்ளகுறிசியில் சுவாரஸ்யம்



தந்தையின் அறுபதாவது வயதில், பிள்ளைகள் அனைவரும் ஒன்றுகூடி பெற்றோருக்கு இந்த வைபவத்தை நடத்துவதால், இதை "அறுபதாம் கல்யாணம்", "மணிவிழா", "சஷ்டியப்த பூர்த்தி" என்றெல்லாம் அழைப்பார்கள். இந்த நிகழ்வானது 60 வயது முடிந்து, 61-வது வயது தொடங்கும்போது நடத்தப்படுகிறது கள்ளக்குறிச்சியில் ஒரே பாடசாலையில் படித்த 108 பேருக்கு ஒரே மேடையில் 60 ஆம் திருமணம் நடைபெற்றது. ஒரே பள்ளியில் படித்த 108 பேர் மணிவிழா கொண்டாடிய நிகழ்ச்சி கள்ளக்குறிச்சியில் நடந்து உள்ளது.

கள்ளக்குறிச்சியில் 1977-78ம் ஆண்டு10-ம் வகுப்பு பயின்ற மாணவர்கள் கடந்த 12 ஆண்டுகளாக தொடர்ந்து ஆண்டுக்கு ஒரு முறை முன்னாள் மாணவர்கள் சந்திப்பு கூட்டம் நடத்தி வருகின்றனர். இதில் மொத்தம் 150 பேர் கொண்ட இந்த குழுவில் தற்போது 108 பேருக்கு 60 வயது முடிந்துள்ளது. அதனால் அவர்களுடைய 60 வது திருமணத்தை அவர்களது பிள்ளைகள் ஒன்று சேர்ந்து ஒரே மேடையில் நடத்தினார்கள்.

MANIPAY HINDU COLLEGE - MANIPAY LADIES COLLEGE
OLD STUDENTS ASSOCIATION - CANADA (ESTD 1991)
மானிப்பாய் இந்துக் கல்லூரி - மானிப்பாய் மகளிர் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் - கனடா (ஸ்தாபிதம் 1991)

Date: Oct 05, 2022

மானிப்பாய் இந்துக் கல்லூரி - மானிப்பாய் மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா - ஆண்டுப் பொதுக்கூட்டம் 2022

சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் எதிர் வரும் October 23, 2022 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு இல. 2500 Birchmount Rd. Scarborough ல் அமைந்துள்ள Stephen Leacock Community Recreation Centre, Mainfloor Activity room ல் நடைபெறும். மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி பழைய மாணவ மாணவிகள் அனைவரையும் இப்பொதுக்கூட்டத்தில் பங்குபற்றி அவர்களது அங்கத்துவத்தைப் பதிவு செய்யுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தொடர்புகட்கு:
ச. வசந்தராஜன், சி.கணேசலிங்கம் சி. விஜயகுமார்
தலைவர் (416)289-009 உபதலைவர் (416)499-6248 பொருளாளர் (647)293-9924

# நாட்டு நிலையில் ஒரு முக்கிய மாற்றம்

- உதிதா தேவப்பிரியா

இலங்கையின் மூன்று பவுத்த மடாலயங்களான சியாம், அமரபுர மற்றும் இராமன்யா ஆகிய மூன்று பவுத்த மடங்களின் மகாநாயக்கர்கள் சனாதிபதி இரணில் விக்கிரமசிங்கவிற்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளனர். அண்மையில் உயர்த்தப்பட்ட மின்கட்டண உயர்வு (பவுத்த) கோவில்களைக் கடுமையாக பாதிக்கிறது என்று கூறி நிவாரணம் கோரியுள்ளனர். சமூகத்திற்குத் தாங்கள் ஆற்றிவரும் மகத்தான சேவையை மேற்கோள்காட்டி, இந்தக் கோயில்கள் தற்போதைய கட்டணத்தை உள்வாங்கும் நிலையில் இல்லை எனத் துறவிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். மேலும், வேலை முடிந்து மாலை நேரங்களில் மக்கள் அவர்களைப் பார்ப்பதால், நாட்டின் கலாச்சார மற்றும் சமூக வாழ்வில் அவர்களின் பங்களிப்பைப் புறக்கணிக்க முடியாது, புறக்கணிக்கக் கூடாது என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.



பவுத்த தேரர்கள் மற்றும் பிற மதத் தலைவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பல ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து, அரசாங்கத்துடன் ஒரு சமாதானத்தை எட்டுவதற்கான முயற்சியாக இந்தக் கடிதம் பார்க்கப்பட்டது. ஐந்நூறு விழுக்காடு மின்கட்டண உயர்வால் மடாலாயங்கள் நசுக்கப்படுவதாகவும், அதேசமயம் தொழிற்சாலைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் பாதிப்பு குறைவாக இருப்பதாகவும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. இந்தப் போராட்டங்களுக்கு தலைமை தாங்கிய வணக்கத்துக்குரிய ஓமல்பே சோபித தேரர், பவுத்த விகாரைகள் இந்தக் கட்டணங்களைச் செலுத்த மாட்டாது என அரசாங்கத்தை அச்சுறுத்தியுள்ளார்.

நாட்டின் மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காவெள்ளைக் கொடியை காட்டியுள்ளார்.என அப்பட்டமாக தெரிவித்தார். இந்த உயர்வுகளில் இருந்து சாதாரண மக்கள் தப்பவில்லை என்றும், அவர்களும் பாதிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்த கருத்துக்கள் ஏற்கனவே பதட்டமான சூழ்நிலையை மோசமாக்கியது, மகாநாயக்கர்கள் ஜனாதிபதிக்கு ஒரு கடிதம் எழுத வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அவரது பங்கிற்கு, பிந்தையவர் தலைமை பீடாதிபதிகளுக்கு வெள்ளைக் கொடியை காட்டியுள்ளார். அவர்களின் கவலைகளை கொடியசைத்து, கோவில்களில் சூரிய தகடுகளை நிறுவுவது குறித்து அரசு பரிசீலிக்கும் என்று அவர்களுக்கு உறுதியளித்தார்.

இந்த நிகழ்வுகள் நாட்டின் அரசியலில் ஒரு சுவாரசியமான திருப்பத்தை ஏற்படுத்துகின்றன. பவுத்த துறவிகள் பாரம்பரியமாக அரசியல் உயிரினங்களாகக் **(political creature)** காணப்பட்டனர். அல்லது புரவலர்கள் மற்றும் நிதியாளர்களின் அடங்கிப்போகிற பாத்திரத்தில் தீவிரமாக ஈடுபடுத்துகின்றனர் அல்லது விளையாடுகின்றனர். இதற்கான அவர்களின் நியாயம் வரலாற்று ரீதியானது: நாட்டின் அரசர்களின் வாழ்விலும் அரசியலிலும் பவுத்த துறவிகள் முக்கிய பங்கு வகித்தனர். எனவே நாடு பரம்பரை முடியாட்சியிலிருந்து அரசியலமைப்பு குடியரசாக மாறியிருந்தாலும் அவர்கள் தொடர்ந்து ஈடுபடுவது இயற்கையானது. நாடு, இனம், மதம் ("ரட்ட, ஜாதிய, ஆகம") என்ற இலங்கையின் சனரஞ்சக அரசியலின் மும்மூர்த்திகளை நிலைநிறுத்துவதாகக் கூறும் கட்சிகள் மற்றும் ஆளுமைகளுடன் அவர்கள் பொதுவாக தங்களை இணைத்துக் கொண்டுள்ளனர். அனைத்து முக்கிய கட்சிகளும் மதகுருமார்களுடன் ஊர்சுற்றிய வரலாற்றைக் கொண்டிருந்தாலும், சில கட்சிகள் மற்றவர்களை விட முன்னிலை பெறுவதற்கு இது உதவியது.

இத்தகைய அணுகுமுறைகள் பாதுகாப்பின்மை மற்றும் அமைதியின்மை போன்ற ஆழமாக வேரூன்றிய உணர்வுகளை பொய்யாக்குகின்றன. முக்கியமாக மேற்கத்திய, தாராளவாத மற்றும் கொழும்பை மையமாகக் கொண்ட கதைகள், பவுத்த தேரர்களை எதேச்சாதிகார, முன்னோடி-பாசிசவாதிகள் என்றும், இவர்களுக்கும் அடிப்படைவாத முஸ்லீம் மற்றும் இந்து மதகுருமார்களுக்கும் வேற்றுமை இல்லை என்றும் சித்தரிக்கின்றன. ஆனால், இதுபோன்ற கருத்துக்கள் பவுத்த தேரர்கள் அவ்வப்போது வெளிப்படுத்தும் உணர்வுகளுக்கான வரலாற்று அடிப்படையைக் கவனிக்கத் தவறிவிடுகின்றன. நிச்சயமாக, இந்த உணர்வுகள் சகிப்புத்தன்மையற்றவை, தாராளமயமற்றவை மற்றும் தவறான அடித்தளத்தை, குறிப்பாக பாசிச விருப்பங்களைத் தூண்டுகின்றன: கோட்டாபய இராசபக்சவை மக்கள் ஒரு சர்வாதிகாரியாக் கருதினால், "ஹிட்லராக மாறுங்கள்" என்று வணக்கத்திற்குரிய வெண்டருவே உபாலி தேரரின் அழைப்பு, ஒரு எடுத்துக்காட்டு. இன்னும் அவர்கள் இரண்டு விடயங்களை அடிக்கோடிட்டுக் காட்டுகிறார்கள். தேரர்களையும் அவர்களைப் பின்பற்றுபவர்களையும் முன்னிலைப் படுத்துகிறார்கள்: சிங்கள பவுத்தத்திற்கு இலங்கைக்கு வெளியே நிறுவன ஆதரவு இல்லை ("எங்களுக்கு வேறு எங்கும் செல்ல முடியாது"), மற்றும் சிங்கள பவுத்த ம் இலங்கை சமூகத்தின் மையம் ("இந்த நாடு நமக்குச் சொந்தமானது").

பவுத்த மதகுருமார்களின் பாதுகாப்பின்மைக்கு மிகப் பெரிய காரணம் ஒரு எளிய வரலாறாகும்: பிரிட்டி' காலனித்துவக் கொள்கைகள் கோயில்களுக்கு இருந்த செல்வத்தையும், தங்களைத் தாங்களே நிலைநிறுத்துவதற்கான வழிகளையும் இழந்தன. வரலாற்றாசிரியர், கித்சிறி மலல்கொட (**Kitsiri Malalgoda** ) சிங்கள சமூகத்தில் பவுத்தத்தில் அவதானித்தபடி, காலனித்துவ சட்டத்தின் விளைவு, பிரதம பீடாதிபதிகளின் கைகளில் கோயில் நிலங்களை வழங்கியது. இதனால் தலைமைப் பீடாதிபதிகள் நில உரிமையாளர்களாகவும், வணிக நோக்கமுள்ள மதகுருக்களாகவும் மாற்றியது. இது இந்த நிறுவனங்களில் பலவீனமான விளைவை ஏற்படுத்தியது. காலனித்துவ சீர்திருத்தங்கள் திருச்சபையை, குறிப்பாக ஆங்கிலிகன் மற்றும் கத்தோலிக்கரை, நாட்டின் மிகப்பெரிய நில உரிமையாளர்களில் ஒருவராக மாற்றியது. இது பவுத்த தேரர்களை பேராசைகொண்ட நில உரிமையாளர்களாகவும் அரசியல் இயந்திரங்களாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளது.

இவை எதுவும் பவுத்த தேரர்களின் அத்துமீறலை நியாயப்படுத்துவதாக அமையாது. அரசியல் தேரர்களின் அசல் கருத்தாக்கம், ஐக்கிய தேசியக் கட்சி அவர்களை ஏளனமாக அப்போது அழைத்தது, ஒரு செயற்பாட்டாளர் மற்றும் தீவிர மதகுருமார்களின் பாதையில் இருந்தது: அரசியல் பவுத்தத்தின் முன்மாதிரிகள், வல்பொல இராகுல மற்றும் உடகெண்டாவல ஸ்ரீ சாரணங்கர **(Walpola Rahula and Udakendawala Sri Saranankara)** ஆகிய இரண்டு மார்க்சிய தேரர்கள் ஆவர்.

(தொடர்ச்சி 19ம் பக்கம்)




# உண்மைத்தொண்டனை வாழ்த்தி மறைந்த பெருந்தலைவர்



(அக்.1 நடிகர்திலகம் பிறந்தநாள்)
(அக்.2 பெருந்தலைவர் மறைந்த நாள்)

அக்டோபர் முதல் தேதியும், இரண்டாம் தேதியும் தமிழ்நாட்டின் வரலாற்றில் இரண்டறக்கலந்தவை. இவ்விரு நாட்களும் மூன்று நினைவுகளைத்தருகின்றன.

அக்டோபர் 1: தமிழ்த்திரையுலகின் இமயமாக உயர்ந்த நடிகர் திலகம் சிவாஜிகணேசன் பிறந்தநாள். அடுத்த நாள் இந்திய தேசப்பிதா மகாத்மாகாந்தி பிறந்தநாள்.

"அகிம்சை மூலம் ஒரு நாட்டின் விடுதலையை அடைய முடியும்" என்று இந்த அவனிக்கு உணர்த்திய உத்தமர் காந்தி பிறந்த அதே அக்டோபர் இரண்டாம் நாளில் தான், காந்தியின் அடியொற்றி நடந்து "கருப்பு (காலா) காந்தி" என்று அழைக்கப்பட்ட பெருந்தலைவர் காமராஜர், 1975-ம் ஆண்டில் இம்மண்ணுலகை விட்டு மறைந்தார்.

பெருந்தலைவருக்கு லட்சோப லட்சம் தொண்டர்கள் உண்டு. அவர்களில் உன்னதமான ஒரு தொண்டர் உண்டு என்றால், அது நடிகர் திலகம் சிவாஜிகணேசன் மட்டுமே. தமிழ் சினிமாவின் உச்சம் தொட்ட நடிகர் அவர். ஆனால் பெருந்தலைவருக்கு பணிவான தொண்டர். ஆரம்ப காலத்தில் திமுகவில் இருந்த சிவாஜிகணேசன் அங்கு ஏற்பட்ட மனக்கசப்புகளால் வெளியேறி, காமராஜரின் தலைமையை ஏற்று காங்கிரசுக்கு வந்து விட்டார்.

அப்போது காமராஜர் காட்டிய பாசம் சிவாஜியை நெகிழச்செய்தது. எனவே காமராஜரின் அன்புக்கு அடிமையாகி விட்டார்.

காமராஜரிடம் அளவு கடந்த "பக்தி" கொண்டிருந்த சிவாஜி, காங்கிரஸ் கட்சியில் பதவி எதையும் எதிர்பாராமல் "கர்மவீரர் புகழ் பாடுவதே என் லட்சியம்" எனப்பணியாற்றினார்.

காமராஜர் பொதுவாக சினிமாவே பார்ப்பதில்லை. ஆனால் சிவாஜிக்காகவே, ராஜபார்ட் ரங்கதுரை படத்தைப்பார்த்து, அவரை வெகுவாகப் பாராட்டினார்.

வீரபாண்டிய கட்டபொம்மன் திரைப்படமாவதற்கு முன், நாடக வடிவில் சிவாஜி நடித்ததன்மூலம் வசூலான 35 லட்ச ரூபாயை (இன்றைய மதிப்பு பலகோடி) காமராஜர் மூலம் அரசிடம் வழங்கி, பள்ளிக்கட்டிடங்கள் கட்ட உதவினார். காமராஜர் தொடங்கிய மதிய உணவுத்திட்டத்திற்கும் நிதி உதவி அளித்தார்.

வீரபாண்டியகட்டபொம்மன் படம், சிவாஜியின் திரையுலக வரலாற்றில் மிகப்பெரும் சாதனையை நிகழ்த்திய படம். எகிப்து நாட்டில் ஆசிய ஆப்பிரிக்க படவிழாவில் வெள்ளிப்பருந்து சிலையை இப்படம் பெற்றது. தனது மனதில் நீங்கா இடம் பெற்ற கட்டபொம்மனுக்கு நெல்லைக்கு அருகில் கயத்தாறில் சிலை வைக்க வேண்டும் என்று சிவாஜி விரும்பினார், நடிகர் திலகம். (கட்டபொம்மன், ஆங்கிலேயர்களால் தூக்கிலிடப்பட்ட இடம் தான் கயத்தாறு).

எனவே, சிவாஜி அங்கே சொந்தமாக ஒரு இடத்தை வாங்கி (47 சென்ட் நிலம்) கட்டபொம்மனின் சிலையை நிறுவினார். சிலை திறப்பு விழா 1970-ம் வருடம் ஜூலை மாதம் 16-ம் நாள் நடைபெற்றது. அன்றைய பழைய காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான சஞ்சீவ ரெட்டி தலைமை வகிக்க பெருந்தலைவர் காமராஜர், கட்டபொம்மன் சிலையை திறந்து வைத்தார்.

பிற்காலத்தில் அந்த இடத்தை தமிழக அரசுக்கு எழுதிக் கொடுத்த சிவாஜி, ஆண்டுதோறும் அரசு சார்பில் கட்டபொம்மனுக்கு மரியாதை செய்யப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அதன்பேரில் கட்டபொம்மன் சிலைக்கு அரசு ஆண்டுதோறும் மரியாதை செலுத்தி வருகிறது.

1975-ம் ஆண்டு அக்டோபர் முதல் நாள். சிவாஜிக்கு 46-வது பிறந்த நாள்.

பெருந்தலைவர் காமராஜர், இரண்டு ஆள் உயர மாலை வாங்கிக் கொண்டு சிவாஜியின் இல்லந்தேடி வந்தார்.

தன் இதயத்தில் வைத்துப்போற்றும் உன்னத தலைவன் வீடு தேடிவந்த மகிழ்ச்சியில் சிவாஜி திக்குமுக்காடிப்போனார்.

சிவாஜிக்கு மாலை அணிவித்து வாழ்த்திய பெருந்தலைவர், "நன்றாக இரு" என்று ஒருமுறை இருமுறை அல்ல் நான்கு முறை மனதார வாழ்த்திவிட்டுப் போனார். அது தான் அந்த பாசத்தலைவனுக்கும், அன்புத் தொண்டனுக்கும் கடைசி சந்திப்பு என்பது இருவருக்குமே தெரிந்திருக்கவில்லை.

மறுநாள் காந்தி பிறந்த நாள். அன்று காலை காந்தி சிலைக்கு மாலை அணிவித்த சட்டக் கல்லூரி மாணவர்கள் 50 பேர் காமராஜரை சந்தித்தனர். அவர்களை சந்தித்து விட்டு வீட்டிற்குள் சென்ற காமராஜர், வழக்கமாய் சாப்பிடும் மோருக்கு பதிலாக 2 தம்ளர் வெந்நீர் வாங்கிக் குடித்தார். சிறிது நேரம் கழித்து வெந்நீரில் குளித்துவிட்டு சாப்பிடச் சென்றார். சாப்பிடும்போது அவருக்கு தலை எல்லாம் வியர்த்தது. சாப்பிட்டு விட்டு வழக்கம் போல தூங்குவதற்காக தனது அறைக்குச் சென்று அவர் படுத்த பின்னரும் வியர்வை ஓயவில்லை. தனது உடலில் ஏற்பட்ட மாறுதலை உணர்ந்து, கட்டிலுக்கு அருகே இருந்த டெலிபோனில் அவரே டாக்டரை உடனே வரும்படி அழைத்தார். டாக்டர் வருவதற்கு முன்னரே, காமராஜரின் உயிர் பிரிந்துவிட்டது.

இறப்பதற்கு சில வினாடிகளுக்கு முன் வியர்வையை துடைத்து விட்ட உதவியாளரிடம் "போகும்போது விளக்கை அணைத்து விட்டுப்போ" என்று காமராஜர் கூறினார். "இதுதான் அவரது கடைசி வார்த்தை" என்று கண்களில் கண்ணீர் வழிந்தோட, அந்த உதவியாளர் தழுதழுத்த குரலில் கூறினார்.

காமராஜர் மறைந்தபோது, சிவாஜிகணேசன் "பாட்டும் பரதமும்" படத்தில் நடித்துக்கொண்டு இருந்தார். படப்பிடிப்பு தளத்தில் பெருந்தலைவரின் மரணச்செய்தி தெரிவிக்கப்பட்டதும் அவர் கதறி அழுதுகொண்டு திருமலைப்பிள்ளை ரோட்டில் உள்ள காமராஜர் இல்லத்திற்கு விரைந்தார். தலைவர் உடலைப்பார்த்து இடைவிடாமல் கண்ணீர் வடித்துக்கொண்டே இருந்தார்.

மறுநாள் காமராஜர் உடல் தகனம் செய்யப்படும் வரை கூடவே இருந்து இறுதிக்காரியங்களை கவனித்தார்.

அடுத்த ஓரிரு நாளில் காமராஜருக்கு இரங்கல் தெரிவிக்கும் கூட்டம், சென்னை தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் நடந்தது. அன்றைய முதல் - அமைச்சர் கருணாநிதி பங்கேற்ற இந்த கூட்டத்தில் சிவாஜி கணேசன் கலந்து கொண்டார். அவர் ஒலிபெருக்கி முன் வந்து நின்றதும், உணர்ச்சி மிகுதியால் கண்ணீர் விட்டு அழுதார். கண்ணீர் வடிய அவர் பேசுகையில், "என் பிறந்தநாளன்று பெருந்தலைவர் என் வீட்டுக்கு வாழ்த்த வந்தார். வீட்டை விட்டுப் போகும்போது, "நான் போய்விட்டு வருகிறேன்" என்று நான்கு ஐந்து முறை கூறினார். அவர் ஏன் அப்படி திரும்பத் திரும்பச் சொன்னார் என்பது அக்டோபர் 2-ந் தேதிதான், இந்தப் பாவிக்கு புரிந்தது" என்றார்.


பாசப்பிணைப்புக்கு பெயர் பெற்ற இந்த தலைவரும், தொண்டனும் உயிர் வாழ்ந்த காலமும் ஏறக்குறைய ஒரே கால அளவாகவே அமைந்தன.

காமராஜர்: 15-07-1903 முதல் 2-10-1975 வரை: 72 வயது கடந்து 73-வது வயதில் மறைந்தார்.

சிவாஜி: 1-10-1928 முதல் 21-07-2001 வரை: 72 வயது கடந்து 73-வது வயதில் மறைந்தார்.

**- மணிராஜ், திருநெல்வேலி**

# ராஜராஜ சோழன் இந்து மன்னனா? வெற்றி மாறன் பேசியது உண்மை தான்.. என்கிறார் சீமான்






ராஜராஜ சோழனை இந்து மன்னனாக மாற்றி விட்டார்கள் என்று இயக்குநர் வெற்றி மாறன் பேசிய கருத்துக்கு நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் ஆதரவு தெரிவித்துள்ளார். ம.பொ. சிவஞானத்தின் 27ஆவது நினைவு தினத்தையொட்டி சென்னை தி.நகரில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு கீழே மலர்களால் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள படத்திற்கு நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் மரியாதை செலுத்தினார்.

இதனைத்தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து சீமான் கூறுகையில், தமிழக எல்லை மீட்புப் போராளி, சிலம்பு செல்வர் என்று மக்களால் அழைப்படக் கூடிய தலைவர் ம.பொ.சி. அவரது நினைவு நாளில் போற்றுவதில் பெருமையடைகிறோம் என்று தெரிவித்தார். தொடர்ந்து சினிமாவை திராவிடம் எடுத்துக்கொண்டதால் தான் அது மக்களுக்கான கலையாக மாறியது என்று வெற்றிமாறன் பேசிய கருத்து குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு, வெற்றிமாறன் சொன்னது உண்மைதான். குறிப்பிட்ட சமூகங்களிடம் இருந்த திரைக்கலையை பொதுமைப்படுத்தியது திராவிட இயக்கங்கள் தான். முன்னாள் முதலமைச்சர்களான அண்ணா, கருணாநிதி, எம்ஜிஆர் வரை திரைத்துறையில் இருந்தவர்கள். பராசக்தி படம் ஒரு புரட்சியை ஏற்படுத்தியது. யதார்த்த உரையாடல்களுக்கு கொண்டு வந்தது திராவிட இயக்க தலைவர்கள் தான். அதனால் வெற்றிமாறன் அப்படி குறிப்பிட்டுள்ளார். என்று தெரிவித்தார். தொடர்ந்து ராஜராஜ சோழனை இந்து மன்னனாக மாற்றிவிட்டார்கள் என்று வெற்றிமாறன் கூறிய கருத்துக்கு பதிலளித்த சீமான், ராஜராஜ சோழனை இந்து மன்னர் என்று கூறுவது எல்லாம் வேடிக்கையாக இருக்கிறது. இது வள்ளுவருக்கு காவி பூசியது போல் தான். அந்த காலத்தில் இந்த நாடும் கிடையாது, இந்த மதமும் கிடையாது. அவர் சிவனை வழிபட்ட சைவ மரபினர் என்று உலகிற்கே தெரியும். இன்றைய சூழலில் ஆரியம் ராஜராஜ சோழனை தனக்கானவராக மாற்றி வருகிறது. வெற்றிமாறன் இவற்றையெல்லாம், அனுமதிக்க கூடாது என்று சொல்கிறார் என்று தெரிவித்தார். விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவனின் 60 வது பிறந்தநாளை அக்கட்சியினர் மணிவிழாவில் பேசிய வெற்றிமாறன், நம்மிடம் இருந்து அடையாளங்கள் பறித்துக் கொண்டு இருக்கிறார்கள். வள்ளுவருக்கு காவி உடை கொடுப்பது, ராஜராஜ சோழனை இந்து அரசனாக்குவது இப்படி தொடர்ந்து நடந்துகொண்டு இருக்கிறது. இது சினிமாவிலும் நடக்கும்.சினிமாவிலும் நிறைய அடையாளங்களை எடுக்கிறார்கள். இந்த அடையாளங்களை நாம் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்று பேசியது அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

# கனடா உதயன் பத்திரிகையில் வெளிவந்த "வீணைமைந்தன்" எழுதிய "சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்" கட்டுரைத் தொடர் மணிமேகலை பிரசுரத்தாரால் சென்னையில் வெளியிடப்பெற்றது




கனடா உதயன் பத்திரிகையில் தொடராக வெளிவந்த "வீணைமைந்தன்" எழுதிய "சிவாஜி கணே-சனும் தமிழ்ச் சினிமாவும்" சென்னை மணிமேகலை பிரசுரத்தாரால் சென்னையில் வெளியிடப்பெற்றது.




18 சென்னை 2-10-2022 தினத்தந்தி

புத்தக மதிப்புரை

நடிகர் திலகம் சிவாஜியும் தமிழ் சினிமாவும்



இந்த வெளியீட்டு நிகழ்வில் கனடாவிலிருந்து எழுத்தாளர் "வீணைமைந்தன்" அவர்களும் கலந்து கொண்டார்.

கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் கவிஞரும் எழுத்தாளருமான நாகமணி லோகேந்திரலிங்கம் அவர்களின் ஏற்பாட்டில். நூலாசிரியரும், கனடாநாட்டில் வசிப்பவருமான வீணை மைந்தன் எழுதிய "நடிகர் திலகம் சிவாஜி கணேசனும், தமிழ் சினிமாவும்!" நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. இடமிருந்து மணிமேகலைப் பிரசுர மேலாளர் மோகன் ஆசிரியர் குழுத் தலைவர் லேனா தமிழ்வாணன் நூலாசிரியர் மணிமேகலைப் பிரசுர நிர்வாக இயக்குனர் ரவி தமிழ்வாணன் ஆகியோர் நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய்திருந்தனர். வைபவம் இடம்பெற்ற இடம்: தி. நகர், நாள்: 4.10.22 சென்னை.

# கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் ஆதரவில் நூல் வெளியீட்டு விழா

## பனி பொழியும் தேசத்தில் பத்து நாட்கள்




முனைவர் வே. சங்கரநாராயணன் கனடா உதயன் வார இதழில் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு.

**திகதி: 21-10-2022**

**நேரம்: மாலை 8:30**

**இடம்: கனடா கந்தசுவாமி ஆலய கலாச்சார மண்டபம்**
***(ஆலயத்தின் கீழ்த் தளத்தில் அமைந்துள்ளது)***

733 Birchmount Road, Scarborough, ON M1K 1R5

நூலாசிரியர் முனைவர் வே. சங்கரநாராயணன் அவர்கள் தமிழ்நாட்டிலிருந்து நேரடியாகக் கலந்து கொள்கின்றார். கனடா வாழ் படைப்பிலக்கியவாதிகளின் உரைகளும் இடம்பெறவுள்ளன.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:** (416) 732-1608, (416) 732-8021, (647) 244-0813

# நவராத்திரி விழா
## (நிலைமண்டில ஆசிரியப்பா)

-----------------------------

இந்துக்கள் கொண்டாடும் இரவுத் திருநாள்.
பந்துக்கள் சேர்ந்தே பட்சணம் செய்தே
சொந்த பந்தம் சினேகமாய்க் கூடியே
இந்த இரவுகளை இனிதாய்க் களிப்பர்
ஒன்பது நாட்கள் ஒன்றாய்ச் சேர்த்து
முன்மூன்று தினங்கள் முழுதாய்த் துர்க்கைக்கும்
பின்மூன்று இராக்கள் பிரியமாய் வாணிக்கும்
இன்னும் இலட்சுமிக்கு நடுமூன்று நாட்களும்
விருப்பொடு வினையற விரதம் இருந்தே
கருத்தொடு கண்கவர் கொலுவை அமைத்து
பருப்பொடு பலவகைப் படையல் செய்து
விருந்தினர் அழைத்தே விருந்து கொடுப்போம்
பத்தாம் நாளில் பற்றொடு பெற்றோர்
சொத்தான தமது சொந்தச் சிறார்க்கு
முத்தான கல்வியை மகிழ்வாய்த் தொடக்கியே
வித்தகனாய் வந்திட வழிதேடிக் கொடுப்பர்
மானோன்பு நாளில் வன்னி மரத்தை
வானோரும் வாழ்த்தும் வண்ணம் வெட்டியே!
ஈனோரும் இந்நாளை ஈகையுடன் கொண்டாட
தேனோடு பாலாய்ச் சிறந்த நாளிதே
சுண்டலும் வடையும் சுவைமிகு அவலும்
பண்டம் மாற்றிப் பகிர்ந்து மகிழ்வோம்
கண்டம் தோறும் கலைந்து இருப்பினும்
பண்டிகை நாட்களைப் பண்பாய்ப் போற்றுவோமே!

-----------------------------

**ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன்.**
(416) 844-97453

# மார்க்கம் நகரசபைக்கு தேர்ந்தெடுக்கப்படக் கூடிய நல்ல வேட்பாளரான தீபக் தல்ரேஜா (Deepak Talreja- Ward-8) அவர்களுக்கு உங்கள் வாக்கை அளியுங்கள்



தீபக் தல்ரேஜா அவர்கள் சிறுவயதிலிருந்தே ஒரு விளையாட்டு வீரனாகத் திகழ்கின்றார். விளையாட்டு அனைவரையும் ஒன்றிணைக்கிறது மற்றும் வேறுபாடுகளைக் குறைக்க உதவுகிறது, நம்மைச் சுற்றியுள்ள பலரின் வாழ்க்கையில் பெரும் பங்கு வகிக்கிறது. மிக முக்கியமான விடயம், விளையாட்டு வீரர்கள் மற்றவர்களை கைவிட மாட்டார்கள். ஒரு சிறந்த தடகள வீரராக, பல்வேறு விளையாட்டுகளில் பல பதக்கங்கள் மற்றும் உலகக் கோப்பைகளில் வெற்றி பெற்றுள்ள இவர் ஒரு மனித நேயமிக்க ஒருவர்.

சிட்னி நோவா ஸ்கோசியாவில் சிட்னி நகரில் உள்ள கேப் பிரெட்டன் பல்கலைக்கழகத்திற்கான மாணவர் சங்க சர்வதேச மாணவர் ஆலோசகராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் எமது வேட்பாளர் தீபக் தல்ரேஜா அவர்கள். அத்துடன் அவர் பல்வேறு இலாப நோக்கற்ற மற்றும் தன்னார்வ நிறுவனங்களில் தலைமைப் பாத்திரங்களில் பணியாற்றி வருகின்றார்.

மேலும், தீபக் தல்ரேஜா அவர்கள கடந்த பத்து ஆண்டுகளாக யோர்க் பிராந்திய காவல்துறையில் ஒரு சிறப்பு நிகழ்வுகள் மற்றும் சின்னமாக தன்னார்வத் தொண்டு செய்து வருகின்றார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்குத.

**நல்ல வேட்பாளரான தீபக் தல்ரேஜா (Deepak Talreja- Ward-8 Markham Council) அவர்களுக்கு உங்கள் வாக்கை அளியுங்கள்**

அவரது தொலைபேசி இலக்கம்: **(416) 452-0206**

**REGISTER TO CONFIRM YOUR VOTER IDENTIFICATION NUMBER :**

1.) Confirm the accuracy of the information.
2.) Update your residence address information.
3.) Add your name to the Municipal Voters List.




## STEELES PODIATRY CLINIC

**கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்**

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE



5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
**416.298.FOOT (3668)**



## LOOKING FOR YOUR *Dream House?*



Call **SEYON CHANDRAKUMAR**

647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM

RE/MAX ROYAL PROPERTIES

7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8

BUYING | SELLING | INVESTING


JOE LI
Re-Eelect
Regional Councillor
Vote: October 14-24, 2022
நிதிப் பொறுப்பு மற்றும் ஒற்றுமையுடன் சமூகத்திற்கு சேவை செய்தல்
இவரது கடந்த கால முக்கிய சாதனைகள்:
தொடர்ந்து 19 ஆண்டுகளாக மார்க்கம் நகரசபையின் விருப்ப வரவு செலவுத் திட்டத்தில் நிதிப் பொறுப்பு- பூச்சியம் டாலர்கள் செலவிடப்பட்டது. 100,000 டாலர்களுக்கு மேல் வரி செலுத்துவோரின் நிதி சேமிக்கப்பட்டது
மார்க்கம் நகர சபைக்கு உட்பட்ட பகுதியில், தானியங்கி கழிவு சேகரிப்பு அமைப்பை ஏற்று சபையின் ஒப்புதலைப் பெற்றமை
யோர்க் பிராந்திய போக்குவரத்து நிறுவனத்தின் பேருந்து தங்குமிடங்களில் புதிய போக்குவரத்து நேர திறன் அமைப்பை உருவாக்குவதற்கு ஜோ லீ அவர்கள் தலைமை தாங்கினார்
யோர்க் பிராந்திய குடிமக்கள் தங்கள் பிராந்தியத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் பிரேரணையை இவரே முன்வைத்தார்.
2022-2026க்கான ஜோ லியின் பார்வை
சொத்து வரிகளை குறைவாக வைத்திருத்தல் மற்றும் நகர சபையின் தேவையற்ற செலவுகளை கட்டுப்படுத்துதல்
லாங்ஸ்டா∴ப் மற்றும் மார்க்கம் மேம்பாட்டு மையங்களில் தானியங்கி கழிவு சேகரிப்பு முறையை செயல்படுத்துதல்
அனைத்து மலிவு மற்றும் வாடகை வீட்டுத் திட்டங்களை விரைவாகக் கண்காணிக்கும் திட்டத்தை உருவாக்குதல்
PUBLIC SAFETY
சமூக பாதுகாப்பு முன் முயற்சிகளுக்கான ஆதாரங்களை வழங்குதல்
தேர்ந்தெடுக்கப்பட்ட யோர்க் பிராந்தியத் தலைவருக்கான ஜனநாயக செயல்முறையை மீண்டும் நிறுவுதல்
Campaign Office: 165 Gibson Dr, Markham L3R-3K7
Tel: (647) 479-8738 Website: www.joeli.ca
Email: reelectjoeli@gmail.com


tasty தமிழா
தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக உலகெங்கும்...
பனை வெல்லம்
தேன் நெல்லி
மரச்செக்கு எண்ணெய்கள்
சுக்கு மல்லி காபி தூள்
யாழ். கறித்தூள்
இலங்கை மற்றும் தென்னிந்திய மசாலா பொருட்கள் பாரம்பரிய உணவு வகைகள்..
கனடாவில்
Tasty தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்..
MAHAANS PICK & PRESS OIL MILL INC
Organic Bulk Store & Water Filling Station
5635 Finch Ave East,
Unit 5, Scarborough M1B 5K9.
Call: 416 293 4010
MAHAANS
PICK & PRESS OIL MILL INC


UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL-2022
Title Sponsor
TEAM BLUE FORCE
teamblueforce.ca
RE/MAX BLUE FORCE 416 333 6660
Presented by
VIBRANT HOSPITALITY GROUP
விழா சிறப்புற நடைபெற எமது நல்வாழ்த்துக்கள்
Managing and Developing Hospitality Sector for More than 25 Years
Shankar Nallathamby, CHA (Director)
416 270 4343 - shankar@vhgcanada.com
Powered by
MAHAANS
5635 Finch Ave E Unit# 5, Toronto, ON M1B 5K9, Canada
+1 (647) 704-4597
பாரம்பரிய முறைப்படி மரசெக்கில் தயாரிக்கப்பட்ட நல்லெண்ணை, தேங்காய் எண்ணை, கடலை எண்ணை இங்கு கிடைக்கும்.
உதயன் விருது UTHAYAN AWARD Uthayan International Awards 2022
16 வது ஆண்டில்
கனடா உதயன் சர்வதேச விருது விழா
உலகெங்கும் பேசப்படும் இவ்வருட விழாவில் வழங்கப் பெறவுள்ள
உதயன் விருதுகளின் பட்டியல்
UTHAYAN LITERARY AND ARTISTIC EXUBERANCE AWARD
UTHAYAN INTER-COMMUNAL RELATIONSHIP AWARD
UTHAYAN BUSINESS ENTREPRENEUR AWARD - ONTARIO
UTHAYAN BUSINESS ENTREPRENEUR AWARD - QUEBEC
UTHAYAN LEADERSHIP AWARD
UTHAYAN YOUTH ICON AWARD
UTHAYAN LIFETIME ACHIEVEMENT AWARD - SRI LANKA
UTHAYAN LIFETIME ACHIEVEMENT AWARD - TAMIL NADU
விருது வழங்கலும் இராசப்போசன விருந்தும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்
'Rhythm of Rishi'
Veenai isai
வீணை இசை
Saturday October 15th, 2022 at 6.00 pm
Co-Presented by
தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக உலகெங்கும்...
Tasty தமிழா
இவ்விழா நடைபெறும் மண்டபம்
Kennedy Convention Centre
1199 Kennedy Rd, Scarborough, ON M1P 2L2
(Kennedy & Lawrence Inter-section)
For More Information, call 416 732 1608 or 647 762 9512

உதயனின் பிரத்தியேகச் செய்தி

# யாரும் இல்லாத பருத்தித்தீவின் இரகசியங்கள்

## ஆபத்துக்கள் நிறைந்த துணிச்சலான தனது பயணம் பற்றி : யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்




**சீ**னாக்காரர்கள் அடிக்கடி கடற்படை உதவியுடன் வட கடல் பகுதிக்கு சென்று வருவது என்னை சற்று சிந்திக்க வைத்தது. உள்ளூர் கடற்தொழிலாளர்கள் கூட செல்ல அச்சப்படும் பருத்தித்தீவிற்கு சென்று பார்க்க வேண்டும் என்ற அவா நீண்ட நாட்களாகவே எனக்குள் இருந்தது. அப்படி அண்மையில் ஆபத்து நிறைந்தது என்று தெரிந்தும் ஒரு ஊடகவியலாளர் என்கிற முறையில் செய்தி சேகரிப்பில் இருந்த ஆர்வம் காரணமாக பருத்தித்தீவை நோக்கி சூரிய உதயத்தின் போது பயணத்தேன். இந்தப் பயணத்திற்கு ஒரு படகை ஒழுங்குபடுத்துவதில் இருந்த சிரமங்களே தனிக்கட்டுரையாகும்.

அந்தப் பயணம் மற்றும் நான் நேரில் அவதானித்தவை ஆகியவற்றை கனடா உதயன் வாசகர்களுடன் பகிர்ந்துகொள்கிறேன்:

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடல் கடந்த தீவகப் பகுதியில் பலரும் அறிந்திராத தீவுகளில் ஒன்றான பருத்தித்தீவில் உள்ள கடலட்டைப் பண்ணைகள் சீனாவின் முதலீட்டிலேயே இயங்குவதாகவே நம்புகின்றோம் என தீவக மீனவ அமைப்புக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்தின் கீழ் நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு என்பன மக்கள் வாழும் கடல் கடந்த தீவுகளாக உள்ளன. இதேநேரம் கடல் கடந்து மக்கள் வாழாத தீவுகளில் ஒன்றுதான் பருத்தித்தீவு.

இந்த தீவானது எழுவைதீவு மற்றும் அனலைதீவு என்பனவற்றின் இடையே ஒரேயொரு கத்தோலிக்க தேவாலயத்தை மட்டும் கொண்டுள்ள தீவாகவும். இந்த தீவை ஒட்டியே 10 ஏக்கரில் கடல் அட்டைப் பண்ணை அமைக்க 2020 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஒரேயொருவர் அனுமதியைப் பெற்றார். இவ்வாறு பெற்ற அனுமதியும் 2021இல் காலவதியான நிலையில் தற்போது எவரது எந்த அனுமதியும் இன்றி மூவர் கடல் அட்டைப் பண்ணை நடாத்துவதாக அப்பகுதி மீனவ சங்கங்கள் குற்றஞ்சாட்டிய நிலையில் அப்பகுதிக்கு நேரில் சென்று பார்வையிடுவது என எண்ணி தனியான நேரடிப் பயணத்தை மேற்கொண்டோம்.



இதன் பிரகாரம் பருத்தித்தீவின் அருகே கடலில் அமைக்கப்பட்டுள்ள கடல் அட்டைப் பண்ணையை நேரில் சென்று பார்வையிட்டபோது குறைந்தது 40 ஏக்கர் பரப்பளவில் அந்த பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளதை காணும் போது அதிர்ச்சி மேலிட்டது. அந்த பண்ணையில் பலர் நிற்கும் நிலையில் உள்ளூராட்சி சபையின் உறுப்பினர் ஒருவரும் இருப்பதும் தெளிவாகத் தெரிந்தது.


இவ்வாறு அந்தப் பண்ணையை நடாத்தும் உள்ளூராட்சி சபை உறுப்பினர் கடற்றொழில் அமைச்சரின் கட்சியை சார்ந்த உறுப்பினராகவே உள்ளார். இதேநேரம் இந்த 40 ஏக்கரிற்கும் மேற்பட்ட பண்ணைகள் ஒரு திசையால் அனலைதீவு இறங்கு துறையை நெருங்குகின்றதோடு மறுபுறத்தில் பருத்தித்தீவு தேவாலாயத்தின் வருடாத்த உற்சவ காலத்தில் படகுகள் செல்லும் பாதையினையும் ஆக்கிரமிக்கின்றன.

இவை தொடர்பில் எழுவைதீவு மீனவர்கள் தெரிவிக்கையில் "இன்று எமது தீவில் வாழும் மக்களின் 90 வீத தொழில் கடல் தொழில்தான். நாம் எழுவைதீவு கடலையும் இந்த பருத்தி தீவை அண்டிய கடலையும் நம்பியே வாழும் நிலைமையில் இறால் பண்ணைகள் மற்றும் பெரு நண்டுகள் அதிகம் காணப்படும் பிரதேசங்களை வெளிநாட்டு வருமானம் கிடைக்கும் என்னும் பெயரில் பிறருக்கு தாரை வார்க்கப்படுகின்றது" என்றார்.

தனது கருத்துக்களை மேலும் பகிர்ந்துகொண்ட அவர் "உண்மையில் கடல் உணவுகளில் இறால் காலத்தில் இறாலும், பெரு நண்டு காலத்தில் பெரு நண்டினையும் எமது மீனவர்கள் பிடிப்பதன் மூலம் அந்நியச் செலவாணியையும் எம்மாலும் ஈட்ட முடியும். ஏனெனில் இன்று பெரு நண்டு ஒரு கிலோ 8 ஆயிரம் ரூபாவிற்கு எம்மிடம் கொள்வனவு செய்யப்படுகின்றது. அதேபோல் நல்ல இறால் 3 ஆயிரம் ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது. ஆனாலும் எமக்கு எதுவும் மிஞ்சுவதில்லை" என்றார்.

இவ்வாறு இறாலும் பெரு நண்டும் இயற்கையாக பெருகக்கூடிய இடங்களை கடல் அட்டைப் பண்ணைகளிற்கு தாரை வார்த்துவிட்டு கடற்றொழில் அமைச்சானது இறால் வளர்ப்பிற்கு செயற்கையாக தரையில் பண்ணை அமைக்கின்றனர். இவ்வாறு இயற்கை மீன்பிடிகளை அழித்து செயற்கை பண்ணைகள் அதிகமாக அமைப்பதிலும் எமக்கு சந்தேகம் உள்ளது என அப்பகுதி மீனவர்கள் கவலையும் அச்சமும் வெளியிட்டனர்.

இதேநேரம் அனலைதீவு மீனவர் சங்க தலைவர் ஜோன் பொஸ்கோ (குட்டிமாமா) என்பவர் "எம்மை அழிக்கும் இந்த கடல் அட்டைப் பண்ணைகள் இந்த இடத்தில் வேண்டாம் என என கடற்றொழில் திணைக்களம், பிரதேச செயலகம், நெக்டா ஆகியவற்றுடன் கடற்றொழில் அமைச்சர் வரைக்கும் நேரில் சென்று எமது ஆட்சேபனையை தெரிவித்து விட்டோம். இவ்வாறு ஆட்சேபனையை தெரிவித்துள்ள பண்ணையை அகற்றுமாறு கோரும் காலத்தில் 10 ஏக்கருக்கும் குறைந்த அளவு பண்ணையே காணப்பட்டது. இன்று அனுமன் வால் நீண்டதுபோல் கிலோ மீற்றர் கணக்கிற்கு நீண்டு விட்டது. இதனை யாரிடம் கேட்பது, யார் பார்ப்பது என்பதுகூடத் தெரியவில்லை. எமது சிறிய படகு தொழிலாளர்கள்கூட வெளியேற முடியாத அளவிற்கு பண்ணைகள் அண்மித்துவிட்டன" என்றார்.



பருத்தித்தீவை அண்டிய கடல்ப் பகுதியில் மிகப் பெரும் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள கடல் அட்டைப் பண்ணைகளிற்கு பிரதேச செயலகம் அனுமதி வழங்கியுள்ளதா என ஊர்காவற்றுறைப் பிரதேச செயலாளரான திருமதி. மஞ்சுளாவை கேட்டேன்.

"2018ஆம் ஆண்டு முதல் ஒரு நிறுவனம் விண்ணப்பித்த போதும் அங்கே எவருக்கும் அனுமதி வழங்க வேண்டாம் என உள்ளூர் மீனவ அமைப்புக்கள் தெரிவித்தமைக்கு அமைய எம்மால் இதுவரை எந்த ஒரு தனியாளிற்கோ அல்லது நிறுவனத்திற்கோ ஒரு இடத்திற்கும் அனுமதி வழங்கப்படவில்லை" என்றார்.

அதேவேளை கடல் அட்டைப் பண்ணைக்கான அனுமதி ஏதும் வழங்கப்பட்டதா என தேசிய நீர்வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின்ன் வடக்கு மாகாணப் பிரதிப் பணிப்பாளர் நிருபராஜை தொடர்பு கொண்டு கேட்டேன்.

"ஒரு நிறுவனத்திற்கு மட்டும் பரீட்சார்த்தமாக 2020ஆம் ஆண்டு ஒரு வருட நிபந்தனையில் 10 ஏக்கருக்கு வழங்கப்பட்டபோதும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத காரணத்தினால் புதுப்பித்த அனுமதி ஏதும் எம்மால் வழங்கப்படவில்லை" என்றார்.

ஆனால் பருத்தித்தீவில் 40 ஏக்கர் அளவிற்கு கடல் அட்டைப் பண்ணை எவ்வாறு உருவானது என்ற கேள்விக்கு பதிலேதும் யாரிடமும் இல்லை.

இவ்வாறு மீனவர்களும் திணைக்களங்களும் கை விரிக்கும் கடல் அட்டைப் பண்ணை தொடர்பில் வடக்கு மாகாண மீனவ அமைப்பு என்ற வகையில் விபரம் ஏதும் தெரியுமா இது தொடர்பில் உரிய அதிகாரிகளை தொடர்ப கொண்டீர்களா என்று வட மாகாண மீனவர்கள் சங்கங்களின் தலைவரில் ஒருவரான அ.அன்ராசவிடம் வினவினேன்.

"இது தொடர்பில் உள்ளூர் மீனவ அமைப்புக்களை நேரடியாக அழைத்துச் சென்று உரிய தரப்புக்களுடன் கலந்துரையாட ஏற்பாடு செய்யப்பட்டபோதும் அந்த உள்ளூர் மீனவர்களின் கோரிக்கைகளிற்கு எங்குமே செவிசாய்க்கப்படவில்லை. இதன் காரணமாகவே அவர்கள் தற்போது ஊடகவியலாளர்களை நேரடியாகவே தொடர்புகொள்கின்றனர். இதேநேரம் அவற்றை தடுக்க வேண்டிய தரப்புக்களின் ஓர் பிரதிநிதியே அங்கே பண்ணையில் நேரடியாக நிற்பதும் பல சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது" என்றார்.

இவற்றின் அடிப்படையில் பருத்தித்தீவில் உள்ள கடலட்டைப் பண்ணைகள் சீனாவின் முதலீட்டிலேயே இயங்குவதாகவே நம்புகின்றோம் என தீவக மீனவ அமைப்புக்கள் குற்றம் சாட்டுவதனை ஆராய்ந்த தினத்தில் யாழ் நகரில் இருந்து ஊர்காவற்றுறை வரையில் காரில் பயணித்து வழமையான பயணிகள் சேவை படகில் சீனர் ஒருவர் எழுவைதீவிற்கு பயணிக்க எழுவைதீவில் இருந்து பதிவு செய்யப்படாத படகு ஒன்றின் மூலம் பருத்தித்தீவு கடல் அட்டைப் பண்ணைக்கு இம்மாதம் 2ஆம் திகதி காலையில் சென்று மாலையில் யாழ் நகரிற்கு திரும்பியுள்ளார்.

கடலோர பாதுகாப்புத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் விஷ்ணுவை பல முறை தொடர்பு கொண்டு கேட்டபோதும் ஆவணங்களை சோதித்து பதில் கூறுவதாக தெரிவிக்கப்பட்டதே அன்றி உரிய பதில் அளிக்கவில்லை.

பருத்தித்தீவு இவ்வாறெனில் 168 குடும்பங்களைச் சேர்ந்த 760 மக்கள் வாழும் எழுவைதீவின் நிலையும் மிக மோசமாகவே காணப்படுகின்றது. 90 வீதம் கடலை மட்டுமே வாழும் அந்த மக்களில் மிகவும் மூத்த மீனவரைத் தேடினோம். "60 வருடங்களாக கடல் தொழில் அனுபவத்தில் தற்போது எதிர்கொள்ளும் நெருக்கடி போன்று யுத்த காலங்களில்கூட அவலத்தைச் சந்திக்கவில்லை" என எழுவைதீவைச் சேர்ந்த கடற்றொழிலாளி யேசுதாஸ் எமக்குத் தெரிவித்தார்.

யேசுதாஸிடம் மேலும் பேச்சுக் கொடுத்தேன். அதன்போது "எனக்கு தற்போது 76 வயது நடக்கின்றது நான் 16 வயதில் கடலில் இறங்கியவன் தற்போது 3 வருடமாக நான் நேரடியாக கடலிற்கு செல்லாது விட்டாலும் வலை தெரிவு, சரிபார்த்தல், படகுகரை உள்ளிட்ட உதவித் தொழிலை பிள்ளைகளுடன் இணைந்து மேற்கொளகின்றேன்".

தற்போது மண்ணெண்ணை கிழமைக்கு 30 முதல் 40 லீற்றர் கிடைக்கின்றது. உண்மையில் இந்தக் காலம் நண்டுத் தொழில் காலம். நண்டுக்கு சென்று வர இரு நாளிற்கே இந்த எரிபொருள் போதுமானது. எரிபொருளின் விலையும் 380 ரூபாவாக இருந்தபோதும் அந்த விலைக்கும் தேவையான எரிபொருள் கிடைப்பதில்லை என்று தொடர்ந்து விளக்கினார் யேசுதாஸ்.

இரண்டு தொழிலாளி பயணிக்க வேண்டும், 20 லீற்றர் எண்ணை வேண்டும், இயந்திரம், படகு ஆகியவற்றுடன் முக்கியமாக பல லட்சம் பெறுமதியான வலை என்பவற்றை பாவித்தே 40 கிலோவிற்கு உட்பட்ட நண்டைப் பெற முடியும். அவ்வாறு பெறும் நண்டு கடந்த வாரம் வரையில் ஒரு கிலோ எம்மிடம் 2 ஆயிரத்து 700 ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்பட்டது. ஆனால் இன்று 2 ஆயிரம் ரூபாவிற்கே கொள்வனவு செய்கின்றனர். இதேநேரம் இந்த விலை ஆயிரத்து 900ஆக குறைக்கப்படும் எனவும் கூறப்பட்டு விட்டது என்றும் யேசுதாஸ் ஆதங்கப்பட்டார்.

"1974 ஆம் ஆண்டு சிறிமாவின் இறக்குமதிக் காலமோ அல்லது 1983 ஆம் ஆண்டு இனக் கலவர காலமாகட்டும் 1990 ஆம் ஆண்டு, 2006ஆம் ஆண்டு யுத்த காலங்களில் தொழிலிற்கே செல்லாத காலத்தில்கூட நாம் இவ்வாறான நெருக்கடியை சந்திக்கவில்லை".

இன்று நாட்டில் ஒரு கிலோ கோதுமை மாவு 430 ரூபாவாகவும், 400 கிராம் கொண்ட ஒரு அங்கர் பால்மா பக்கேற் ஆயிரந்து 200 ரூபாவிற்கும் விற்பனையாகின்றது. எம்மால் இவற்றை பெற்றுக்கொள்ள முடியவில்லை. அவை உற்பத்தியாளனின் விலை. ஆனால் மீனவன் பிடிக்கும் கடல் உற்பத்திக்கான விலைகள் மட்டும் ஏற்றுமதி செய்யும் முதலாளி தீர்மானிப்பதே விலையாகவுள்ளது. இதேநேரம் தீவகத்தில் வசிக்கும் எமக்கு எந்த நன்மையோ தீமையோ ஏற்பாட்டால் அதற்கு பயணிக்கவும் இந்த எரிபொருளே தேவையான நிலைமையில் நாம் இங்கே வாழ பெரும் நெருக்கடியை சந்திக்கின்றோம் என்றார்.

இவற்றையெல்லாம் ஆவணமாக்கியவாறு மாலை 6 மணிக்கு மீண்டும் ஊர்காவற்றுறை நோக்கிப் பயணித்தேன்.



உதயனின் பிரத்தியேகச் செய்தி

# தமிழர்களின் இதயபூமியான மணலாறில் மீண்டும் 15 ஆயிரம் ஏக்கர் சிங்கள மயம்

- யாழ்ப்பாணத்தில் இருந்து நடராசா லோகதயாளன்



முல்லைத்தீவு மாவட்டத்தின் 6 தமிழ்க் கிராமங்களை வெலிஓயாவுடன் இணைத்து சிங்கள மயப்படுத்த இரகசியத் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ள அதிர்ச்சி தகவல் இப்போது வெளியாகியுள்ளது.

அதற்கான ஆவணங்களை கனடா உதயன் கண்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கீழ் சட்டப்படியாக அன்றி வெறும் சுற்று நிருபத்தினால் மட்டுமே நிர்வகிக்கப்படும் 114.4 சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவான வெலிஓயா என தற்போது அரசினால் அழைக்கப்படும் தமிழர்களின் பூர்வீக நிலமான மணலாறு உள்ளிட்ட பகுதிகள் "மகாவலி எல் வலயம்" என மகாவலி அதிகார சபை வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டது.

இதற்கு எதிராக நீண்ட காலமாகவே தமிழர் தரப்பு குரல்கொடுத்த நிலையில் தற்போதைய கரைத்துரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள 6 கிராம சேவகர் பிரிவுகளையும் வெலிஓயாவுடன் சேர்க்க 2018 ஆம் ஆண்டு இரகசிய திட்டம் வகுக்கப்பட்டபோது நல்லாட்சி அரசிற்கு எதிராக கூட்டமைப்பு குரல் கொடுத்து தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டது. இதன் பின்னர் 2020 ஆம் ஆண்டிலும் இரகசிய முயற்சி இடம்பெற்றபோதும் தடுத்து நிறுத்தப்பட்டது.

இதன் பின்பு கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்ட இத்திட்டம் ரணில் அரசில் தற்போது மிகவும் இரகசியமாக நகர்த்தப்படுகின்றது என்பது கனடா உதயனின் புலனாய்வில் தெரியவந்துள்ளது.

இதற்காக அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றித் தருமாறு 2022-09-26 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் ஒன்றை நீர்ப்பாசன அமைச்சர் ரொசான் ரணசிங்க அமைச்சரவை அலுவலகத்திற்கு இரகசியமாக அனுப்பி வைத்துள்ளார்.

ரொசான் ரணசிங்கவினால் இரகசியமாக அனுப்பப்பட்ட கடிதத்திற்கு IR/2022/40 என அமைச்சரவை விஞ்ஞாபன இலக்கமிட்டு அது அடுத்த கட்டத்திற்கு நகர்த்தப்பட்டுள்ளது.

இந்த அமைச்சரவைப் பத்திரம் நிறைவேற்றப்பட்டால் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள கொக்குளாய் முதல் நாயாறு வரையுள்ள



06 கிராம சேவகர் பிரிவுகள் முழுமையாக வெலிஓயா என்னும் சிங்கள பிரதேச செயலாளர் பிரிவுடன் இணைக்கப்படும். இவ்வாறு இணைக்கப்படும் கிராமங்களின் கீழ் பாரம்பரியமாக தமிழர்களுக்குச் சொந்தமான 6 ஆயிரம் ஹெக்டேர் நிலம் அதாவது 15 ஆயிரம் ஏக்கர் விழுங்கப்படும்.

இவ்வாறு விழுங்க முயற்சிக்கப்படும் பிரதேசத்தில் 901 தமிழ் குடும்பங்களும், 269 சிங்களக் குடும்பங்களும் ஒரு முஸ்லீம் குடும்பமும் உள்ளதாக அமைச்சின் அமைச்சரவை அறிவித்தலில் அறிக்கையிடப்பட்ட போதும் இங்கே வாழும் சிங்கள குடும்பங்களில் அதிகமானவை கடற்தொழில் செய்வதற்கான அனுமதியின் பெயரில் தங்கி வாழ்பவர்கள் என அப்பகுதி மக்கள் நீண்ட காலமாகவே குற்றம் சாட்டுகின்றனர்.

இதனால் தமது பூர்வீக நிலமான கொக்குளாய் கிழக்கு, கொக்குளாய் மேற்கு, கருநாட்டக்கேணி, கொக்குத்தொடுவாய் மத்தி, கொக்குத்தொடுவாய் வடக்கு ஆகியவற்றுடன் செம்மலை ஆகிய கிராமங்கள் பறிபோவதுடன் வளம் மிக்க பிரதேசங்களையும் இழக்க நேரிடும் என்று அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.



இவை தொடர்பில் கருத்துரைத்த முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் கருத்து தெரிவிக்கையில், "1983ஆம் ஆண்டிற்கு முன்னர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த 38 குடும்பங்கள் தொழில் புரிந்த நிலையில் இன்று 269 குடும்பங்கள் இருக்கின்றனர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஏற்கனவே முல்லைத்தீவு மாவட்டத்தின் தெற்குப் பகுதியில் ஜே.ஆர் மேற்கொண்ட நரித்தனத்தினால் அமைக்கப்பட்ட திறந்தவெளிச் சிறைச்சாலையே தற்போது வெலிஓயா என எமது இதய பூமியை விழுங்கி நிற்கின்றது. இந்தச் சிறைச்சாலையில் கொண்டு வந்து இருத்தியவர்கள் ஆரம்பத்தில் கைதிகளேயாகும். அதாவது தமிழர்களையும் சிங்களவர்களையும் மோதவிடுவதற்கு என்றே திட்டமிட்டு உரிவாக்கிய குடியேற்றத்திட்டம்தான் இது" என்று வரலாற்று ரீதியாக விளக்கினார்.

தற்போது வெலிஓயா பிரதேச செயலகப் பிரிவில் மக்கள் தொகை 9 ஆயிரம் பேராக பல்கிப் பெருகி நிற்கின்றதனால் அவர்களிற்கு 114 சதுர கிலோ மீற்றர் போதவில்லை. இதறகாக காணி விழுங்கும் அமைச்சுக்களில் ஒன்றான மகாவலி அதிகார சபையின் திருட்டுத்தனமான வர்த்தமானி மூலம் நிலம் பிடித்து அந்த சிங்க மக்களைக் குளிர்விக்க முயற்சிக்கப்படுகின்றது என்றும் அவர் குற்றஞ்சாட்டுகிறார்.

"இலங்கையில் மகாவலி அதிகார சபை என ஓர் ஆக்கிரமிப்புச் சபை உருவாக்கப்பட்டது முதல் தமிழர்களின் தாயகத்தை விழுங்கி சிங்கவர்களிற்கு தாரை வார்த்தனரே அன்றி ஒரு தமிழனிற்கு இன்றுவரை ஒரு காணி அனுமதிப்பத்திரம் வழங்கியது கிடையாது. இதறகு பெயரா அபிவிருத்தி" எனவும் துரைராசா ரவிகரன் வினவினார்.



இதேநேரம் குறித்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் கனடா உதயனிடம் கருத்து தெரிவிக்கையில், "இந்த விடயம் ஏற்கனவே பல தடவை தடுக்கப்பட்டதனால் இம்முறை திருட்டுத்தனமாக நகர்த்தப்படுகின்றது. இவ்வாறு 6 தமிழ்க் கிராமங்களையும் கபளீகரம் செய்து வெலிஓயா பெருப்பிக்கப்பட்டதும் வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவு முழுமையாக அனுராதபுரம் மாவட்டத்துடன் இணைக்கப்படும். அதன் பின்பு அங்கே வாழும் தமிழ் மக்களின் அனைத்து உரிமையும் மறுக்கப்படும்போது அவர்களை அங்கிருந்தும் புலம்பெயர வைக்க முடியும் என அரசு கருதுகின்றது" என்றார்.

இந்த சூழலையே ரணில் அரசும் இன்று ஏற்படுத்த முனைகின்றது. இதற்கு அரசோடு ஒட்டி நிற்கும் குழுக்களும் உடந்தையாக செயல்பட்டு தமிழின அழிப்பிற்குத் துணை போகின்றனர் என்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன்.

இதற்கு எதிராக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சகல வழிகளிலும் போராடும் எனத் தெரிவித்த அவர், அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தங்களை அழைத்துக் கதைத்தபோது, தான் இது தொடர்பில் ஜனாதிபதியிடம் நிபந்தனையாகவே தெரிவித்ததாகவும் "அதாவது முல்லைத்தீவில் மகாவலி அதிகார சபை பிடித்து வர்த்தமானி அறிவித்தல் விட்டுள்ள பகுதிகளில் குடியேற்றம் இடம்பெற்றுள்ள பகுதிகள் தவிர்ந்த ஏனையவை அனைத்தும் விடுவிக்க வேண்டும்" எனச் சுட்டிக்காட்டியதாகவும் சாள்ஸ் நிர்மலநாதன் குறிப்பிட்டார்.



இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி அந்த அமைச்சின் செயலாளரிடம் இருந்து விபரங்களைப் பெற்று பரிசீலித்து கூறுவதாக தெரிவித்த நிலையில் இதனை தமிழர் தரப்பு அனுமதிக்கவே முடியாது என்றார்.

# யாழ் மாவட்டத்தில் மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

தெல்லிப்பழையில் ஏற்பட்ட இடி மின்னல் காரணமாக 34 வயது விவசாயி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

அப்படி உயிரிழந்தவர் தெல்லிப்பழையைச் சேர்ந்த மகாலிங்கம் ராகவன் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை அம்பனைப் பகுதியில் வியாழக்கிழமை (6) காலை ஏற்பட்ட மழைப் பொழிவின்போது இடி மின்னல் தாக்கமும் காணப்பட்டது.

இவ்வாறு காணப்பட்ட இடி மின்னல் தாக்கத்தின்போது தனது தோட்டத்தில் நின்று பணியாற்றிய மகாலிங்கம் ராகவனை இடி மின்னல் தாக்கியுள்ளது.

இதனையடுத்து தாக்கத்திறகு இலக்கான அவர் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு அவசரமாக கொண்டு சென்ற சமயம் அவரை வைத்தியர் பரிசோதித்த வைத்தியர்கள் ஏறகனவே அவர் உயிரிழந்திருந்ததை உறுதி செய்தனர்.

உயிரிழந்தவரது உடலம் பிரேத பரிசோதனைக்காக தெல்லிப்பழை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் இலங்கையில் குறைந்தது 40 பேர் மின்னல் தாக்குதலில் பலியாகின்றனர் என்று அரச வானிலை அவதானிப்பு திணைக்களம் கூறுகிறது.



# யாழ் பல்கலைக்கழகத்துக்குச் சீனா 43 இலட்சம் நிதியுதவி

- எமது யாழ் செய்தியாளர்




யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மாணவர்களின் எதிர்ப்பினையும் மீறி யாழ் பல்கலைக் கழக நிர்வாகம் சீன அரசிடம் இருந்து நிதியைப் பெற்றுக் கொண்டதுள்ளது விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் நலச்சேவைகளுக்கென சீனத் தூதரகத்தினால் ரூபா 43 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

சீனத் தூதரின் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட இந்த நிதியுதவியைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை (2) கொழும்பிலுள்ள சீனத்தூதரகத்தில் இலங்கைக்கான சீனத் தூதுவர் சி சென் ஹொங் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவிடம் இந்த நிதியைக் கையளித்தார்.

இந்த நிகழ்வில் சீனத்தூதுவரின் முதற் செயலாளர் லீ ஜிங்ரே, யாழ். பல்கலைக்கழக மாணவர் நலச் சேவைகள் பணிப்பாளர் கலாநிதி சி. ராஜ்உமேஸ், சீனத்தூதுவர் நிதியுதவிக்கான யாழ். பல்கலைக்கழக இணைப்பாளர் கலாநிதி மு. ணிகைச்செல்வன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

2016 ஆம் ஆண்டு முதல் இலங்கையிலுள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கு சீனத் தூதவரின் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் நிதியுதவி பங்கிட்டு வழங்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கும், கிழக்கு பல்கலைக்கழகத்துக்கும் மட்டுமே முழுத் தொகையும் பங்கிட்டு வழங்கப்பட்டுள்ளது.

சீனத் தூதரகத்தின் இந்த நிதியுதவியின் கீழ் மாணவர்களுக்கான மாதாந்த உதவிப்பணம் உட்பட பல நலனோம்புச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று பல்கலைக்கழக நலச்சேவைகள் பிரிவு அறிவித்துள்ளது.

இதேநேரம் ஐ.நாவில் இலங்கைக்கு பக்க பலமாக இருந்து இலங்கையைக் காப்போம் எனச் சீன பகிரங்கமாக கருத்து தெரிவித்ததால் இந்தப்பணத்தைப் பெறுவதற்கான ஒப்பந்தம் இடம்பெறாக் கூடாது என்று மாணவர்கள் பகிரங்கமாகவே கருத்து தெரிவித்திருத்தனர்.

இவ்வாறு மாணவர்கள் தெரிவித்த கருத்தின் காரணமாகவே கடந்த மாதம் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்ட ஒப்பந்த நிகழ்வு ரத்தானது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மட்டுமின்றி இலங்கையில் மற்ற பல்கலைக்கழகங்களுக்கும் சீனா நிதியுதவி அளித்து வருகிறது.

போருக்குப் பின்னரான காலத்தில் வட மாகாணத்தை இலக்கு வைத்து சீனா பல முன்னெடுப்புகளைச் செய்து வருகிறது. அதன் மூலம் உள்ளூர் மக்கள் பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று யாழ் மாநகர மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.



# யாழ் மாநகர சபைக்கு தீயணைப்பு வாகனம் கையளிப்பு

## நொதோர்ன் தனியார் வைத்தியசாலை ஸ்தாபகர் எஸ்.பி.சாமியால் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டது.

- எமது யாழ் செய்தியாளர்



யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் உள்ள நொதோர்ன் தனியார் வைத்தியசாலை ஸ்தாபகர் எஸ்.பி.சாமியால் யாழ் மாநகர சபைக்கு இரண்டு கோடி ரூபாய் பெறுமதியான தீயணைப்பு வாகனம் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டது.

நொதோர்ன் தனியார் வைத்தியசாலையில் புதன்கிழமை (5) காலை இடம்பெற்ற நிகழ்வில் குறித்த தீயணைப்பு வாகனம் அந்த நிர்வாகத்தினரால் யாழ் மாநகர சபைக்கு வழங்கி வைக்கப்பட்டது.

தீயணைப்பு வாகனத்தை கையளிக்கும் நிகழ்வானது மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அந்த நிகழ்வில் நொதோர்ன் தனியார் வைத்தியசாலை நிர்வாகத்தினர், யாழ் மாநகர முதல்வர், யாழ்ப்பாண மாவட்டச் செயலர், யாழ் மாநகர ஆணையாளர், யாழ் மாநகரசபை உறுப்பினர்கள் மற்றும் யாழ் வணிகர் கழக பிரதிநிதிகள், தீயணைப்பு படை பிரிவு உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

கடந்த 2020 ஆம் ஆண்டு யாழ் மாநகர சபைக்கு சொந்தமான தீயணைப்பு வாகனம் விபத்தில் முற்றாக சேதமடைந்திருந்த நிலையில் யாழ் வணிகர் கழகத்தின் ஒருங்கிணைப்பில் நொதோர்ன் தனியார் வைத்தியசாலை ஸ்தாபகர் எஸ்.பி.சாமியால் இந்த வாகனம் யாழ் மாநகர சபைக்கு கையளிக்கப்பட்டது.



(11ம் பக்கத் தொடர்ச்சி)

# நாட்டு நிலையில் ஒரு முக்கிய மாற்றம்

பின்னவர் 1957 இல் லெனின் அமைதிப் பரிசைப் பெற்றவர். ஆனால் இதுபோன்ற மாற்றங்களால் அடிக்கடி நிகழும் இந்த மென்மையான, மனிதநேய, பவுத்த மதகுருமார்களின் தீவிரக் கருத்து சிதைந்து, இப்போது சகிப்புத்தன்மையின் எதிரொலியாக மாறியுள்ளது. ரெஜி சிறிவர்த்தன ஒன்றுக்கு மேற்பட்ட முறை அவதானித்ததைப் போல, பவுத்த தேரர்கள் ஒரு தாமஸ் மன்ட்ஸரின் **(Thomas Müntzer)** பாணியில் தீவிரமான சமூக மற்றும் அரசியல் மாற்றத்திற்கான அணிவகுப்பு முழக்கமாக தங்கள் கட்டளைகள் மற்றும் பலவற்றைப் பயன்படுத்துவதை புறக்கணித்தனர். அதற்குப் பதிலாக, அவர்கள் இந்த மதிப்புகளை நிலைநிறுத்தவும், மேலும் தங்களை நீட்டிப்பதற்காகவும் பயன்படுத்தினார்கள்.

இவை அனைத்தும் ஒன்றோடொன்று தொடர்வுடையன. பவுத்த விகாரைகளின் பொருளாதார அடித்தளம் முன்பு இருந்ததைப் போல் இல்லை. ஆனால் கீழ்நிலை விவசாயிகள் தங்கள் குழந்தைகளை பொருளாதார துயரத்திலிருந்து விடுபடுவதற்கான வழி என்று இன்னும் கருதுகின்றனர். மேற்கத்திய, தாராளவாத மற்றும் கொழும்பை மையமாகக் கொண்ட வர்ணனையாளர்களாலும் பிந்தைய விடயம் தவறவிடப்பட்டுள்ளது: இராணுவத்தைப் போல் அல்லாமல், புத்த கோயில் கிராமப்புற மானியமாக மாறியுள்ளது. இதனால் ஏழை விவசாய இளைஞர்கள் வறுமையின் பிடியிலிருந்து தப்பிக்க முடியும். ஏனெனில், 1950 களில் இருந்து, பவுத்த மதகுருமார்கள் அரசின் மானியங்களின் பயனாளிகளாக மாறியுள்ளனர்: இதுவே சமீபத்திய எதிர்ப்புக்களுக்கு முக்கிய காரணம்.

அரசாங்கம் தனது நகர்வுகளைக் கவனமாகவும், தந்திரோபாயமாகவும் நகர்த்தி வருகிறது., அரசின் மானியங்களுக்காகக் கூக்குரலிடும் தேரர்கள் சோம்பேறிகள் என்றும் அவர்களுக்கு சாதகமான சலுகைகளை அளிக்க முடியாது என அரசாங்கம் கருதுகிறது. மதகுருமார்களைச் சந்தித்து, சமீபத்திய கட்டணத் திருத்தங்களுக்கு எதிரான எழுச்சியைப் பற்றி அவர்களுக்கு உறுதியளித்து, எதிர்க்கட்சியும் அதன் சீட்டுகளை மூலோபாயமாக நகர்த்தி வருகிறது. அரசாங்கத்திற்கு எதிரான எதிர்க்கட்சிகளுக்கு தலைமை தாங்கும் ஐக்கிய மக்கள் சக்தி **(SJB)**, கட்டணத் திருத்தங்கள் மற்றும் நவதாராளவாத சீர்திருத்தங்களுக்கு ஆதரவான நா.உறுப்பினர்களின் ஆதரவில் தங்கியுள்ளது. இந்தச் சிக்கலுக்கான அதன் அணுகுமுறை அதன் முரண்பாடான தன்மையை வெளிப்படுத்துகிறது. இதனை ஐக்கிய மக்கள் சக்தி பற்றிய தனது விமர்சனத்தில் கலாநிதி தயான் ஜயதிலக்கா சுட்டிக்காட்டியுள்ளார். அரசுக்கும் மதகுருமார்களுக்கும் இடையிலான உறவுகளில் இதன் பொருள் என்னவென்றால், தேரர்களின் ஆதரவையும் ஒப்புதலையும் பெற்ற ஒரு அரசாங்கம் இப்போது அவர்களின் வெறுப்புக்கு ஆளாகியுள்ளது. அதே நேரத்தில் எதிர்க்கட்சி நா. உறுப்பினர்கள் பவுத்த தேரர்களின் செல்லப்பிள்ளைகளாக மாறியுள்ளார்கள்.

பொதுமக்களின் பதில் இன்னும் கவர்ச்சியாக உள்ளது. சமூக ஊடகப் பதிவுகள் மற்றும் புகழ்ச்சிகளைப் **(memes)** பார்க்கும்போது, இந்த உயர்வுகள் சமூகத்தில் ஒரு அடிப்படையான, எரிச்சலூட்டும் மற்றும் மறைக்கப்பட்ட மதகுரு எதிர்ப்பு உணர்வை வெளிப்படுத்தியது என்று முடிவு செய்வது மிகையாகாது. நிச்சயமாக, சமூக ஊடகம் என்பது இலங்கை சமூகத்தில் பெரிய அளவில் இல்லை. குறிப்பாக ட்விட்டருக்கு **(Twitter)** வரும்போது, அது ஒரு தன்னிறைவான மற்றும் சுயமாக வரையறுக்கப்பட்ட இடமாகும். இருப்பினும் சமூக ஊடகப் புகழ்ச்சிகள் பரந்த மற்றும் பரவலான உணர்வுகளின் குறிப்பிடத்தக்க துல்லியமான அளவீடு ஆகும்.

அந்த வகையில், சமீபத்திய எதிர்ப்புகள் பற்றிய புகழ்ச்சிகளைப் பொறுத்தவரை, இலங்கையர்கள் இரண்டு புள்ளிகளில் வாழ்கின்றனர்: சாதாரண மக்கள் மீது அரசு துன்பங்களைத் திணித்தபோது தேரர்கள் எதுவும் செய்யவில்லை. மேலும் அந்த மக்கள் மீது அதிக சுமைகள் சுமத்தப்படுகிறபோது தேரர்கள் தங்களுக்கு சாதகமான முறையில் அரசாங்கம் செயல்பட வேண்டும் என்று கேட்கிறார்கள்.

இந்த இரண்டு புள்ளிகளும் இந்த நிறுவனங்கள் மீதான விரோதத்தின் பெரிய, பரந்த உணர்வுகளை பிரதிபலிக்கின்றன என்று சொல்லலாம். இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, தேரர்கள் தங்களுக்கு விருப்பமான அரசியல்வாதிகளுக்கு ஆதரவாக என்ன வேண்டுமானாலும் சொல்லலாம். அந்த அரசியல்வாதிகளுக்கு தேர்தல் வேலை செய்வதற்கு தொண்டர்களை அனுப்ப முடியும். இது ஒரு குறிப்பிடத்தக்க திருப்பமாகும். இப்போது அரசியல்வாதிகள் ஆதரவற்றவர்களாகி, மக்கள் மத்தியில் தமக்கான இடத்தை இழந்துவிட்டதால், அத்தகைய நபர்களின் ஆதரவாளர்களாகக் கருதப்பட்டவர்கள் தங்கள் மதிப்பை இழந்துவிட்டனர். இதில் பவுத்த விகாரைகள் மற்றும் தேரர்கள் உள்ளடங்குவர். சனாதிபதி விக்கிரமசிங்க கூறியது போல், பெரிய மடாலயங்கள் கடுமையான கட்டண உயர்வுகளை எதிர்கொண்டுள்ளன. மக்கள் சுயநலத்தால் தூண்டப்படுகிறார்கள் என்று நம்பும் எனது நண்பர் என்னிடம் குறிப்பிட்டார், அரசுக்கு எதிராக மக்கள் கிளர்ந்து எழுந்த போது அரசியல்வாதிகளுக்கு பணிவு மற்றும் சகிப்புத்தன்மையை தேரர்கள் போதித்தார்கள். அதேமாதிரி இப்போது அரசுக்கு எதிராக தேரர்கள் கிளர்ந்து எழுமாறு தேரர்கள் பொது மக்கள்ளைக் கேட்கும் அதே பணிவு மற்றும் சகிப்புத்தன்னையை கடைப்பிடிக்குமாறு மக்கள் தேரர்களைக் கேட்க வேண்டும்.

இந்த மறுசீரமைப்புகளை எதிர்க்கட்சியும் அரசாங்கமும் கவனத்தில் கொள்வது நல்லது. உணவு, எரிவாயு மற்றும் எரிபொருளைக் கண்டறிவதற்கான உடனடித் தேவையைக் காட்டிலும், குறைந்த பட்சம் ஒரு குறுகிய காலத்திற்கு, மக்கள் அற்ப கலாச்சார விடயங்கள் பற்றி கவனம் செலுத்தக் கூடாது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால் பொருளாதாரம், சித்தாந்தை வெற்றி கொண்டுள்ளது. இருப்பினும் சித்தாந்தம் மக்களின் அதிருப்திக்கு அடிப்படையாக இருந்தது. தேரர்கள் மக்களது எதிர்ப்புகளுக்கு எவ்வாறு பதிலளித்தார்கள் என்பதை நினைவில் வைத்துக் கொண்டால், அடுத்த தேர்தல் வரும்போது அரசாங்கம் என்ன செய்வதென்று மலைக்கக் கூடும். மாறாக எதிர்கட்சிக்கு தேர்தல் சாதகமாக இருக்கும். எவ்வாறாயினும், மக்கள் அரசியல்வாதிகள் மற்றும் தேரர்கள் என இருசாரார் மீதும் சலிப்படைந்துள்ளார்கள். அற்ப, குறுகிய கால தேர்தல் ஆதாயங்களுக்காக மதகுருமார்களின் அச்சங்களையும் குறைகளையும் பயன்படுத்திக் கொள்வதற்குப் பதிலாக, ஐக்கிய மக்கள் சக்தி இதனைக் கவனத்தில் கொள்வது நல்லது.

*கட்டுரையாளர் பன்னாட்டு உறவுகள் பற்றிய ஆய்வாளர், ஆராய்ச்சியாளர் மற்றும் பத்தியாளர் ஆவார். அவரை* ***udakdev1@gmail.com*** *இல் தொடர்ப கொள்ளலாம்.*

*இந்தக் கட்டுரையின் ஆங்கில மூலத்தை* ***https://island.lk/a-pivotal-shift-in-the-status-quo/*** *படிக்கலாம்.*

*தமிழாக்கம் கனடா நக்கீரன்.*

# ஜெனீவா தீர்மானங்களுடன் இலங்கையின் கடந்த காலமும் எதிர்காலமும்: நிறைவுப் பகுதி




ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தற்போதைய அமர்வில் சமர்ப்பிக்கப்படவுள்ள இலங்கை தொடர்பிலான வரைவுத் தீர்மானம் மற்றும் அதனை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து சுவிற்சர்லாந்தின் ஜெனீவாவில் நடைபெற்ற கலந்துரையாடல்களில் இருந்து சில கருத்துக்களையும் கடந்த வாரம் பார்த்தோம்.

ஜெனீவாவின் ஐ நா அமர்வு அறிவிக்கப்பட்டவுடன் பல தரப்புகள் தமது பிரயாண ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்துவிடுகின்றன. இதில் முக்கியமான வி'யம் ஜெனீவாவுக்கு யார், எதிற்காக செல்கிறார்கள் என்பதாகும்.

காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட, 2000 நாட்களுக்கும் மேலாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமலாக்கப்பட்ட தமிழ்க் குடும்பங்கள், 2006 ஆம் ஆண்டு திருகோணமலை கடற்கரையில் கொல்லப்பட்ட மாணவனின் தந்தையான கலாநிதி காசிப்பிள்ளை மனோகரன், இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து காணிகளை மீட்பதற்காகப் போராடும் சமூகத்தலைவர்கள் மற்றும் தொடர்ச்சியான கண்காணிப்பு, துன்புறுத்தல்கள், தாக்குதல்கள் மற்றும் தன்னிச்சையான கைதுகளுக்கு உள்ளான செயற்பாட்டாளர்கள் ஆகியோர் உட்பட பலர் நீதி கேட்டு ஜெனீவாவிற்குச் சென்றுள்ளனர்.

## ஏன் ஜெனீவா?

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து பேசுவதற்காக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜெனீவாவுக்குச் செல்கின்றனர். 1990களின் முற்பகுதியில் ஜெனீவா சென்ற முன்னாள் ஜனாதிபதியாக, பிரதமராக இருந்தவரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான மஹிந்த ராஜபக்' மற்றும் அவரது நண்பரான முன்னாள் அமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார ஆகியோர் ஆரம்ப காலத்தில் ஜெனீவா சென்ற எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆவர்.

தற்போது முதன்முறையாக ஜெனீவா சென்றவர்களில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் உண்மை மற்றும் நீதிக்காக குரல் கொடுத்துவரும் பிரபல இளம் கத்தோலிக்க செயற்பாட்டாளரான ஷெஹான் மாலக்கவும் கைது உட்பட பல்வேறு பழிவாங்கல்களுக்கு ஆளானவர் ஆவார். கடந்த வாரம் முதன்முறையாக ஜெனீவாவுக்குச் சென்ற மற்றுமொருவர் "அறகலய"வில் முக்கியமானதொரு பங்காற்றிய மனித உரிமைச் சட்டத்தரணியான நுவன் போபகே. இவர் "அறகலய" தொடர்பாக கைது செய்யப்பட்டு விசாரணைக்கு அழைக்கப்பட்ட பலர் சார்பாக சட்ட உதவிகளை வழங்கியிருந்தார். ஜூலை மாதம் அமைதியான போராட்ட தளத்தில் நடந்த தாக்குதலின் போது மற்றொரு நபரை பாதுகாக்க முயன்றபோது போபகேயும் தாக்கப்பட்டு கைது செய்யப்பட்டிருந்தார்.




குறைந்தபட்சம் ஒரு பௌத்த பிக்கு மற்றும் கிறிஸ்தவ மதகுருமார் உட்பட சமயத் தலைவர்களும் ஜெனீவாவிற்குச் சென்றுள்ளனர். ஜெனீவா சென்ற மிக முக்கியமான சமயத் தலைவர் கொழும்பு மறைமாவட்டத்தின் கத்தோலிக்க பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித். இந்த ஆண்டு மார்ச் மாதம் ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகரை கர்தினால் ரஞ்சித் சந்தித்ததோடல்லாது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் உரையாற்றி கடந்த ஆண்டு (2021) ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினால் தொடங்கப்பட்ட சாட்சியங்கள் சேகரிப்பினை தொடர்ந்தும் முன்கொண்டுசெல்லவும், உயிர்த்த ஞாயிறு படுகொலைகளின் பின்னணியில் உள்ள உண்மையை வெளிக்கொணர்வதற்கான பாரபட்சமற்ற ஒரு விசாரணையை உறுதி செய்யவும் ஆதரவு வழங்குமாறு கோரினார்.

பத்து வருடங்களுக்கு முன்னர் 2012ஆம் ஆண்டில் ஒரு தமிழ் கத்தோலிக்க ஆயர் மற்றும் மதகுருக்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கு கடிதம் எழுதி போர்க்கால அட்டூழியங்கள் குறித்து சர்வதேச விசாரணைகளைக் கோரியபோது, இதே கர்தினால் ரஞ்சித் அவர்கள் "ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் ஒரு தீர்மானத்தை முன்வைப்பதன் ஊடாக மேற்கத்திய நாடுகள் இலங்கையின் இறையாண்மையில் தலையிடுவதாக" குற்றம் சாட்டியிருந்தார். மேலும் இது இலங்கையர்களது "நுண்ணறிவுக்கு ஓர் அவமதிப்பு" எனவும் அவர் கூறினார். காலவோட்டத்தில் காட்சிகள் மாற நிலைப்பாடுகளும் மாறின.

வெறும் உள்நாட்டுப் பொறிமுறைகள் மூலம் உண்மையையும் நீதியையும் தேடுவதில் உள்ள சிரமங்களை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நிகழ்ந்து இரண்டே ஆண்டுகளில் அவர் உணர்ந்தது போல், தமிழ் கத்தோலிக்க மதகுருமார்களும், சந்தியா எக்னெலிகொட போன்ற காணாமலாக்கப்பட்டவர்களது குடும்பங்களும், 2000 நாட்களுக்கும் மேலாக போராட்டம் நடத்தி வரும் தமிழர்களும் பல ஆண்டுகளுக்கு முன்பே உணர்ந்து கொண்ட உண்மையாகும்.

இலங்கையினுள் உண்மையையும் நீதியையும் பெற இயலாத நிலைமை மற்றும் உள்நாட்டு செயற்பாடுகளில் மக்கள் நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்பை இழந்தமையே பல இலங்கையர்களை ஜெனீவாவின் புறமாகத் தள்ளுகிறது.




## ஜெனீவா எதனை வழங்குகிறது?

அவர்களது ஏமாற்றம், கோபம், உள்நாட்டு செயன்முறைகளில் நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்பு இன்மை ஆகியன ஜெனீவாவுக்குச் செல்வதற்கும் ஏனைய சர்வதேச ஈடுபாடுகளுக்குமான காரணங்கள் புரிந்துகொள்ளக்கூடியனவாக இருப்பினும், அவர்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை போன்ற ஐ.நா. செயன்முறைகளில் முதலீடு செய்த நேரம், ஆற்றல் மற்றும் பணத்தின் மூலம் என்ன பெற்றார்கள் என்பது குறித்து தெளிவில்லை.

இராஜதந்திரிகளுடனும் ஐ. நா அதிகாரிகளுடனும் ஜெனீவாவில் நடந்த மற்ற நிகழ்வுகளிலும் பேசுகின்ற வாய்ப்பைப் பெறுவது மிகவும் முக்கியமானது. முதல் கலந்துரையாடலின் முடிவில் சந்தியா எக்னெலிகொடவின் உளப்பூர்வமான கருத்துக்கள் இலங்கையர்கள் உட்பட அந்த அறையில் இருக்கும் இராஜதந்திரிகளுக்கும் ஒரு மனப்பதிவை ஏற்படுத்தியிருக்கும் என நான் நம்புகிறேன்.

ஐ.நா. போன்ற அரசுகளுக்கிடையேயான அமைப்புகளில் சர்வதேச அரசியல் நிலவுவதை தவிர்க்க முடியாது. ஆனாலும், உயிர் பிழைத்தவர்கள், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் பாதிக்கப்பட்ட சமூகங்களின் அனுபவங்களையும் உணர்வுகளையும் நெருக்கமாகப் பிரதிபலிக்கும் ஒரு கதையை அவை உலகிற்கு முன்வைப்பதோடு, அது இலங்கை அரசாங்கத்தின் கதையிலிருந்து மிகவும் வேறுபட்டதாகக் காணப்படுகிறது.

உதாரணமாக, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் போருக்குப் பிந்தைய மிகப்பெரிய படுகொலை எனவும், ஒரு "பெரும் அரசியல் சதி" எனவும் குற்றச்சாட்டுகள் இருந்தபோதிலும் 2020 மார்ச் மாதம் வெளியிடப்பட்ட மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் எழுத்துமூலமான இற்றைப்படுத்தலிலோ, 2021 மார்ச் மாதம் வெளியிடப்பட்ட விரிவான அறிக்கையிலோ இந்த தாக்குதல்கள் தொடர்பான தெளிவான குறிப்புகள் எதுவும் காணப்படவிலை.

கத்தோலிக்க மதகுருமார்கள் மற்றும் சிவில் செயற்பாட்டாளர்களின் சில முனைப்புடன் கூடிய பரப்புரைகளுக்குப் பிறகு, 2021 செப்டெம்பர் மாதம் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் வாய்மொழி மூலமான புதுப்பிப்பில் ஒரு சிறு குறிப்பும், 2022 மாதம் வெளியிடப்பட்ட அறிக்கையின் எழுத்துமூலமான இற்றைப்படுத்தலில் மேலதிகமான விரிவான குறிப்பும் இடம்பெற்றிருந்தன.

2022 செப்டம்பர் மாதம் வெளியிடப்பட்ட மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் விரிவான அறிக்கையில் "ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் முழுமையான தொகுதிகளும் பொதுமக்களுக்கு கிடைக்கப்பெற வேண்டும்" மற்றும் "சர்வதேச உதவியுடன் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது பிரதிநிதிகளின் முழுப் பங்கேற்புடன் இன்னும் சுயாதீனமான மற்றும் வெளிப்படையான விசாரணையைத் தொடர வேண்டும்" ஆகிய கோரிக்கைகள் உட்பட மிகவும் வலுவானதொரு குறிப்பு சேர்க்கப்பட்டுள்ளது. எனினும் ஏமாற்றமளிக்கும் வகையில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் உண்மையும் நீதியும் இல்லாதது குறித்து தற்போது நடைபெற்று வரும் இலங்கை தொடர்பான வரைவுத் தீர்மானத்தில் எந்தக் குறிப்பும் இல்லை. இதனால்தான் தாக்குதல்கள் தொடர்பான முழுமையான உண்மையையும், நீதியையும் முன்னெடுப்பதில் உறுதியாக உள்ளவர்கள் இவ்விடயம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமை பேரவையின் கவனத்தை ஈர்ப்பதில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த வரைவுத் தீர்மானம் ஆழமான இராணுவமயமாக்கல், நிர்வாகத்தில் பொறுப்புக்கூறல் இல்லாமை மற்றும் கடுமையான மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு தண்டனையின்மை உட்பட தற்போதைய நெருக்கடிக்கு பங்களித்த ஆட்சிமுறை சார் காரணிகள் மற்றும் அடிப்படையான காரணங்களை நிவர்த்தி செய்வதன் முக்கியத்துவத்தையும் ஒப்புக் கொண்டுள்ளது.

ஐ.நா. தீர்மானங்கள் மற்றும் அறிக்கைகள் காணாமலாக்கப்பட்டோர் அலுவலகம் போன்ற சில உள்நாட்டு நிறுவனங்களை நிறுவுதல், இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை விடுவித்தல், பலவந்தமாக காணாமலாக்கப்படுதல் மற்றும் கொலைகள் தொடர்பில் இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் சிறை அதிகாரிகளுக்கு எதிராக வழக்குகள் தொடுக்கப்படுதல், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலை நோக்கிய இலங்கைக்குள் நிகழ்ந்த சில நேர்ப்பாங்கான முன்னேற்றங்கள் என்பனவற்றுக்குப் பங்களிப்பை நல்கியுள்ளன.

மிகவும் தாமதமாக நிறுவப்பட்டாலும் 2021இல் நிறுவப்பட்ட சாட்சியங்களை சேகரிக்கும் பொறிமுறையானது, கொள்ளையிடப்பட்ட சொத்துக்களை முடக்குதல் மற்றும் மீட்டெடுத்தல், போர்க்கால அட்டூழியங்கள், உயிர்த்த ஞாயிறு படுகொலைகள், பொருளாதார குற்றங்கள் மற்றும் ஊழல்களுக்காக அரச அதிகாரிகள், அரசியல்வாதிகள் மற்றும் இராணுவ அதிகாரிகள் ஆகியோர் மீது வழக்குத்தொடுத்தல் ஆகியவற்றுக்குப் பங்களிக்கக்கூடும்.

## ஜெனீவாவுக்குச் செல்பவர்கள் துரோகிகளா?

ஜெனீவாவுக்குச் செல்லும் பலரும் அடிக்கடி துரோகிகள் என்று அழைக்கப்பட்டுள்ளனர்.

சந்தியா எக்னெலிகொட தனது கணவர் காணாமலாக்கப்பட்டமை தொடர்பில் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கும் போது, ஜெனீவா சென்றமை குறித்து அவரிடம் கடுமையாக கேள்வி எழுப்பப்பட்டது. அவர் ஜெனீவாவிற்கு சென்றது கணவர் காணாமலாக்கப்பட்ட பிறகே ஆகும். அதற்கும் காணாமலாக்கப்படுதலுக்கும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லை. அந்தக் கேள்விகளின் தொனிகள் ஐ.நா. மனித உரிமை பேரவைக்கு தனது கதையை கூறியதற்காகவும், அவரது கணவர் காணாமலாக்கப்பட்டது தொடர்பாக உண்மையையும் நீதியையும் கோரி சர்வதேச உதவியை நாடியதற்காகவும் அவரை இழிவுபடுத்துவதற்கும் துன்புறுத்துவதற்குமான ஒரு முனைப்பாகவே தோன்றின.

இது அரசியல்வாதிகள், ஊடகங்கள், சமயத் தலைவர்கள் போன்றவர்களால் பரப்பப்படும் "நாட்டிற்கு எதிரான தீர்மானம் / அறிக்கை" என்ற பிரபலமான பரப்புரை குறித்து இலங்கையர்கள் மறுபரிசீலனை செய்து கேள்வி எழுப்ப வேண்டிய தருணம் ஆகும். ஐ.நா. தீர்மானம் அல்லது அறிக்கை அரசாங்கத்தை விமர்சிக்கக்கூடும், பரிபூரணமற்றதாக இருக்கவும் கூடும். ஆனால், கடந்த சில தசாப்தங்களை உற்று நோக்கினால், காணாமலாக்கப்பட்ட அல்லது கொலைசெய்யப்பட்ட குடும்ப உறுப்பினர்கள் தொடர்பிலும் வேறு கவலைகள் சார்ந்தும் உண்மையையும் நீதியையும் தேடும் இலங்கை மக்களுக்கு அவர்கள் எதிரானவர்கள் அல்ல என்பது புலனாகிறது.

உண்மையையும் நீதியையும் கோரி ஜெனீவா செல்லும் இலங்கையர்கள் தொடர்பில் பூச்சாண்டி காட்டுவதை விடுத்து அரசியல்வாதிகள், ஊடகங்கள், சமயத் தலைவர்கள், நிபுணர்கள், கலைஞர்கள் போன்றவர்கள் அவர்களது கவலைகளை உணர்ந்து இலங்கையின் வீதிகளில், நீதிமன்றங்களில், ஊடகங்களில் அத்துடன் ஜெனிவா போன்ற சர்வதேச வெளிகளிலும் நீதி கேட்டுப் போராடுபவர்களின் அபிலாஷைகளுக்கும் போராட்டங்களுக்கும் தார்மீக ஆதரவை வழங்க வேண்டும்.





மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள்

1017



## மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம் மலையகம்

"தொண்டு செய்யாது நின் பாதம் தொழாது துணிந்திச்சையே
புண்டு செய்தார் உளரோ இலரோ அப்பரிசடியேன்
கண்டு செய்தால் அது கைதவமோ அன்றிச் செய்தவமோ
மிண்டுசெய்தாலும் பொறுக்கை நன்றேபின் வெறுக்கையன்றோ"

ஆரம்பகாலத்திலிருந்தே திராவிடமக்கள் பெண்தெய்வவழிபாட்டில் ஈடுபாடு கொண்டவர்களாகக் காணப்பட்டுள்ளனர். பண்டைய திராவிட மக்கள் தமக்கு வளங்களை வாரிக்கொடுத்த பூமியைப் போற்றி, தரைப் பெண்ணாக வழிபாடு செய்துள்ளனர். சிந்துவெளி நாகரிகத்தின் வெளிப்பாடாகப் போற்றப்படும் மொஹஞ்சதாரோ, ஹராப்பா போன்ற இடங்களில் கண்டெடுக்கப்பட்ட முத்திரகளில்லே, பெண்தெய்வ வடிவங்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. திராவிட, ஆரிய பண்டபாடுகள் கலந்து உருவாகிய இந்துசமயத்திலும், பெண்தெய்வ வழிபாடு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளமை கண்கூடு. ஆரியரின் பண்பாடும், ஆதிக்கமும் திராவிட வழிபாட்டு முறையிலே ஊடுருமுன், ஈழத்திலே ஆன்மார்த்த வழிபாடு மிக உன்னத நிலையிலே காணப்பட்டுள்ளது.

தாம் வாழும் சூழ்நிலைக்கேற்ப வழிபாட்டு முறைகளை அமைத்துக்கொள்வது, எல்லாச் சமூகங்களிடையேயும் காணப்படுகின்றது. பண்டைக்காலத்திலே தாய்மையைப் போற்றியதோடு, தாயை வழிபடும்முறையும் பெருவழக்காகக் காணப்பட்டுள்ளது. இம்மரபே பின்னர் அம்மன் வழிபாடாக மாற்றம் பெற்றது. சங்ககாலந்தொட்டு திராவிட மக்கள், வீரவழிபாட்டு முறையையும் போற்றி வந்துள்ளனர். கண்ணகை, நாச்சிமார், முத்துமாரி போன்ற வழிபாட்டு முறைகள் வீரவழிபாட்டின் வழிவந்தவையாகவே காணப்படுகின்றன. இவ்வாறான வீரவழிபாடு தழுவிய பல ஆலயங்கள், ஈழமெங்கும் பரவிக் காணப்படுகின்றது.

அழகுமிகு ஈழத்திருநாட்டின் மத்தியில் அமைந்துள்ள மலையகம், பல்வேறு சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டதாக விளங்குகின்றது. முழுமுதற்கடவுளின் திருப்பாதம் பதியப்பெற்ற, சிவனொளிபாதமலை அமைந்துள்ள வளமிகுபிரதேசம், மலையகம் எனில் மிகையாகாது. இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் உழைப்பால் உயிர்த்த. மலையகமெங்கும் அருள்நெறி பரப்பும் ஆலயங்கள் பல காணப்படுகின்றன. மலையகத்திலும் அன்னை வழிபாடு பிரசித்திபெற்ற வழிபாடாகக் காணப்படுகின்றது. இத்தயை வழிபாட்டுத் தலங்களுள் ஒன்றாக, மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் விளங்குகின்றது.

தற்காலத்திலே மாத்தளை என அழைக்கப்படும் இப்பிரதேசம், பண்டைக் காலத்திலே பன்னாகமம் என அழைக்கப்பட்டுள்ளது. பல், நாகம் என்பதிலிருந்தே பன்னாகமம் என்ற பெயர் உருவாயிற்று. ஆதியிலே நாகவழிபாடு உலகெங்கும் பின்பற்றப்பட்ட வழிபாடாகக் காணப்பட்டுள்ளது. ஈழத்தின் ஆதிக்குடிகளாகிய நாகர்களின் முதன்மைபெற்ற வழிபாடாகவும் நாகவழிபாடு திகழ்ந்துள்ளது. பன்னாகமத்திலும் நாகர்கள் வாழ்ந்துள்மைக்கு, பன்னாகமம் போன்ற பெயர்களே சான்றாகக் காணப்படுகின்றது. மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் ஆதிவரலாறும் நாகத்தோடு தொடர்புடையதாகவே காணப்படுகின்றது. பல தலைகளையுடைய நாகமொன்று ஸ்ரீ முத்துமாரியம்மனை வழிபட்டதாகக் கர்ணபரம்பரைக் கதையொன்று வழக்கிலுண்டு. இக்காரணத்தினாலேயே இப்பிரதேசத்திற்கு பன்னாகமம் என்ற பெயர் ஏற்பட்டதெனக் கூறுவர்.

ஈழத்திலே அருள்பிரவாகமெடுத்துக் காணப்படும் ஆலயங்கள் பலவற்றோடும் நாகவழிபாடும் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. நினைத்தமாத்திரத்தில் தாம் விரும்பிய உடலுக்குள் புகுந்து அருட்செயல்களை நிகழ்த்தியுள்ள சித்தர்கள், நாகவடிவிலே ஆலயங்களில் உறைவதாக முன்னோர்கள் கூறியுள்ளனர். பிறர் அறியாது விரைந்து தம்மை மறைத்துக்கொள்ளவும், தேவையேற்பட்ட காலத்தில் அச்சுறுத்தவும், நாகவடிவம் ஏற்றதாகக் கொள்ளப்படுகின்றது. பல ஆலயங்களிலே சித்தர்களும், ஞானியரும் வாழ்ந்து தமது பூதஉடலை விட்டுவிட்டு, அங்கேயே தங்கியிருந்து விக்கிரகங்களின்மூலம் தம்மைநாடிவரும் பக்தர்களுக்கு, அருள்பாலிப்பதாகக் கூறப்பட்டுள்ளது. நாடெங்கும் ஆலயங்கள் பரந்து காணப்பட்டபோதிலும், ஒருசில ஆலயங்கள் அருள்பிரவாகமுள்ள ஆலயங்களாக அமைவதற்கு, இவ்வாறான சக்தியே காரணமாகக் கருதப்படுகின்றது. நாகவழிபாட்டோடு தொடர்புடைய மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயமும், அருள்பிரவாகமுள்ள ஆலயமாகக் காணப்படுவதோடு, பல்லாயிரக்கணக்கான மக்கள் அந்தச் சக்தியை ஆத்மார்த்தமாக அனுபவித்துள்ளனர்.

ஈழத்தின் மத்தியில் அமைந்துள்ள, மலையகத்தின் வடக்கு வாயிலாகத் திகழும் மாத்தளை மாவட்டம், பல்வேறு சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டதாகக் காணப்படுகின்றது. சங்க காலத்தே போற்றப்பட்ட ஐவகை நிலங்களான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியவற்றுள், குறிஞ்சி, முல்லை, மருதம் ஆகிய மூன்று நில அமைவுகளையும் கொண்டதாக மாத்தளை மாவட்டம் காணப்படுகின்றது. ஈழத்தை ஆட்சிசெய்தவனும், சாமகானப் பிரியனும், திராவிட மன்னாக விளங்கிய வீரனுமாகிய இராவணனுடைய கோட்டை, மாத்தளை மாவட்டத்திலுள்ள இரத்தினங்கள் நிறைந்த, "லக்கல" என்ற பகுதியிலே அமைந்துள்ளதாக, ஆராய்ச்சியாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். சிங்கள மக்கள் எழுதாமறையாகப் போற்றும் திரிபீடகம், மாத்தளை மாநகரில் அமைந்துள்ள அலுவிகாரையிலேயே எழுதப்பட்டது. இலங்கை விடுதலைப்போரில் சுதந்திர வேட்கையுடன் போரிட்ட முத்துசாமிநாயக்கர் என்பவர், மாத்தளை மண்ணின் வீரமைந்தனாகப் போற்றப்படுகின்றார்.

இவ்வாறான சிறப்புக்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்ட புகழ்பெற்ற மாத்தளை நகரிலே, அன்னை ஸ்ரீ முத்துமாரி எழுந்தருளி அருள்பாலிக்கின்றாள். ஏழுஅருவிகள் கொட்டும் அற்புதமான சூழலில் எழுந்தருளியுள்ள, அன்னையின் ஆலயம் அமைந்துள்ள பிரதேசத்தின் நாற்புறமும், பல ஆலயங்கள் காவல் அரண்போலக் காணப்படுகின்றன. இவ்வருவிகள் கொட்டும் அழகுமலைக்குன்றுகளுக்குக் கிழக்கே, சுதுகங்கைத்தீர்த்தம் காணப்படுகின்றது. இத்தீர்த்தத்திற்கு மேற்கே, சோழன்காமம் என்னும் திருநாமத்தால் அழைக்கப்பட்ட, சுனங்காமம் பிள்ளையார் ஆலயம் காணப்படுகின்றது. இவ்வாலயத்திற்கு வடக்கே, வெள்ளைக்கல் ஸ்ரீ அழகர்பெருமாள் ஆலயமும், இவ்வாலயத்திற்குத் தெற்கே, மந்தண்டாவளை வழிப்பிள்ளையார் ஆலயம் மற்றும் ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலயம், ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமிகள் ஆலயம், ஸ்ரீ ஏழுமுகக் காளியம்மன் ஆலயம் ஆகியனவும் காணப்படுகின்றன.

*வளரும்...*

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

ALL DEBT SOLUTIONS CR PLAN

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோண்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு




நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077



# தமிழ்க் கட்சிகளும் பொறுப்புக் கூறவேண்டும்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

**ஜெ**னிவா கூட்டத்தொடரில் கலந்து கொள்வதற்காக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் அங்கு போயிருக்கிறார். அங்கிருந்து அவர் வழங்கிய நேர்காணல்களில் அவர் ஒரு விடயத்தை திரும்பத் திரும்ப சுட்டிக்காட்டுகின்றார். அது என்னவெனில், கூட்டமைப்பும் சில புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகளும் தொடர்ந்தும் தமிழ் மக்களின் கோரிக்கைகளை பலவீனப்படுத்தி வருகின்றன என்பதே அது. அதாவது ஜெனிவா தீர்மானத்தை முன் கொண்டுவரும் நாடுகளை நோக்கி கூட்டமைப்பு தமிழ் மக்களின் கோரிக்கையை வலிமையாக முன்வைக்கவில்லை என்பது அவருடைய முதலாவது குற்றச்சாட்டு. இரண்டாவது குற்றச்சாட்டு, பிரித்தானியா, ஆவுஸ்ரேலியா, கனடா ஆகிய நாடுகளை மையமாகக் கொண்டியங்கும் புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகள் சில தொடர்ந்து தத்தமது நாடுகளின் அரசாங்கங்களுடைய விருப்பங்களுக்கு ஏற்ப செயல்பட்டு வருகின்றன என்பது. அதாவது மேற்படி நாடுகள் ஜெனிவாவில் தமிழ் மக்களின் கோரிக்கைகளை தமது பூகோள அரசியல் இலக்குகளுக்காக நீர்த்துப் போகச் செய்யும் பொழுது அதுவிடயத்தில் மேற்படி புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகள் அந்தந்த நாடுகளின் அரசாங்கங்களுக்கு விசுவாசமாக கீழ்படிவாக செயல்படுகின்றன என்ற தொனிப்பட அவர் குற்றம் சாட்டுகிறார்.

பொதுவாக ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வரும் பொழுது ஜெனிவா நிலவரம் இப்படித்தான் அமைவதுண்டு. அதாவது புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளும் தாயகத்தில் உள்ள கட்சிகளும் ஜெனிவா தீர்மானத்தை குறித்து இரண்டுபட்டு நிற்கும் ஒரு நிலை. குறிப்பாக 2015 ஆம் ஆண்டு நிலைமாறு கால நீதிக்குரிய தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பொழுது தமிழ்த்தரப்பில் கூட்டமைப்பு அந்த தீர்மானத்தை ஆதரித்தது. அது நிலைமாறுகால நீதியின் பங்காளியாக மாறியது. அவ்வாறே புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் சிலவும் நிலைமாறு கால நீதியை ஏற்றுக்கொண்டன. அதே சமயம் இன்னொரு பகுதி புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளும் தாயகத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி போன்ற கட்சிகளும் நிலைமாறுகால நீதியை ஏற்றுக்கொள்ளவில்லை. அவை இனப்படுகொலைக்கு எதிரான பரிகாரநீதியை கேட்டன.

எனினும், கடந்த ஆண்டு ஜனவரி மாதம் ஐநாவுக்கு அனுப்பிய கூட்டுக் கடிதத்தில் கூட்டமைப்பு எனைய இரண்டு கட்சிகளோடு இணைந்து பொறுப்புக் கூறலை ஜெனிவாவுக்கு வெளியே கொண்டு போகவேண்டும் என்று கேட்டிருந்தது. இலங்கை அரசாங்கத்தை பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்திடம் பாரப்படுத்த வேண்டும் என்று அக்கடிதம் கேட்டிருந்தது. அகோரிக்கையில் கையெழுத்திட்ட கூட்டமைப்பு பின்னர் சீரோ டிராப்ட் வெளிவந்த பொழுது தலைகீழாகி நின்றது. இப்பொழுதும் கூட்டமைப்பு பொறுப்புக் கூறலை ஜெனீவாவுக்கு வெளியே கொண்டுபோக வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி கருக்குழு நாடுகளின் மீது அழுத்தத்தை பிரயோகிக்கவில்லை என்று கஜேந்திரன் குற்றம் சாட்டுகிறார். அது போலவே அவர் குற்றம் சாட்டும் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளும் பொறுப்பு கூறலை ஜெனிவாவுக்கு வெளியே கொண்டு போகவேண்டும் என்ற விடயத்தை வலியுறுத்துவதில்லை என்ற தொனிப்பட அவருடைய குற்றச்சாட்டு அமைகிறது.

கூட்டமைப்பின் மீதும் புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகள் சிலவற்றின் மீதும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் வளமையானவை. கடந்த 13 ஆண்டுகளாக இதுபோன்ற பல குற்றச்சாட்டுகளை அக்கட்சி கூட்டமைப்பின் மீது சுமத்தி வருகின்றது. இக்குற்றச்சாட்டுகளை தமிழில் அரசியல் விமர்சனக் கட்டுரைகளை எழுதும் பலரும் கூட்டமைப்புக்கு எதிராக முன்வைத்து வருகிறார்கள். குடிமக்கள் சமூகங்கள் மத்தியிலும் அவ்வாறான குற்றச்சாட்டுகள் உண்டு. தவிர காணாமல் போனவர்களுக்கான அமைப்புகள் உட்பட பாதிக்கப்பட்ட மக்கள் அமைப்புகளும் கூட்டமைப்பின் மீது விமர்சனங்களைத் தொடர்ச்சியாக முன்வைத்து வருகின்றன. இந்த விமர்சனங்களின் விளைவாகத்தான் கடந்த பொதுத் தேர்தலில் கூட்டமைப்பு அதன் ஆசனங்களில் ஆறை இழந்தது. அதன் ஏகபோகம் சரிந்தது.

ஆனால் அவ்வாறு இழந்த ஆறு ஆசனங்களையும் யார் பெற்றார்கள்? மூன்றே மூன்று ஆசனங்களைத்தான் மாற்று அணி பெற்றது. எனைய மூன்று ஆசனங்களும் தமிழ்த் தேசியப் பரப்புக்கு வெளியே போயின. அவ்வாறு மூன்று ஆசனங்கள் தமிழ் தேசிய பரப்புக்கு வெளியே போனதற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் கூட்டுப் பொறுப்பை ஏற்க வேண்டும். ஒரு பலமான மாற்று அணியைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற அரசியல் தரிசனம் அக்கட்சியிடம் இன்றுவரை இல்லை. எப்பொழுதும் ஏனைய கட்சிகளை குறை கூறி ஏனைய கட்சிகளில் குற்றம் கண்டுபிடித்து தங்களைப் பரிசுத்தர்களாக காட்டிக் கொள்ளும் ஒரு போக்குதான் அக்கட்சியிடம் இன்றுவரை உண்டு. அண்மையில் திலீபனின் நினைவுத்தூபி அவமதிக்கப்பட்ட போதும் அக்கட்சி தன் அரசியல் எதிரிகளைத்தான் குற்றம் சாட்டியது.

தன் உள் அரசியல் எதிரிகளை குற்றச்சாட்டுவது என்பது தேர்தல் மைய அரசியலின் ஒரு பகுதிதான். ஆனால் ஈழத்தமிழ் நோக்கு நிலையில் இருந்து பார்த்தால் அது மட்டுமே தேச நிர்மாணத்தின் பிரதான பகுதியாக அமைய முடியாது. ஈழத் தமிழர்கள் தொடர்ச்சியான இனப்படுகொலையால் நீர்த்துப்போன ஒரு மக்கள் கூட்டம். புலப்பெயற்சி, தோல்வி, கூட்டு காயங்கள், காட்டிக் கொடுப்புகள் போன்றவற்றால் தொடர்ந்தும் சிதறிப் போயிருக்கும் ஒரு மக்கள் கூட்டம். எனவே இந்த மக்கள் கூட்டத்தின் மத்தியில் தேர்தல் அரசியலை முன்னெடுக்கும் கட்சிகள் தமது அரசியல் எதிரிகளை திட்டிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. அதைவிட முக்கியமாக தாம் சரியெனக் கருதும் ஓர் அரசியல் இலக்கை நோக்கி மக்களைத் திரட்ட வேண்டும். ஒரு தேசத் திரட்சியைக் கட்டியெழுப்ப வேண்டும். அதாவது தேர்தல்மைய அரசியலை எப்படி ஒரு தேச நிர்மாணத்தின் பகுதியாக மாற்றலாம் என்று சிந்திக்க வேண்டும். ஆனால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் உட்பட கூட்டமைப்பை விமர்சிக்கும் பலரிடமும் அவ்வாறான அரசியல் தரிசனம் உண்டா? என்ற கேள்வியை கடந்த 13 ஆண்டு கால அனுபவம் கேட்க வைக்கின்றது.

கடந்த 13 ஆண்டுகளாக தமிழ் மக்களின் அரசியலானது புரோஅக்டிவ் - proactive- ஆக, அதாவது தானாக ஒன்றைக் கட்டியெழுப்பும் அரசியலாக இல்லை. அது ரியாக்டிவ் - reactive - ஆகத்தான் அதாவது பதில் வினையாற்றும் அரசியலாகத் தான் காணப்படுகிறது. அதாவது தேசத்தை நிர்மாணித்தல் என்பது எதிர் தரப்புக்கு எதிர்வினை ஆற்றும் தற்காப்பு நிலை அரசியலாகதான் மாறியிருக்கிறது. மாறாக தேசத்தை நிர்மாணிப்பதற்கான நிறுவனங்களை உருவாக்கி அதன் ஊடாக தன் உள் அரசியல் எதிரியையும் வெளி எதிரிகளையும் எப்படித் தோற்கடிக்கலாம் என்ற சிந்தனை கூட்டமைப்பிடமும் இல்லை.கூட்டமைப்பின் எதிரிகளிடமும் இல்லை.

கூட்டமைப்பின் அரசியல் தவறுகள் காரணமாகத்தான் கடந்த பொதுத் தேர்தலில் அக்கட்சி ஏகபோகத்தை இழந்தது. ஆனால் அந்த தோல்வியை தன்னுடைய முழுமையான வெற்றியாக மாற்றிக் கொள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் முடியவில்லை. எனைய தமிழ்த் தேசிய கட்சிகளாலும் முடியவில்லை. இதனால் தமிழ் வாக்குகள் மேலும் சிதறி, தமிழ் மக்களின் பேரபலம் சிதைந்தது. அதாவது தேசத் திரட்சி பலவீனமடைந்தது.

இப்பொழுதும் ஜெனிவா விவகாரத்தில் கூட்டமைப்பு செய்வது பிழை என்றால் ஏனைய கட்சிகள் அதை தோற்கடிக்க வேண்டும். அதற்கு வேண்டிய மக்கள் ஆணையை முதலில் பெற வேண்டும். அந்த மக்கள் ஆணையை பெறுவதற்கு ஒரு பலமான மாற்று அணியை கட்டி எழுப்ப வேண்டும். மக்களாணையை பெற்ற பின் பொருத்தமான வெளியுறவு கொள்கை ஒன்றை வகுத்து வெளியுறவு கட்டமைப்பு ஒன்றை உருவாக்கி அதனூடாக ஜெனிவாவையும் இந்தியாவையும் எனைய தரப்புகளையும் அணுக வேண்டும். ஆனால் அப்படியான சிந்தனைகளையோ செயற்பாடுகளையோ தமிழ் அரசியலில் மிகக் குறைவாகவே காணமுடிகிறது. ஒப்பிட்டுளவில் அதிக ஆசனங்களைப் பெற்ற கூட்டமைப்போடுதான் வெளியுலகம் பேசும்.

தன் உள் அரசியல் எதிரியைத் திட்டி தீர்ப்பதிலேயே தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் செயற்பாட்டாளர்களின் சக்தி பெருமளவுக்கு விரயம் செய்யப்படுகிறது. இது ஒரு விதத்தில் நெகட்டிவ் ஆனது. மாறாக பொசிட்டிவாக தனக்கு சரி என்று தோன்றும் ஓர் அரசியல் இலக்கை முன்வைத்து தேசத்தைக் கட்டியெழுப்ப இந்த கட்சிகளால் முடியவில்லை. இதனால்தான் கடந்த 13 ஆண்டுகளாக பொறுப்புக்கூறலை ஜெனிவாவுக்கு வெளியே கொண்டு போக முடியவில்லை. பேராசிரியர் ஜூட் லால் கூறுவது போல தமிழ் மக்கள் கடந்த 13 ஆண்டுகளாக குறிப்பிட்டுச் செல்லக்கூடிய வெற்றிகள் எதையும் பெற்ற முடியவில்லை. வேண்டுமானால் நெருப்பை அணையாமல் பாதுகாத்தோம் என்று கூறித் திருப்திப்படலாம்.

தனது உள் அரசியல் எதிரிகளைப் பற்றியே எப்பொழுதும் சிந்தித்து அவர்களுக்கு எதிரான வியூகங்களை வகுப்பதிலேயே தமிழ்ச் சக்தி வீணாகிக் கொண்டிருக்கிறது. மாறாக, ஆக்கபூர்வமான விதத்தில் பொசிட்டிவாக, புரோஅக்டிவாக, ஒரு தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு வேண்டிய வழி வரைபடத்தை தயாரிப்பதில் தமிழ்த் தரப்பு பொருத்தமான வெற்றிகளைப் பெறவில்லை.

உதாரணமாக கடந்த ஜனவரி மாதம் மூன்று கட்சிகளும் கூட்டாக ஒரு கடிதத்தை ஐநாவுக்கு அனுப்பின. இப்பொழுது கிட்டத்தட்ட 21 மாதங்கள் கழிந்து விட்டன. இந்த 21 மாதங்களிலும் தாம் ஜெனிவாவை நோக்கி முன்வைத்த கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக இக்கட்சிகள் என்னென்ன செய்திருக்கின்றன? கூட்டமைப்பு தொடர்ந்து வாக்காளர்களை ஏமாற்றுகிறது என்று சொன்னால், அவ்வாறு ஏமாற்றாத ஏனைய கட்சிகள் கடந்த 21 மாதங்களாக என்ன செய்திருக்கின்றன? கூட்டமைப்பு ஏமாற்றுகிறது என்று சொன்னால் மட்டும் போதாது. தாங்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்றும் சொல்ல வேண்டும். பொறுப்புக்கூறலை ஜெனிவாவுக்கு வெளியே கொண்டு போகும் விடயத்தில் இவர்கள் இதுவரை சாதித்தவை என்ன? மிகக் குறிப்பாக அந்த விடயத்தை நோக்கி அவர்கள் கட்டியெழுப்பி வைத்திருக்கும் கட்டமைப்புகள் எத்தனை?

பன்னாட்டு நீதிமன்றத்தை நோக்கிச் செல்லும் வழியில் கடந்த 21 மாத காலத்தில் இப்பொழுது எதுவரை முன்னேறி இருக்கிறோம் என்பதனை மூன்று கட்சிகளும் தமிழ் மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். ஜெனிவாவில் இலங்கை அரசாங்கத்தை பொறுப்புக்கூற வேண்டும் என்று கேட்கும் மேற்படி கட்சிகள் முதலில் தமது அரசியல் வாக்குறுதிகளுக்கும் அதை நம்பும் தமது மக்களுக்கும் பொறுப்பு கூறுவார்களா?

## வீணாவின் கவிக்கணை

இன்று விதைத்த
விதையின் அறுவடை,
நாளை என்பது
இயற்கையின் கணக்கு,
இன்று
விதைத்த வினையின்
பலன் இன்றே என்பது
இறைவனின் கணக்கு,
உருட்டும்
உருட்டுக்கெல்லாம்
உருளுவது மனித மூளை,
அதை நிறுத்தி நிதானமாக
கொண்டு செல்வது
இறைவனின் சக்தி,

# திருப்பூர் தனியார் காப்பகத்தில் கெட்டுப்போன உணவால் 3 குழந்தை உயிரிழப்பு : 11 சிறுவர்கள் உட்பட 12 பேருக்கு சிகிச்சை

திருப்பூரில் செயல்படும் தனியார் குழந்தைகள் காப்பகத்தில் கெட்டுப்போன உணவைச் சாப்பிட்ட 3 சிறுவர்கள் உயிரிழந்தனர். மேலும், 11 சிறுவர்கள் உட்பட 12 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். திருப்பூர் அவிநாசி சாலை திருமுருகன்பூண்டியில் ஸ்ரீவிவேகானந்த சேவாலயம் ஆதரவு ஏற்போர் குழந்தைகள் காப்பகம் செயல்பட்டு வருகிறது. இங்கு 30க்கும் மேற்பட்டோர் தங்கிப் பயின்று வருகின்றனர். செந்தில்நாதன் என்பவர் காப்பகத்தை நிர்வகித்து வருகிறார்.இந்நிலையில், பள்ளிகளுக்கு விடுமுறை காரணமாக குழந்தைகள் சிலர் உறவினர்களைப் பார்க்கச் சென்றுவிட்டனர். 15 பேர் மட்டும் காப்பகத்தில் தங்கியிருந்தனர்.கடந்த 4ம் தேதி இரவு மாணவர்கள் புளி சாதம், லட்டு, சுண்டல் சாப்பிட்டுள்ளனர். நேற்று முன்தினம் காலை இட்லி, பொங்கலும், மதியம் ரசம் சாதமும் சாப்பிட்டுள்ளனர்.

மதியத்துக்குப் பிறகு மாதேஸ்(14), ஸ்ரீகாந்த்(13) ஆகியோருக்கு வயிற்றுப்போக்கு ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து, பலரும் காய்ச்சல் மற்றும் வயிற்றுப்போக்கால் பாதிக்கப்பட்டனர்.மாணவர்கள் பாபு(10), அத்திஷ்(11) ஆகியோருக்கு கடும் வயிற்றுப்போக்கு, காய்ச்சல் ஏற்பட்டதையடுத்து, தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று, காப்பகத்துக்குத் திரும்பினர். இந்நிலையில், மீண்டும் பலருக்கு வயிற்றுப்போக்கு, காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. இதில் பாதிக்கப்பட்ட பாபு, அத்திஷ் உயிரிழந்தனர். மாதேஸ் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.




தொடர்ந்து, மாநகர காவல் ஆணையர் பிரபாகரன் தலைமையிலான போலீஸார், காப்பகத்தில் விசாரணை மேற்கொண்டனர். வயிற்றுப்போக்கால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் டி.கவுதம்(17), ஏ.மணிகண்டன் (15), எம்.பிரகாஷ்(11), கே.தரணீஷ்(11), வி.ரித்திஷ்(7), ஏ.வி.கவின்குமார் (13), ஜி.கோகந்த் (12), ஹர்சாத் (8), கே.சதீஷ்(8), ஆர்.குணா(9), எஸ்.சபரீஷ்(9) மற்றும் காப்பக காவலாளி ஜெயராமன் (63) ஆகியோர் திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களை மாவட்ட ஆட்சியர் சு.வினீத் சந்தித்து, ஆறுதல் கூறினார்.இதுகுறித்து ஆட்சியர் கூறும்போது, "இது அங்கீகாரம் பெற்ற தனியார் காப்பகம்தான். இங்கு தங்கியிருந்தவர்களில் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

காவலாளி உட்பட 12 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் 3 பேர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ளனர். உணவு நஞ்சாகி இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில், மருத்துவர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர்.பரிசோதனைகளுக்குப் பின்னர், நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுப்பது குறித்து முடிவு செய்யப்படும். மேலும், மாவட்ட குழந்தைகள் நலக் குழும அலுவலர், கோட்டாட்சியர் ஆகியோரும் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்'' என்றார். அரசு மருத்துவக் கல்லூரி குழந்தைகள் நல சிறப்பு மருத்துவர் செந்தில்குமார் கூறும்போது, ''பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு வாந்தி, வயிற்றுப்போக்கு காரணமாக, நீர்ச்சத்து குறைவாக உள்ளது. சில குழந்தைகளுக்கு காய்ச்சலும் உள்ளது. உடலில் நீர்ச்சத்தை அதிகரிக்க, உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது'' என்றார். திருப்பூர் மாநகர காவல் ஆணையர் பிரபாகரன் கூறும்போது, ''காப்பத்தில் கடந்த 5ம் தேதி இரவு உணவுக்குப் பின்னர், உடல்நலம் பாதிக்கப்பட்ட 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

மருத்துவர்கள் பரிந்துரையின்றி அனைவருக்கும் மாத்திரை வழங்கப்பட்டுள்ளது. அங்கிருந்த ரசம் சாதம், தண்ணீர் மாதிரிகள் ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளன. திருமுருகன்பூண்டி கிராம நிர்வாக அலுவலர் அளித்த புகாரின் பேரில், ஸ்ரீவிவேகானந்த சேவாலயம் அறக்கட்டளை மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.கடந்த 4ம் தேதி இரவு ஆயுத பூஜையை முன்னிட்டு, வெளியில் இருந்து வந்த சுண்டல் மற்றும் இனிப்புகள் அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளன. இதுகுறித்து துணை ஆணையர் அபினவ்குமார் தொடர்ந்து விசாரித்து வருகிறார்'' என்றார்.

# "சிவாலயத்தை கட்டிய ராஜராஜ சோழனை இந்து அல்ல என சொல்வது கண்டனத்திற்கு உரியது" : வானதி சீனிவாசன்



"ஆயிரம் ஆண்டுகளாக நிலைத்து நிற்கும் சிவாலயத்தை கட்டிய ராஜராஜ சோழனை இந்து அல்ல என்று சொல்லவும் இப்போது துணிந்திருக்கிறார்கள். இது கண்டனத்திற்குரியது'' என்று பாஜக மகளிரணி தேசிய தலைவரும், எம்எல்ஏவுமான வானதி சீனிவாசன் கூறியுள்ளார்.இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்ட அறிக்கையில், "விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவனின் மணிவிழாவில் பேசிய திரைப்பட இயக்குநர் வெற்றிமாறன்,''திருவள்ளுவருக்கு காவி உடை அணிவிப்பது, ராஜராஜ சோழனை இந்து அரசனாக்குவது என்று தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. இது சினிமாவிலும் நடக்கிறது'' என்று வன்மத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.உலகமே வியக்கும் அளவுக்கு தஞ்சையில் சிவபெருமானுக்கு மிகப்பெரிய ஆலயம் அமைத்தவர் ராஜராஜ சோழன். அவருக்கு, 'சிவபாத சேகரன்', 'சோழ நாராயணன்', 'திருமுறை கண்ட சோழன்', 'உலகளந்தான்' என்று பல பெயர்கள் உண்டு. இந்தோனேசியா, பர்மா, தாய்லாந்து, கம்போடியா என்று உலகின் பல நாடுகளில், சிவலிங்க வழிபாடு வருவதற்கு சோழ அரசர்களே காரணம். சோழ மன்னர்கள் அரசாண்ட இடங்களில் எல்லாம், சிவபெருமானுக்கு மிகப்பெரும் ஆலயத்தை அமைத்தார்கள். கம்போடியாவிலுள்ள இந்து ஆலயம் தான் உலகத்திலேயே மிகப்பெரிய இந்து ஆலயம்.அந்நிய மதங்களை இந்த மண்ணில் நிலைநிறுத்துவதற்காக, இந்த மண்ணின் மதமான இந்து மத கலாசாரத்தை, அடையாளங்களை அழிக்க, இங்கு பல நூறு ஆண்டுகளாக சதி வேலைகள் நடந்து வருகின்றன. அது இன்னமும் நிற்காமல் தொடர்கிறது என்பதன் சாட்சிதான் திரைப்பட இயக்குநர் வெற்றிமாறனின் பேச்சு.ஆயிரம் ஆண்டுகளாக நிலைத்து நிற்கும் சிவாலயத்தை கட்டிய ராஜராஜ சோழனை இந்து அல்ல என்று சொல்லவும் இப்போது துணிந்திருக்கிறார்கள். இது கண்டனத்திற்குரியது. தமிழர்கள் இந்துக்கள் இல்லை என்றால் இந்த மண்ணில் யாருமே இந்து இல்லை. பிரிவினைவாத சக்திகளை முறியடிக்க, ராஜராஜ சோழன் போன்ற சோழ, சேர, பல்லவ, பாண்டிய மன்னர்களின் வரலாற்றை நாம் ஒவ்வொருவரிடம் கொண்டு செல்ல உறுதி ஏற்போம்'' என்று அவர் கூறியுள்ளார்.

# பிரான்ஸில் அமையும் 7 அடி உயர திருவள்ளுவர் வெண்கல சிலை: புதுச்சேரியில் உருவாக்கும் சிற்பக் கலைஞர்

பிரான்ஸ் அரசு அனுமதியுடன் பாரிஸ் அருகே 7 அடி உயர திருவள்ளுர் வெண்கல சிலை அமைகிறது. இச்சிலையை குடியரசுத் தலைவர் விருது பெற்ற புதுச்சேரி சிற்பக் கலைஞர் உருவாக்கி வருகிறார். வரும் நவம்பரில் இந்தச் சிலை திறக்கப்படவுள்ளது. பிரான்ஸிலுள்ள தமிழ்க் கலாசார மன்றம் பிரான்ஸ் அரசு அனுமதி பெற்று அங்கு மகாத்மா காந்திக்கு முழு உருவ வெண்கலச் சிலையை கடந்த 2011 ல் அமைத்தது. தற்போது பிரான்ஸ் அரசு அனுமதி பெற்று பிரான்ஸ் அருகேயுள்ள செர்ஜி நகரத்திலுள்ள மைய பூங்கா வளாகத்தில் திருவள்ளுவர் சிலை நிறுவப்படவுள்ளது.இச்சிலையை குடியரசுத் தலைவர் விருது பெற்ற புதுச்சேரி சிற்பக் கலைஞர் முனுசாமி வடிவமைத்துள்ளார்.

இறுதிக்கட்ட பணி நடக்கிறது. இதுபற்றி சிற்ப கலைஞர் முனுசாமி கூறுகையில், "திருவள்ளுவர் சிலை வெண்கலத்தில் 7 அடியில் உருவாகிறது. 25



நாளில் திருவள்ளுவர் சிலை வடிவமைத்துள்ளோம். விரைவில் இறுதிக்கட்ட பணிகள் நிறைவடைந்தவுடன் விமானத்தில் பிரான்ஸ் எடுத்து சென்று நிறுவவுள்ளோம்'' என்று குறிப்பிட்டார்.

தமிழ்க் கலாசார மன்ற சிறப்பு அழைப்பாளரும் புதுச்சேரி சட்டப்பேரவை முன்னாள் தலைவருமான சிவக்கொழுந்து கூறுகையில், "பிரான்ஸ் அருகேயுள்ள செர்ஜி நகரில் வரும் நவம்பர் 11ல் திறப்பு விழா நடக்கிறது. அதையொட்டி திருவள்ளுவர் மாநாடும் நடத்துகிறோம். சிலை அனைவரையும் கவரும் வகையில் 600 கிலோ எடையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. தமிழ்க் கலாசார மன்றத்தின் மூலம் பிரான்ஸில் வாரந்தோறும் தமிழ் மொழி வகுப்புகள், பண்பாட்டு இசை, நடனப்பயிற்சி வகுப்புகளை இளையோருக்கு நடத்துகிறோம்'' என்று தெரிவித்தார்.

# இவ்வார ராசிபலன்

## 07-10-2022 வெள்ளி தொடக்கம் 13-10-2022 வியாழன் வரையும்




**மேஷம்:** பிரார்த்தனை நிறைவேறும் வாரம். சாமர்த்தியமாக செயல்படுவீர்கள். கால்நடைகளால் லாபம் உண்டு. கவலைகள் விலகும். கலைத்தொழில் லாபம் தரும். திடீர் திருப்பம் ஏற்படும். பதவி உயர்வு கிட்டும். ஆடம்பர எண்ணம் அலைமோதும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. முயற்சிகள் வெற்றியை தரும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். அதிகாரம் உயரும். பயணம் அனுகூலம் தரும். தொழில் போட்டி அதிகமாகும். புதிய கடன் உருவாகும். கணவன், மனைவி அன்யோன்யம் உண்டு. உத்தியோக உயர்வு கிட்டும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். வாகன செலவுகள் அதிகரிக்கும். பெற்றோர்களின் ஆதரவு கிட்டும். திருப்பங்கள் நிறைந்த காலம். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வீண் விரயம் தவிர்க்கவும். வியாபார விருத்தி ஏற்படும். பாக்கிகள் வசூலாகும். உறவுகளால் மதிப்பு கூடும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். வணிகத்தொழில் விரிவடையும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பல்வலி வந்து போகும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பெண்களால் பெருமை சேரும். முயற்சிகள் பலிதமாகும். உடல்சோர்வு ஏற்படும். திருஷ்டிகள் விலகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். தெளிவான முடிவுகள் உதயமாகும். பழையக் கடன் தீரும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். உத்தியோகத்தில் இடமாற்றம் உண்டு. விளையாட்டுத் துறையில் வெகுமதி கிடைக்கும். பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. மனைவியின் கோபம் அதிகரிக்கும். ஏற்றங்கள் அமையும். தோற்றப் பொலிவு கூடும். மாற்றத்தை விரும்புவீர்கள். பெருமைகள் சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ ராமர், அதிர்ஷ்ட எண்: 8,4,6,1
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: WX




**ரிஷபம்:** மகிழ்ச்சியும், வளர்ச்சியும் உருவாகும் வாரம். பெருமைகள் கூடும். வழக்குகளில் வெற்றி உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. வரவுகளால் திருப்தி உண்டு. வாழ்க்கையில் மேன்மை உண்டு. வாகனத்தால் செலவு உண்டு. மற்றவர்களால் மேன்மை உண்டு. பெற்றவர்களின் வாழ்த்து உண்டு. கடன் வாங்க நேரிடும். கல்வியில் கவனம் தேவை. குடும்ப குழப்பம் தீரும். பணப்பற்றாக்குறை தீரும். எள் தானம் செய்வதால் ஏற்றங்கள் அதிகரிக்கும். புத்துணர்வோடு செயல்படுவீர்கள். பழைய பாக்கி வசூலாகும். வணிகத்தொழில் வளம் தரும். உறவினர் வருகை உண்டு. உடல்நிலையில் கவனம் தேவை. மனைவியின் அன்பு அதிகரிக்கும். சாதகமான சூழ்நிலைகள் உருவாகும். உதவும் குணம் அதிகரிக்கும். பழையக்கடன் தீரும். புதிய நட்பு உருவாகும். பேச்சில் நிதானம் தேவை. விபரீத எண்ணம் விலகும். மனம் மகிழும். குளிர்பான தொழில் கவனம் தேவை. செயல் விவேகம் கூடும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். உணவுத்தொழில் உயர்வு தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். புதிய எண்ணங்கள் உருவாகும். முற்போக்குச் சிந்தனை வரும். வங்கி சேமிப்பு அதிகரிக்கும். சீரான வாழ்வு அமையும். சிந்தனைகள் மேலோங்கும். ஆடம்பர எண்ணங்கள் அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். செல்வாக்கு உயரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். இனிய தகவல் வந்து சேரும். உறவுகளால் மதிப்பு கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: இந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 2,6,9,1
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,D




**மிதுனம்:** நினைத்ததெல்லாம் நடக்கும் வாரம். உத்தியோக உயர்வு கிட்டும். வியாபார விருத்தி ஏற்படும். வீண் விரயம் தவிர்க்கவும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். முயற்சிகள் பலிதமாகும். கலைத்துறை முன்னேற்றம் கொடுக்கும். வசந்தம் வீடு தேடி வரும். மனைவியால் மரியாதை உயரும். புதிய நட்பு உருவாகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிரபல்ய ஆசை ஏற்படும். பிரச்சனைகள் தீரும். தொழில் வாய்ப்பு ஏற்படும். சுபச்செய்தி வரும். வாழ்த்துக்கள் கிட்டும். உறவுகளால் செலவுகள் அதிகரிக்கும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. மனநிம்மதி அதிகரிக்கும். பங்குச்சந்தையில் லாபம் அதிகரிக்கும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். உரிய நேரத்தில் உதவிகள் கிட்டும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. இனம் புரியா சந்தோஷம் மனதில் குடிகொள்ளும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். நம்பிக்கை துளிர்விடும். பழைய பாக்கிகள் வசூலாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். பிரார்த்தனை பலன் கொடுக்கும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். புதிய நாட்டம் ஏற்படும். உறவினர் வருகை உண்டு. மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. புதுமையை விரும்புவீர்கள். இடமாற்றம் நன்மை தரும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பெரியோர்களின் வாழ்த்துக் கிடைக்கும். செயல்பாட்டின் தீவிரம் கூடும். அலைச்சல் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: 8,6,5,9
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,Q




**கடகம்:** எதிரிகள் உதிரியாகும் வாரம். பழைய பகை தீரும். வீண் செலவுகள் அதிகரிக்கும். மங்களச் செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. உத்தியோகத்தில் உயர்வு உண்டு. நண்பர்கள் பாராட்டு கிட்டும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். தர்மச் சிந்தனைகள் மேலோங்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். பங்குச்சந்தையில் பணம் புரளும். பிணிகள் நீங்கும். இக்கட்டான சூழ்நிலைகள் அகலும். திருமண முயற்சி பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பொது வி'யங்களில் நாட்டம் ஏற்படும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். ஆபரணச் சேர்க்கையுண்டு. இடமாற்றம் ஏற்படும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பித்ருக்கள் சாபம் நீங்கும். பொது வி'யங்களில் ஆர்வம் கூடும். சிரமங்கள் குறையும். எண்ணங்கள் நிறைவேறும். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். அரசியல் ஆதாயம் தரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். முன்னேற்றமான தருணம். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். பதவி உயர்வு கிட்டும். திடீர் திருப்பம் ஏற்படும். கலைத்தொழில் லாபம் தரும். கடன் வாங்க நேரிடும். கண்நோய் வந்து போகும். கவலைகள் விலகும். கால்நடைகளால் லாபம் உண்டு. கலையில் ஈடுபாடு அதிகரிக்கும். தொழிலில் லாபம் கூடும். பெண்களுக்கு கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீதேவி, அதிர்ஷ்ட எண்: 1,2,4,7
அதிர்ஷ்ட நிறம்: யானை, நிறம் அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,H



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377





**சிம்மம்:** பெத்தவங்க வாழ்த்து கிடைக்கும் வாரம். புதிய சொத்து சேரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். வழக்கு முடிவுக்கு வரும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். குழப்பங்கள் அகலும். வியாபாரத்தில் கவனம் தேவை. நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். பதவி உயர்வு தடைப்படும். வர்த்தக தொழில் லாபம் தரும். மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். புதிய முயற்சியில் கவனம் தேவை. முன்கோபத்தை தவிர்க்கவும். பயணம் பலன் தரும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். புகழும், பொருளும் பெருகும். நன்மைகள் அதிகரிக்கும். விளையாட்டுத்துறையில் வெகுமதி கிடைக்கும். உத்தியோக இடமாற்றம் உண்டு. ஷேர் மார்க்கெட்டில் லாபம் அதிகரிக்கும். வழக்குகள் சாதகமாகும். வாகன மாற்றம் உண்டு. பணப்பற்றாக்குறை தீரும். குடும்ப குழப்பம் நீங்கும். கல்வியில் கவனம் தேவை. தனம் சேரும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பரப் பொருள் சேரும். உடல் சோர்வு ஏற்படும். குடும்ப மேன்மை உண்டாகும். மனைவியின் கோபம் அதிகரிக்கும். ஏற்றங்கள் அதிகரிக்கும். தோற்றப்பொலிவு கூடும். மாற்றத்தை விரும்புவீர்கள். மனக்கட்டுப்பாடு அவசியம். பணத்தட்டுப்பாடு நீங்கும். ஆக்கம் அதிகரிக்கும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வரவு திருப்தி தரும். குடும்ப கௌரவம் உயரும். குதூகலமான எண்ணம் உருவாகும். மின்சாரத்தில் கவனம் தேவை. பிரபல்யங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். வெற்றி வீடு தேடி வரும். விவேகம் கை கொடுக்கும். செல்வச்செழிப்பு உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி, அதிர்ஷ்ட எண்: 6,4,8,1
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,I




**கன்னி:** ஆடம்பர நாட்டம் அதிகரிக்கும் வாரம். பெண்களால் பெருமை சேரும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பல்வலி வந்து போகும். பணவரவு திருப்தி தரும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பயணம் தடைப்படும். வணிகத்தொழில் விரிவடையும். குடும்ப உறவு பலப்படும். பால் தானம் பாவம் போக்கும். விரயங்கள் அதிகரிக்கும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைதூர தொடர்பு லாபம் தரும். சம்பளம் எதிர்பார்த்தபடி அமையும். பொருளாதாரம் ஏற்றம் பெருகும். முகப்பொலிவு கூடும். உடல்நலம் சிறக்கும். தெம்பும், தைரியமும் கூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளிப் போடுங்கள். திருமணமாகாத மங்கையருக்கு திருமண பாக்கியம் கைகூடும். கொடுக்கல், வாங்கலில் சுமூகநிலை ஏற்படும். பாக்கிகள் வசூலாகும். மூத்தோர்கள் மனக்குறை அகலும். நினைத்ததை சாதித்துக் காட்டும் சாதனையான காலம். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். மன அமைதி கிட்டும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். திட்டமிட்ட காரியங்களில் ஒன்றிரண்டு நடந்தேறும். வெற்றிப் பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். பழைய சம்பள பாக்கிகளும் வந்து சேரும். பொருளாதாரம் உயரும். தடைகள் விலகும். நீண்ட நாளைய நோய் விலகும். புதிய தொழில் முயற்சி கைக்கூடும். நண்பர்கள் உதவி கிட்டும். சுபகாரிய நிகழ்ச்சி நடைபெறும். தனலாபம் பெருகும். ஞாபகத் திறன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. முயற்சிகளில் தாமதம் ஏற்படும். கலைஞர்களுக்கு புகழ் கூடும். சேமிப்பு வளரும். குடும்பத்தில் அமைதி நிலவும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். பணவரவு சுமாராக இருக்கும். தந்தை உடல்நலம் கவனம் தேவை. வெளியூர் பயணம் உண்டு. காரியம் வெற்றி தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சப்த கன்னிமார்கள், அதிர்ஷ்ட எண்: 9,5,3,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,F




**துலாம்:** பொன், பொருள் சேரும் வாரம். பதவி உயர்வு கிட்டும். நல்ல செய்திகள் நாடி வரும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். கூட்டுப் பிரார்த்தனை நன்மை தரும். எதிரிகளின் தொல்லை குறையும். பயணங்களால் வெகுமதி கூடும். முயற்சிகள் பலன் கொடுக்கும். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும். பெண்களுக்கு பெருமை சேரும். வாகனத்தில் கவனம் தேவை. பெண்களுக்கு அணிகலன் சேரும். மறைமுக எதிர்ப்புக்கள் குறையும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். காலை நேரத்தில் கவனம் தேவை. மனஅமைதி அதிகரிக்கும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். எண்ணங்கள் பூர்த்தியாகும். மனமகிழ்ச்சி கிட்டும். பணியாட்கள் ஆதரவுகள் பெருகும். உழைப்பிற்கான பலன் கிடைக்கும். நல்லோர்கள் வாழ்த்து அதிகரிக்கும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பக்குவமான பேச்சு பயன் தரும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கலைத்தொழிலில் கவனம் தேவை. விருந்தினர்கள் வருகை உண்டு. அர்ச்சனை செய்வதால் பிரச்சனை குறையும். விரக்திகள் மறையும். பொறுப்புக்கள் சிறப்பு சேர்க்கும். தனவரவு உண்டு. மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். குழந்தைகளால் பெருமை சேரும். பொருளாதார வளம் மேம்படும். எதிரிகள் பலம் குறையும். தேக ஆரோக்கியம் திருப்தி தரும். சகோதரியினால் அனுகூலம் உண்டு. ஆபரணச்சேர்க்கை ஏற்படும். கலைத்துறையில் திருப்பம் ஏற்படும். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. கடன்சுமை அதிகரிக்கும். எதிரிகளால் தொல்லை உண்டாகும். வரவுகள் திருப்தி தரும். விவசாயம் பலன் தரும். கவலைகள் ஒழியும். புதிய நட்பு உருவாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கருட பகவான், அதிர்ஷ்ட எண்: 4,9,8,3
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,Z




**விருச்சிகம்:** கணவன், மனைவி கௌரவம் உயரும் வாரம். பாராட்டுக்கள் கிடைக்கும். ஞாபக மறதி ஏற்படும். பேச்சில் நிதானம் தேவை. திருமண வாய்ப்பு கூடி வரும். திடீர் லாபம் தரும். மனக்குழப்பம் நீங்கும். மற்றவர்கள் உதவி கிட்டும். வியாபார லாபம் கூடும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். மகான்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. யோகமான காலம். ஷேர் மார்க்கெட்டில் லாபம் அதிகரிக்கும். கமிஷன் தொழில் லாபம் தரும். புதிய முதலீடு உண்டாகும். கற்பனை வளம் அதிகரிக்கும். கடன் தொல்லை தீரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பகையாளிகளின் நிலை மாறும். பெண்வழி பிரச்சனை முடிவுக்கு வரும். திட்டம் வெற்றி பெறும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. வினோதமான எண்ணங்கள் விலகும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. சட்டம் சாதகமாகும். நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். பட்டம் பதவி வந்து சேரும். சுபச்செய்திகள் வரும். மாலை நேரத்தில் செய்யும் பிரார்த்தனை மன அமைதியைத் தரும். பெண்களுக்கு யோகம் கூடும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. விரயங்கள் அதிகமாகும். வீண் வம்பு உருவாகும். இரும்பு தொழில் ஏற்றம் தரும். அணிகலன் சேரும். தாய்வழி உறவில் கவனம் தேவை. பாதகமான சூழ்நிலைகள் அகலும். சுபச்செலவு வரும். வினைகள் அகலும். உற்சாகம் களை கட்டும். வேலை பளு அதிகமாகும். புதிய சிந்தனை உருவாகும். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். பணியில் கண்டிப்பு அவசியம். தொழில் லாபம் பெருகும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். புதுமைகள் நிறைந்த காலம்.

வழிபட வேண்டிய தெய்வம்: வலம்புரி விநாயகர், அதிர்ஷ்ட எண்: 9,3,5,1
அதிர்ஷ்ட நிறம்: கறுப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,F

(தொடர்ச்சி 25 பக்கம்)

# இவ்வார ராசிபலன்

*(24 பக்கத் தொடர்ச்சி)*




**தனுசு:** எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும் வாரம். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். கல்வியில் மந்த நிலை காணப்படும். ஏற்றுமதி தொழில் லாம் தரும். செயலில் துணிவு கூடும். நீண்டநாள் கனவு நிறைவேறும். குடும்ப உறவு பலப்படும். தனவரவு உண்டு. உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். வேண்டாத விஷயங்கள் விலகும். சுயத்தொழிலில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக்கடன் வசூலாகும். உடல்வலி தோன்றி மறையும். விருப்பமான தொழில் அமையும். திடீர் செலவு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. பெற்றோரின் ஆசி உண்டு. பேச்சில் கம்பீரம் இருக்கும். சுப விரயம் ஏற்படும். உடல்நிலையில் கவனம் தேவை. சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். உண்மைகள் வெளிப்படும். பக்கத்து வீட்டு பகை மாறும். மெத்தனப்போக்கு மாறும். மேன்மைகள் அதிகரிக்கும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சுபச்செய்தி வரும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். திறமைகள் வெளிப்படும். முடிவுகளில் தெளிவு இருக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும். மனோதைரியம் அதிகரிக்கும். விரும்பிய பொருள் கிடைக்கும். வாகன மாற்றம் ஏற்படும். மன அமைதி சீர்குலையும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர் நலனில் அக்கறை கூடும். பணியில் கண்டிப்பு தேவை. வாக்குவாதங்கள் ஏற்படும். ஆபரணப் பொருள் களவுப்போகும். குடும்ப வளர்ச்சி கூடும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். அத்தியாவசிய செலவு அதிகரிக்கும். நட்டமில்லாத நன்மை உண்டு. திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். கடல் கடந்த பயணம் உண்டாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 2,1,4,9
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,Q




**மகரம்:** சுபச்செய்தி வரும் வாரம். சிக்கனத்தை கையாள வேண்டும். வெளியூர் பயணம் வெற்றி தரும். உத்தியோக இடமாற்றம் ஏற்படும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும். பிள்ளைகளால் நல்ல செய்தி வரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். உறவினர்கள் வருகை உண்டு. உத்தியோக உயர்வு உண்டு. கண்ணாடிப் பொருட்கள் சேதம் உண்டாகும். ஆறுதலான சூழ்நிலை அமையும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். திருப்தி பெருகும். மங்களச் செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். மனைவியால் மதிப்பு உயரும். புதிய முயற்சிகளை தள்ளி வைக்கவும். பொறாமைகள் அதிகரிக்கும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். மாற்று இன நட்புப் பெருகும். வயிற்று உபாதைகள் வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மைத் தரும். தொழில் முன்னேற்றம் மகிழ்ச்சி தரும். எதிர்மறை எண்ணம் உருவாகும். கணவன், மனைவி இடையே நல்லதொரு புரிந்துணர்வு ஏற்படும். வீடு வாங்கும் வாய்ப்பு உள்ளது. மனதில் குழப்பம் தீரும். மனதில் உள்ள பாசம் வெளிப்படும். பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். சுபிட்ஷங்கள் பெருகும். கடன் கொடுப்பவராக இருப்பீர்கள். உங்களால் நிறைய பிரச்சனைகள் அகலும். வீட்டில் சந்தோஷம் நிலவும். மனஅமைதி உண்டாகும். புகழும், பொருளும் பெருகும். கனவுத்தொல்லை உண்டு. கைப்பொருள் ஒன்று களவுப்போகும். உறவினரால் உற்சாகம் உண்டு. பூர்வீகச் சொத்து சேரும். ஜீவ ராசிகளுக்கு உணவு அளித்து பலன் பெறலாம். யோக பலம் கூடும். அலைச்சல் குறையும். குதூகலம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: திரிபுரசுந்தரி அம்மன், அதிர்ஷ்ட எண்: 7,5,4,2
அதிர்ஷ்ட நிறம்: பழுப்பு நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,J




**கும்பம்:** செல்வாக்கு பெருகும் வாரம். குடும்ப ஒற்றுமை கூடும். சுபச்செய்தி கூடி வரும். தொழில் வளர்ச்சி கூடும். குடும்ப சந்தோஷம் அதிகரிக்கும். செயல்திறமை வெளிப்படும். விவசாயம் லாபம் தரும். விவாத முயற்சி வெற்றி தரும். உதவிகள் கிடைக்கும். நிதி நிலைமை சீராகும். விருந்தினர் வருகை உண்டு. குழந்தைகளால் அல்லல் ஏற்படும். புண்ணிய ஸ்தல பயணம் ஏற்படும். மனதில் உற்சாகம் கூடும். ஆயுள் விருத்தி அதிகரிக்கும். வீண் வம்பு விலகும். குடும்ப சண்டைகள் முற்றிலும் அகன்றுவிடும். செயல்களில் கவனம் தேவை. வியாபாரத்தில் நன்மை உண்டு. மருத்துவச் செலவு குறையும். மனோ பயம் நீங்கும். மனை வாங்கும் யோகம் உண்டு. நோயிலிருந்து பூரண குணமடைவீர்கள். குடும்ப சேமிப்பு உயரும். இனிய தகவல்கள் வந்து சேரும். பழைய நண்பர்கள் சந்திப்புக் கிட்டும். தனவரவு பெருகும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். தன்னம்பிக்கை அதிகமாகும். சிறிய இடையூறு ஏற்படும். வாகன அபிவிருத்தி உண்டு. எண்ணிய காரியம் கைக்கூடும். இன்னல்கள் அகலும். தோல்விகள் விலகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். பிரயாணம் ஏற்படும். உணவு விடுதி லாபம் தரும். புதிய வாய்ப்பு தேடி வரும். அரசு வழி ஆதாயம் உண்டு. அரசியலில் புகழ் கூடும். மாணவர்கள் பாராட்டுப் பெறுவார்கள். பகைவர் பணிந்து நிற்பர். பொறுப்புக்கள் கூடும். பொருளாதாரம் சிறப்பு தரும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். முடிவுகள் சாதகமாகும். உறவுகளால் நன்மை உண்டு. காதலில் மோதல் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். விருந்தினர் வருகையுண்டு. உத்யோக உயர்வு உண்டு. பாராட்டுக்கள் அதிகமாகும். வெற்றிகள் குவியும். சிறிய இடையூறு ஏற்படும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். மற்றவர்களால் பாராட்டப்படுவீர்கள். உடல்நலம் சீராகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பொன்னியம்மன், அதிர்ஷ்ட எண்: 1,5,4,9
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,I




**மீனம்:** பெருமைகள் சேரும் வாரம். பொறுப்புக்கள் கூடும். சிறப்புக்கள் சேரும். எதிர்ப்புக்கள் அடங்கும். பிரார்த்தனை நிறைவேறும். பித்தளைத் தொழில் லாபம் தரும். தோல்விகள் விலகும். கட்டிடத் தொழில் லாபம் தரும். நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். புதிய பதவிகள் கிட்டும். பணியில் உயர்வு உண்டு. இடமாற்றம் நன்மை தரும். பொருள் வரவு திருப்தி தரும். இயந்திர தொழிலால் லாபம் உண்டு. குடும்பம் மேன்மை தரும். ஆரோக்கியம் சீராகும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும். நல்லோர்கள் நட்பு கிட்டும். வெளியூர் பயணம் ஏற்படும். பழைய கடன் வசூலாகும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். புண்ணிய ஸ்தல பயணம் உண்டு. உடன் பிறந்தவரால் ஆதாயம் உண்டு. கூட்டுத்தொழிலில் மோசடி ஏற்படும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் கூடும். தனவரவு உண்டு. மறைமுக எதிர்ப்பு அதிகமாகும். பதவி உயர்வு கிடைக்கும். தாய்வழி உறவால் நன்மை உண்டு. புகழ்ச்சி அதிகரிக்கும். நோய் நொடிகள் அகலும். சேய் நலம் கூடும். பிரச்சனைகள் குறையும். காதல் எண்ணம் நிறைவேறும். கலை ஆர்வம் கூடும். நிதி நிலைமை திருப்தி தரும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். தொல்லைகள் ஒழியும். போட்டிகள் குறையும். விடாமுயற்சி அவசியம். சுபச்செலவுகள் அதிகரிக்கும். வழக்கு சாதகமாகும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். காரியங்களில் வெற்றிக் காண்பீர்கள். ஆலோசனை பலன் தரும். விவாக முயற்சி வெற்றி தரும். பெண்களின் கௌரவம் உயரும். வேற்று மனிதரால் லாபம் அதிகரிக்கும். வேலை வாய்ப்புக் கூடும். பாதிப்புக்கள் அகலும். தடுமாற்றம் ஏற்படும். வருத்தங்கள் மறையும். தொழில் மேன்மை தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குலசை முத்தாரம்மன், அதிர்ஷ்ட எண்: 4,3,1,9
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,K



# அன்பின் தொனி - 665

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**படைப்புகளை வணங்காதே** - Worship not the Creations

**உன்னை படைத்தவரை வணங்கு** - Worship your Creator

**19. பொய்யான தேவர்களின் விக்கிரகங்கள் நிபேகாஸ், தர்தாக், அத்ரமலேக்கு** - Nibhaz / Tartak

ஆவியர் நிபேகாசையும் தர்தாக்கையும் உண்டாக்கினார்கள், செப்பர்வியர் செப்பர்வாயிமின் தேவர்களாகிய அத்ரமலேக்குக்கும் அன்னமலேக்குக்கும் தங்கள் பிள்ளைகளை அக்கினியில் தகனித்து வந்தார்கள். **- 2 ராஜாக்கள் 17: 31**

**20. ரிம்மோன்** - Rimmon

ஒரு காரியத்தையே கர்த்தர் உமது அடியேனுக்கு மன்னிப்பாராக, என் ஆண்டவன் பணிந்துகொள்ள ரிம்மோன் கோவிலுக்குள் பிரவேசிக்கும்போது, நான் அவருக்குக் கைலாகு கொடுத்து ரிம்மோன் கோவிலிலே பணியவேண்டியதாகும், இப்படி ரிம்மோன் கோவிலில் நான் பணியவேண்டிய இந்தக் காரியத்தைக் கர்த்தர் உமது அடியேனுக்கு மன்னிப்பாராக என்றான். **- 2 ராஜாக்கள் 5: 18**

**21. சித்திரங்கள்** - Pictures

நான் உள்ளே போய்ப் பார்த்தபோது, இதோ, சகலவித ஊரும் பிராணிகளும் அருவருப்பான மிருகங்களுமாகிய இவைகளின் சுரூபங்களும், இஸ்ரவேல் வம்சத்தாருடைய நரகலான சகல விக்கிரகங்களும் சுவரில் சுற்றிலும் சித்திரந்தீரப் பட்டிருந்தன. இஸ்ரவேல் வம்சத்தாரின் மூப்பரில் எழுபதுபேரும், அவர்களின் நடுவிலே சாப்பானுடைய குமாரனாகிய யசனியாவும், அவனவன் தன்தன் கையிலே தன்தன் தூபகலசத்தைப் பிடித்துக்கொண்டு, அவைகளுக்கு முன்பாக நின்றார்கள், தூபவர்க்கத்தினால் மிகுந்த புகை எழும்பிற்று. அப்பொழுது அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, இஸ்ரவேல் வம்சத்தாரின் மூப்பர்கள் அந்தகாரத்திலே அவரவர் தங்கள் விக்கிரகங்களின் சித்திர விநோத அறைகளில் செய்கிறதை நீ கண்டாயா? கர்த்தர் எங்களைப் பார்க்கிறதில்லை, கர்த்தர் தேசத்தைக் கைவிட்டார் என்று சொல்லுகி றார்களே என்றார். **- எசேகியா 8: 10-12**

**22. ரெம்பான்** - Remphan

பணிந்துகொள்ளும்படி நீங்கள் உண்டாக்கின சொரூபங்களாகிய மோளோகினுடைய கூடாரத்தையும், உங்கள் தேவனாகிய ரெம்பான் என்னும் நட்சத்திர சொரூபத்தையும் சுமந்தீர்களே, ஆகையால் உங்களைப் பாபிலோனுக்கு அப்புறத்திலே குடிபோகப்பண்ணுவேன் என்றும், தீர்க்கதரிசிகளின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறதே. **- அப்போஸ்தலர் 7: 43 23**

**23. யூப்பித்தர், மெர்க்கூரி** - Jupiter, Mercury

பவுல் செய்ததை ஜனங்கள் கண்டு, தேவர்கள் மனுஷரூபமெடுத்து நம்மிடத்தில் இறங்கிவந்திருக்கிறார்கள் என்று லிக்க வோனியா பாஷையிலே சத்தமிட்டுச் சொல்லி, பர்னபாவை யூப்பித்தர் என்றும், பவுல் பிரசங்கத்தை நடத்தினவனான படியினால் அவனை மெர்க்கூரி என்றும் சொன்னார்கள். அல்லாமலும் பட்டணத்துக்கு முன்னே இருந்த யூப்பித்தருடைய கோவில் பூஜாசாரி எருதுகளையும் பூமாலைகளையும் வாசலண்டையிலே கொண்டுவந்து, ஜனங்களோடேகூட அவர்களுக்குப் பலியிட மனதாயிருந்தான். **- அப்போஸ்தலர் 14: 11-13**

**24. அறியப்படாததேவன்** - Unkown God

அப்பொழுது பவுல் மார்ஸ் மேடையின் நடுவிலே நின்று: அத்தேனரே, எந்த விஷயத்திலும் நீங்கள் மிகுந்த தேவதாபக் தியுள்ளவர்களென்று காண்கிறேன். எப்படியென்றால், நான் சுற்றித்திரிந்து, உங்கள் ஆராதனைக்குரியவைகளைக் கவனித்துப் பார்த்தபொழுது, அறியப்படாததேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன், நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன். **- அப்போஸ்தலர் 17: 22-23**

**25. தியானாள்** - Diana (God of Greece)

எப்படியென்றால், தெமேத்திரியு என்னும் பேர்கொண்ட ஒரு தட்டான் தியானாளின் கோவிலைப்போல் வெள்ளியினால் சிறிய கோவில்களைச் செய்து, தொளிலாளிகளுக்கு மிகுந்த ஆதாயம் வருவித்துக்கொண்டிருந்தான். இவர்களையும் இப்படிப்பட்ட தொழில்செய்கிற மற்ற வேலையாட்களையும் அவன் கூடிவரச்செய்து: மனுஷர்களே, இந்தத் தொழிலினால் நமக்கு நல்ல பிழைப்பு உண்டாயிருக்கிறதென்று அறிவீர்கள். **- அப்போஸ்தலர் 19: 24-25**

**26. தாகோன்** - Dagon

பெலிஸ்தர் தேவனுடைய பெட்டியைப் பிடித்து, தாகோனின் கோவிலிலே கொண்டுவந்து, தாகோனண்டையிலே வைத்தார்கள். அஸ்தோத் ஊரார் மறுநாள் காலமே எழுந்திருந்து வந்தபோது, இதோ, தாகோன் கர்த்தருடைய பெட்டிக்கு முன் பாகத் தரையிலே முகங்குப்புற விழுந்து கிடந்தது, அப்பொழுது அவர்கள் தாகோனை எடுத்து, அதை அதின் ஸ்தானத்திலே திரும்பவும் நிறுத்தினார்கள். அவர்கள் மறுநாள் காலமே எழுந்திருந்து வந்தபோது, இதோ, தாகோன் கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாகத் தரையிலே முகங்குப்புற விழுந்து கிடந்ததுமல்லாமல், தாகோனின் தலையும் அதின் இரண்டு கைகளும் வாசற் படியின்மேல் உடைபட்டுக் கிடந்தது, தாகோனுக்கு உடல்மாத்திரம் மீதியாயிருந்தது. ஆதலால் இந்நாள்வரைக்கும் தாகோனின் பூஜாசாரிகளும் தாகோனின் கோவிலுக்குள் பிரவேசிக்கிற யாவரும் அஸ்தோத்திலிருக்கிற தாகோனுடைய வாசற்படியை மிதிக்கிறதில்லை. *- 1 சாமுவேல் 5: 1-5*

**27. மிருகங்களின் உருவம்** - Image of Beasts

சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பிவரக் கண்டேன், அதற்கு ஏழு தலைகளும் பத்துக் கொம்புகளும் இருந்தன, அதின் கொம்புகளின்மேல் பத்து முடிகளும், அதின் தலைகளின்மேல் தூஷணமான நாமமும் இருந்தன. பூமியிலுள்ள யாவரும் அந்த மிருகத்தைப் பின்பற்றி, அந்த மிருகத்தை வணங்கினார்கள். **- வெளிப்படுத்தல் 13: 1-4**

**தொடரும்...**




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

CRC CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700, Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# மரண அறிவித்தல்

பிறப்பு: 07-08-1925
இறப்பு: 30-09-2022

**யாழ். உடையார் ஒழுங்கை கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி தெற்கு, பிரித்தானியா London ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா மாணிக்கம் நடராஜா அவர்கள் 30-09-2022 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.**



**டாக்டர். பொன்னையா மாணிக்கம் நடராஜா**

**இளைப்பாறிய வைத்தியர் (கொக்குவில் கிழக்கு)**

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம்-நாகம்மா தம்பதிகளின் ஆசைப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான குமாரவேலு-தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும்,

காலஞ்சென்ற இரத்தினம்மா அவர்களின் அன்புக் கணவரும்,

பிறேமறஞ்சனி (லண்டன்), சக்திரூபன் (லண்டன், கனடா), காந்தரூபன் (டென்மார்க்), மதனரூபன் (லண்டன்), றஜினி (லண்டன், ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற செல்வகுமார் மற்றும் சுமதி, ரஜினி, ஜெயந்தி, பாலானந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும்,

காலஞ்சென்ற மணிமேகலா தேவி (கந்தர்மடம்) அவர்களின் அன்புச் சகோதரரும்,

காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி (கொக்குவில்), சின்னத்துரை, சுப்பிரமணியம், கனகம்மா (கோண்டாவில்) மற்றும் கந்தையா, செல்லத்துரை, இராசய்யா ஆகியோரின் அன்பு மருமகனும்,

காலஞ்சென்றவர்களான கோண்டாவிலைச் சேர்ந்த மூத்த-தம்பி கந்தையா, கொக்குவிலைச் சேர்ந்த இராசம்மா, சின்னம்மா, அன்னமுத்து, பாக்கியம், ஆச்சிமுத்து, ஆச்சிப்பிள்ளை ஆகியோரின் அன்பு பெறாமகனும்,

நிஷாந்தி, திலீபன், பிரஷாந்த்-சஜீத்தா, தனோஜன், பிறேமச்செல்வன், ஜனனி-உமாசங்கர், நிரோஷன், கஸ்தூரி, திவானி, கரிசன், திவ்வியன், லக்சன் ஆகியோரின் ஆசைப் பேரனும்,

மதுஷா, புவிதன், ஹம்சா, லக்ஷா, ஹாசினி, ஜஷ்ணவி, லதூஷன் ஆகியோரின் ஆசைப் பூட்டனும்,

காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், ஆறுமுகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும்,

அரவிந்தன் (அமெரிக்கா) அவர்களின் தாய் மாமாவும், தேவராசா, மங்கையர்திலகம், காலஞ்சென்றவர்களான ஜெகதீஸ்வரன், வசந்தகுமாரி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் ஆவார்.

***அன்னாரின் இறுதிக்கிரியை 06-10-2022 வியாழக்கிழமை பி.ப 1:00 மணி தொடக்கம் 3:00 மணி வரை** Hendon Cemetery & Crematorium (Holders Hill Rd, London NW7 1NB, UK) **இல் நடைபெற்று, பின்னர் பி.ப 3:00 மணி அதே மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.***

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு:
பிறேமறஞ்சினி - மகள்: +442086171490
சக்திரூபன் - மகன்: +447448143758
காந்தரூபன் - மகன்: +4530239993
மதனரூபன் - மகன்: +447865076126


# Carefirst Family Health Team




## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com



மொன்றியல் நகரில்
உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழ் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524



# நாளை சனிக்கிழமை மொன்றியாலில் இடம்பெறும் உமையாழினி உதயகுமார் அபிஷனா கஜரூபன் ஆகியோரின் வாய்ப்பாட்டு அரங்கேற்றம்



மொன்றியால் மதுரகான மன்றம் இசைக் கல்லூரி ஸ்தாபகர் ஸ்ரீமதி செல்வமலர் மதுரநாயகம் அவர்களின் புதல்வியும் சிரேஸ்ட மாணவியுமான செல்வி நயனி மதுரநாயகம் அவர்களின் மாணவிகளான இசைச் செல்விகள் உமையாழினி உதயகுமார்.. அபிஷனா கஜரூபன் ஆகியோரின் வாய்ப்பாட்டு அரங்கேற்றம் எதிர்வரும் 08-10-2022 சனிக்கிழமை மொன்றியால் நகரில் **College Ahuntsic 9155 Rue Street. Hubert, Montreal** கல்லூரி மண்டபத்தில் மாலை 5.30 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

மேற்படி இசைச் செல்விகளின் இனிய பெற்றோரான முறையே திரு.திருமதி உதயகுமார்-கோமேஸ்வரி தம்பதி மற்றும் திரு. திருமதி கஜரூபன்- பிரசாந்தி தம்பதி ஆகியோருக்கும் அவர்களது குரு மற்றும் குருவினது குரு ஆகியோருக்கும் இசைச் செல்விகள் உமையாழினி- அபிஷனா ஆகியோருக்கும் கனடா உதயன் ஆசிரிய பீடம் தனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது.




# ஸ்காபுறோவில் நடைபெற்ற GOLDEN SUPER SINGER 2022 இசைப்போட்டியில் வெற்றியீட்டிய மூன்று பாடகர்கள்

கடந்த செப்படம் மாதம் 23ம் திகதி நடைபெற்ற திருமதி இந்திராணி நாகேந்திரம் அவர்களின் "சந்தியாராகம்" குழுவினர் நடத்திய இசைப்போட்டி ஒன்றாரியோ தமிழிசைக் கலாமன்றத்தின் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. சந்தியா ராகம்- 4 என்னும் தொடரின் இறுதிப் போட்டியில் ஐந்து போட்டியாளர்கள் பங்குபற்றினார்கள். அவர்களின் போது முதல் 3 இடங்களை பின்வரும் பாடகர்கள் தட்டிக் கொண்டார்கள்.
1ம் இடம் திரு பொபி விஜேய் . 2ம் இடம் திரு சுந்தரம் செல்வரட்ணம் மற்றும் 3ம் இடம். திரு கதிர்காமநாதன் ஆறுமுகம் என **Singers from Tamil Seniors** மூவர் கேடயங்கள் மற்றும் அன்பளிப்புப் பொருட்கள் ஆகியவற்றை பரிசுப் பொருட்களாகக் பெற்றுக் கொண்டார்கள்.

## Canadian Tamil Chamber of Commerce hosted a 'Meet and Greet' event at their Head Quarters in Markham

# கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனம் நடத்திய 'Meet and Greet' தலைமைச் செயலகத்தில் சிறப்பாக நடைபெற்றது

அண்மையில். கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனம் தனது அங்கத்தவர்களை அழைத்து நடத்திய **'Meet and Greet'** அவர்களது தலைமைச் செயலகத்தில் சிறப்பாக நடைபெற்றது. வார இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமை அந்த சந்திப்பு நிகழ்வில் சம்மேளனத்தின் தற்போதைய தலைவர் திரு தேவதாஸ் மற்றும் உபு தலைவர் அரி அரன் மற்றும் முக்கிய பதவிகள் வகிக்கும் அங்கத்தவர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் ஆர்வத்துடன் பங்கெடுத்தனர்.
உள்ளே வர்த்தக சம்மேளனத்தின் கலையரங்கத்தில் கரயோக்கி கருவியைப் பயன்படுத்தி இனிமையாக பாடல்களை பாடக பாடகிகள் பாடி அங்கு கலந்து கொண்டவர்களை மகிழ்வித்தார்கள். உணவும் பரிமாறப்பெற்றது.







# திலீபன் நினைவு தினத்தை முன்னிட்டு கனடிய உணவு வங்கி ஒன்றுக்கு உணவுப் பொருட்களை சேகரித்து வழங்கிய நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்

அண்மையில் உலகெங்கும் உள்ள தமிழ் மக்களால் அனுஷ்டிக்கப்பெற்ற "தியாக தீபம்" திலீபன் அவர்களின் நினைவு தினம் உலகின் மூலை முடுக்கெல்லாம் நினைவு கூரப்பட்டது.
அதனை முன்னிட்டு கனடாவில் இயங்கிவரும் உணவு வங்கி ஒன்றுக்கு உலர் உணவுப் பொருட்களை சேகரித்து வழங்கிட தீர்மானித்த நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் கனடிய அங்கத்தவர்கள் சிலர் இந்த முயற்சியில் தீவிரமாக இயங்கினர்.
குறிப்பாக கனடாவிலிருந்து நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களில் சிலரான திருவாளர்கள் நிமால் விநாயகமூர்த்தி. மரியாம்பிள்ளை மரியராசா மற்றும் நவனேசன் ஆகியோர் உணவு வங்கியின் பிரதிநிதியிடம் தமிழ் மக்கள் மத்தியிலிருந்து சேகரிக்கப்பெற்ற உலர் உணவுப் பொருட்களை மகிழ்ச்சியுடன் கையளிப்பதைக் காணலாம்.
(படங்கள்: சத்தியன்)

புலம்பெயர் உறவுகளே! தாயகம் செல்லுகையில் இங்கு தங்கிப் பாருங்கள்..
தமிழர் நிர்வாகத்தில் இயங்கும் தரமான நட்சத்திர விடுதி
MaRadha HOTEL
COLOMBO - SRI LANKA
SALES@MARADHA.LK
+94112550136